


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B-64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிருற்று

# 2

அருட்பணியாளர் மா. றேஜிஸ் இராசநாயகம்

வெளியீடு:
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சேற்றலாம்:
அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்
குருமுதல்வர்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



அருட்சகோ.சீ.அ.பிரான்சீஸ் SSJ, B.A
தென்னங்கீற்றின் அனுமதியுடன்
பொழுது புலரும்
கிளாலியின் முதல் துறவி!
துறவிக்கே உரிய
தூய்மையும்
அடக்கமும்
பணியார்வத்தின்பால்
ஆத்ம ஈடுபாடும் கொண்டவர்.
கல்லூரி அதிபராய்
மட்டுநகர் கத்தோலிக்க
அச்சக முகாமையாளராய்
மாகாண முதல்வராய்
தன் வரலாற்றுத் தடங்களை பதித்துக்
கொண்டவர்.
யாழ்ப்பாணம், மலைநாடு,
மட்டுநகர் தளங்களில்
பாதம் பட்டு பணி செய்தவர் -
அதனால்
"பிரான்சிஸ் பிறதர்"
என்ற சொல்
இன்னும் ஓவியமாய்
கிளாலி மக்கள் மனங்களில்
நின்று நிலைப்பதில்
ஆச்சரியமில்லை.
என்னுள் எழுந்த
இறை தேடல்
வேரடி மண்ணுக்கு
ஒரு கர்த்தாவும்
அவரே ஆதலால்
இத்துறவிக்கு இந்நூல்
என்னால் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்பு விபரம்

| | | |
|---|---|---|
| நூல் | : | உயிரூற்று 2 |
| ஆக்கம் | : | அருட்பணியாளர் மார்க்கு றேஜிஸ் இராசநாயகம் |
| முதற்பதிப்பு | : | 16 மே 2011 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | ஆயர் இல்லம்<br>யாழ்ப்பாணம் |
| விலை | : | 150/= |
| அச்சுப் பதிப்பு | : | அன்னை அச்சகம்<br>யாழ்ப்பாணம். |

| | | |
|---|---|---|
| Title | : | Uyirootu 2 |
| Author | : | Rev. Fr. Marku Regis Rajanayagam |
| First Publication | : | 16th May 2011 |
| Copyright | : | Author |
| Printing | : | Annai Press, Jaffna |
| ISBN | : | 978 - 955 - 0284 - 06 - 1 |
| Publishers | : | Bishop's House, Jaffna. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

நமது மண்ணின் சமகால நிகழ்வுகளையும், அவற்றினூடே எழுந்திருக்கும் மனித அவலங்களையும் நோக்கும் போது, மனிதம் நெறிகெட்டுப் போய், வாழ்வியல் முறைமைகள் திசைமாறி - தடுமாறிப் போயிருப்பது தெளிவாகப் புரியும்.

இதற்கான அடிப்படைக் காரணம், இன்றைய நமது மக்களிடையே அருகிப் போய் விட்ட ஆன்மீக உணர்வும் - வற்றிப் போய்விட்ட மறையறிவும் இறையுணர்வும் என்றே கூற வேண்டும். மனித மனங்களிலிருந்து இவை புறந்தள்ளப்பட, அவ்விடத்தை சமூக அநீதியும், பாவமும், சாபமும் ஊற்றெடுத்து நிரப்பி விடுகின்றன.

இந்நிலையை மாற்றி, மக்கள் மனங்களிலே மனிதமும் புனிதமும் ஊற்றெடுக்கச் செய்யவேண்டுமெனின், ஆன்மீக - இறையியல் உணர்வுகள் மறு ஊட்டம் செய்யப்பட வேண்டும். அதற்கான சிறந்த - உகந்த வழிகளில் ஒன்று மக்கள் மனங்களில் ஊடுருவி - அநீதி, பாவ, சாப வழிகளை உடைத்தெறியக்கூடிய மறையுரைகள் என்றால் அது மிகையாகாது. அந்த மறையுரைகள் இறைவார்த்தையின் அடித்தளத்திலிருந்து ஊற்றெடுத்து, மறைவார்த்தைகளாக மக்கள் மனங்களிலே உயிரூற்றாக விழுந்து, தெளிந்த நீரோடையாய் பரிணமிக்க வேண்டும்.

இவ்வாறு ஆன்மீகம், இறையியல், மறையியல் உணர்வுகளின் ஊற்றாக அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம் அடிகளாரின் மறையுரைகள் மக்கள் மனங்களைத் தொட்டு வருவதைப் பலரும் மனந்திறந்து பாராட்டுவதை நான் அறிவேன்.

இன்று அவரது மறையுரைகள் "உயிரூற்று" என்னும் பெயரில் 3 பாகங்களாக வெளிவருவது இரட்டிப்புப் பயன்பாடு மிக்க ஒன்றாகவே கருதப்பட வேண்டும். அவரது இப்பணி சிறக்கவும் தொடரவும் மனிதத்தைப் புனிதப்படுத்தவும் இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

† இ. தோமஸ் சவுந்தரநாயகம்
பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
யாழ் ஆயர்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்
16.05.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

1972ம் ஆண்டு எம்மில் 16 பேர் திருச்சி புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் தியாக்கோன்களாக திருப்பொழிவு செய்யப்பட்ட பின் எமது அந்நாள் அதிபர் அருட்பணி மரிய லூயிஸ் சே.ச எம்மை அழைத்து "நீங்கள் திருச்சி வானொலிக்கு நிகழ்ச்சி ஒன்றை வழங்குவதற்கு எவ்வளவு நேரம் ஒதுக்கி, முயற்சி எடுத்து தயார் செய்கிறீர்கள். (காலத்துக் காலம் குருத்துவக் கல்லூரியால் திருச்சி வானொலியில் நிகழ்ச்சிகள் வழங்குவதுண்டு) ஒரு வானொலி நிகழ்சிசியைக் கேட்கும் அதே தொகை மக்கள், ஞாயிறு மறையுரையைக் கேட்கிறார்கள் என்பதை உணர்ந்து உங்கள் மறையுரையைத் தயாரியுங்கள்" என்று கூறினார்.

அன்று தொடக்கம் நான் ஞாயிறு வாசகங்களை திங்கட்கிழமையே வாசித்து அதற்கான உரைகளையும் வாசித்தபின் அவ்வார நிகழ்வுகளை மனதில் பதிய விட்டு அவற்றினூடாக இறைவன் கூறும் செய்திகளைக் குறித்துக் கொள்வேன். 1991ம் ஆண்டு தொடக்கம் இந்நாள்வரை திங்கட்கிழமை அருட்கலாநிதி யோ.இ.ஜெயசீலன் அடிகளாரோடு சேர்ந்து விவிலியப் பகிர்வை எமது சூழமைவுக்கேற்ப செய்து தியானித்தவற்றை எழுதிக் கொள்வேன்.

எழுதியவற்றோடு சனிக்கிழமை கணிசமான நேரம் நற்கருணை ஆண்டவர்முன் செலவிடுவதுண்டு. நற்கருணைநாதர் முன் நேரம் செலவிட்டதன் விளைவை மறையுரை நேரத்திலும் அதன் பின்னரும் உணரமுடிகிறது. இவ்வாறு நான் பெற்ற அனுபவங்களையே இந்நூலில் மறையுரைகளாக வடித்துள்ளேன்.

மறையுரை ஆற்றுபவர் தான் பெற்ற ஒரு இறை அனுபவத்திற்கு சான்று கூறுபவராக இருக்க வேண்டும். திருத்தூதர்கள் நேருக்கு நேராக கிறிஸ்துவைக் கண்ட அனுபவத்திற்குச் சான்று பகர்ந்தார்கள். அவர்களது போதகப் பணியை நிறைவேற்றுபவர்களும் கடவுளின் வார்த்தையான விவிலியத்தில் அவரைச் சந்தித்தாலன்றி பயனுள்ள மறையுரையை ஆற்ற இயலாது. எனவே, மறையுரை ஆற்றுபவர்கள் நற்கருணை ஆண்டவர்முன் பயனுள்ள விதமாக நேரத்தைச் செலவிடும் போது தான் நாம் ஆற்றும் மறையுரைகள் இறைவார்த்தையாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயங்களைத் தொட்டு ஊடுருவிச் செல்லும்; இதயங்களை மாற்றும். உலகப் புகழ்பெற்ற அன்னை திரேசாவினுடைய வாழ்வின் இரகசியம் இதுதான். பிரபல எழுத்தாளரான அருட்பணி ஹென்றி நுவேன் என்பவர் தனது மனப் போராட்டங்களின் மத்தியில் அன்னை திரேசாவின் ஆலோசனையை நாடினார். அதற்கு அன்னை திரேசா கூறிய அறிவுரை "ஒவ்வொரு நாளும் நற்கருணை ஆண்டவர்முன் ஒரு மணி நேரம் செலவிடும்" என்பதாகும். 90க்கு மேற்பட்ட நூல்களை எழுதி வானொலி, தொலைக்காட்சி மூலம் லட்சத்திற்கும் அதிகமான மக்களோடு தொடர்புகொண்ட ஆயர் புல்ரன் ஷீன் என்பவர் தனது 60 வருட குருத்துவ வாழ்வில் தினமும் ஒரு மணி நேரம் நற்கருணை ஆண்டவர்முன் செலவிடுவதே தன் வாழ்வின் வெற்றிக்குக் காரணம் என்று கூறுவார். எனவே, நாம்...? திருத்தூதர்களின் மறையுரைகள் அவர்கள் தம் வாழ்வில் கண்டுணர்ந்த ஒரு அனுபவத்திற்கு சாட்சி கூறுவனவாக அமைந்திருந்தன. இயேசுவின் உயிர்ப்பே திருத்தூதர்கள் கண்டுணர்ந்த அந்த மாபெரும் அனுபவமாகும். "இந்த இயேசுவைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார்; இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்சிகள்" (தி.ப.2:32). எனவே, மறையுரையின் ஒரு முக்கிய கூறு, கண்டுணர்ந்த ஒரு உண்மைக்கு அல்லது மத அனுபவத்திற்கு சாட்சி பகர்வதாகும்.

இயேசுவின் இறப்பையும் உயிர்ப்பையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்த நற்செய்தி நூல்கள் எழுதப்பட்ட பின் அந் நூல்களில் தாம் கண்டுணர்ந்த உண்மைகளை மறையுரைகளாக தர முயன்றனர் திருச்சபையின் முதுபெரும் தந்தையர். இவ்வாறாக இவர்களின் மறையுரைகள் எல்லாம் விவிலிய விளக்கமாகவே அமைந்தன. பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் மறையுரைகளில் விவிலியத்தை விளக்கிச்சொல்லும் நிலை மாறி, விவிலிய உண்மைகளுக்கு இலக்கணம் வகுப்பதும் அவற்றைப் பிரித்து வகைப்படுத்துவதும் அவற்றுக்கு நிரூபணம் தேடுவதுமே மறையுரையின் நோக்கமாக உருவானது. அத்தோடு விவிலியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகளை அறிவிப்பது என்ற நிலை மாறி மக்களின் தவறுகளை கண்டிக்கும் முழு அறிவுரைகளாக மறையுரைகள் மாறின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கண்ட நிலை இரண்டாம் வத்திக்கான் சங்கம் வரை பரவலாக நீடித்தது. மறைநூலுக்கும் மறையுரைக்கும் இடையே ஏற்பட்ட இடைவெளியை மூடி, மறையுரை மறைநூலின் விளக்கமே, அந்த விளக்கத்தின் நடைமுறைப் போதகமே, மக்களின் இன்றைய தேவைக்கு ஏற்றது என்ற கருத்தை எடுத்துரைத்த பெருமை இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தையே சாரும். இறைவாக்கு அறிவிக்கப்பட்டதும் அதற்கு விளக்கமும் விமர்சனமும் தேவை என்ற உணர்வு அடிப்படையான ஓர் உண்மை. ஏனெனில், மறைநூலில் எழுதப்பட்டவையெதெல்லாம் நமது போதனைக்காகவே எழுதப்பட்டன (2 திமொ 3:16). வாசிப்பும் விளக்கமும் போதனையின் இன்றியமையாத இயல்புக் கூறுகள்.

விவிலிய வாசிப்புக்கு விளக்கம் தேவை என்ற நியதி பழைய ஏற்பாட்டிலேயே வழக்கிலிருந்தது. நசரேத்து செபக்கூடத்தில் வாசிக்க எழுந்த இயேசு உடனே அந்த வாசிப்புக்கு விளக்கம் கூற முனைந்தார் (லூக் 4:20). அவ்வாறே திருத்தூதர்களும் செய்தனர் (தி.ப.13:15). மறையுரை மறைநூலின் விளக்கமே. "மறை நூலிலிருந்து மறையுரை உருவாக வேண்டும்" (திருவழிபாடு 52). "மறைநூல் திருவழிபாடு ஆகிய ஊற்றுக்களிலிருந்து அள்ளி எடுக்கப்பட்டதாக அது அமைய வேண்டும்" (தி.வ 35:2).

மறையுரை "விசுவாசத்தின் மறைபொருளையும், கிறிஸ்தவ வாழ்க்கை விதி முறையையும் விளக்குவதாக" அமைய வேண்டுமென்பது அடுத்த ஒழுங்கு (தி.வ.52). பொதுவாக எந்த மறையுரையோ, போதகமோ இவ்விரு பகுதிகளைக் கொண்டிருக்க வேண்டுமென்பது மனித உள்ளத்தின் தேவை என்று கூறுலாம்.

மறையுரை மனிதனின் அறிவையும் மனத்தையும் தொடுவது மாத்திரமல்ல, அவனின் கற்பனைத்திறனையும் அது மதிக்க வேண்டும். எனவே, மறையுரையின் தொடக்கத்தில் கேட்போரின் கவனத்தையும் கற்பனையையும் கவர, ஏதாவதொரு உண்மை நிகழ்சி, வாழ்க்கைப் பிரச்சினை, அன்றாட வாழ்க்கையில் செயல்படும் ஒரு கருத்து போன்றவை இடம்பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சிந்தனைகள் இன்று மக்களுக்கு அர்த்தமும் பயனுமுள்ளவையாக இருப்பதென்றால் அவற்றிற்கு முக்கிய காரணம் 1991ம் ஆண்டு தொடக்கம் அருட்கலாநிதி யோ.இ. ஜெயசீலன் அடிகளாருடன் வாரம் தவறாது நான் செய்துவரும் விவிலியப் பகிர்வு. எனவே, அவருக்கு என் இதய ஆழத்தின் நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

"உயிரூற்று" என்னும் இந்நூலுக்கு தனது நல் ஆசியுரையை வழங்கி எழுந்துப்பணியில் என்னை என்றும் ஊக்குவிக்கும் எனது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ஆயர் அருட்கலாநிதி இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கும், அச்சேற்ற அனுமதியளித்த குருமுதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களுக்கும் இந்நூல் இவ்வடிவம் பெற ஆக்கபூர்வமான பல ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கிய அருட்பணியாளர்கள் ம.வி.இ. இரவிச்சந்திரன், சி.அ. அருட்செல்வன் அடிகளாருக்கும் இந்நூலை புதுப்பொலிவுடன் அச்சிட்டு வெளியிடும் அன்னை அச்சகத்தாருக்கும் என்றும் என் இதயம் நிறைந்த நன்றிகள்.

இவர்கள் அனைவருக்காகவும் இறை ஆசீரை என்றும் வேண்டி நிற்கின்றேன்.

மா. றேஜிஸ் இராசநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை


பக்கம்

திருவருகைக் காலம்:

| | |
|---|---|
| 1-ம் வாரம் | 01 |
| 2-ம் வாரம் | 04 |
| 3-ம் வாரம் | 06 |
| 4-ம் வாரம் | 08 |

கிறிஸ்து பிறப்பின் காலம்:

| | |
|---|---|
| கிறிஸ்து பிறப்பு விழா | 10 |
| திருக்குடும்ப விழா | 13 |
| ஆண்டவரின் திருக்காட்சிவிழா | 16 |
| ஆண்டவரின் திருமுழுக்கு | 18 |

தவக்காலம்:

| | |
|---|---|
| திருநீற்றுப் புதன் | 20 |
| 1-ம் வாரம் | 22 |
| 2-ம் வாரம் | 24 |
| 3-ம் வாரம் | 26 |
| 4-ம் வாரம் | 29 |
| 5-ம் வாரம் | 32 |
| திருப்பாடுகளின் ஞாயிறு | 35 |
| ஆண்டவரின் இரவு உணவு விழா | 37 |
| திருப்பாடுகளின் வெள்ளி | 39 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்கா காலம்:


| | |
|---|---|
| உயிர்ப்பு பெருவிழா | 41 |
| 2-ம் வாரம் | 44 |
| 3-ம் வாரம் | 47 |
| 4-ம் வாரம் | 50 |
| 5-ம் வாரம் | 52 |
| 6-ம் வாரம் | 54 |
| ஆண்டவரின் விண்ணேற்றம் | 57 |
| தூய ஆவியின் திருவிழா | 59 |
| மூவொரு கடவுளின் திருவிழா | 61 |
| கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம் | 64 |


ஆண்டின் பொதுக்காலம்


| | |
|---|---|
| 2-ம் வாரம் | 68 |
| 3-ம் வாரம் | 71 |
| 4-ம் வாரம் | 73 |
| 5-ம் வாரம் | 75 |
| 6-ம் வாரம் | 77 |
| 11-ம் வாரம் | 79 |
| 12-ம் வாரம் | 81 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 13-ம் வாரம் | 84 |
| 14-ம் வாரம் | 86 |
| 15-ம் வாரம் | 89 |
| 16-ம் வாரம் | 92 |
| 17-ம் வாரம் | 95 |
| 18-ம் வாரம் | 97 |
| 19-ம் வாரம் | 100 |
| 20-ம் வாரம் | 102 |
| 21-ம் வாரம் | 104 |
| 22-ம் வாரம் | 106 |
| 23-ம் வாரம் | 108 |
| 24-ம் வாரம் | 111 |
| 25-ம் வாரம் | 113 |
| 26-ம் வாரம் | 115 |
| 27-ம் வாரம் | 117 |
| 28-ம் வாரம் | 119 |
| 29-ம் வாரம் | 122 |
| 30-ம் வாரம் | 125 |
| 31-ம் வாரம் | 127 |
| 32-ம் வாரம் | 130 |
| 33-ம் வாரம் | 132 |
| கிறிஸ்து அரசர் பெருவிழா | 134 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருகைக்காலம்
# 1ம் வாரம்

**ஏசா 63 : 16–17;64:1;3-8; 1கொரி 1:3-9; மாற் 13:33-37**

**கருப்பொருள் :** ஆண்டவரின் வருகைக்காக கண்விழித்துக் காத்திருப்போர் பேறுபெற்றோர்.

1ம் வாசகம் : நீதியைக் கடைப்பிடித்து இறைவனைச் சந்திக்கச் செல்பவனை அவரே சந்திக்க வருகிறார்.

2ம் வாசகம் : நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து வெளிப்பட வேண்டும் என்று காத்திருந்து ஞானக் கொடைகளால் நிரப்பப்படுவோமாக.

நற்செய்தி வாசகம் : இறுதி நாளும் ஆண்டவருடைய இரண்டாவது வருகையும், திடீரென நிகழவிருப்பன. எனவே, எப்போதும் நாம் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

இன்றைய வழிபாட்டின் மூன்று முக்கிய கருத்துக்கள் :

1. இதோ நாட்கள் நெருங்கி வருகின்றன.
2. மீட்பு நெருங்கிவிட்டது
3. தளிர் ஒன்று முளைக்கச் செய்வேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி மாதம் மங்களகரமான மாதம்; மழைக்காலம், காய்ந்து வரண்டுபோன நிலையிலிருந்து இயற்கை மீண்டும் தளிர்விடும் காலம். இயற்கையோடு சேர்ந்து கிறிஸ்தவர்களும் நம்பிக்கையில் தளிர்க்கும் காலம். இன்றைய அவநம்பிக்கை நிறைந்த அரசியல் நெருக்கடிகள் மத்தியில் இந்த கிறிஸ்து பிறப்பு வருகிறது.

உங்கள் உள்ளங்கள் மந்தமடையாதவாறும், அவரது வருகை கண்ணிபோல் உங்களைச் சிக்கிவைக்காதவாறும் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று பலவிதத்திலும் மக்களின் உள்ளங்கள் மழுங்கடிக்கப்பட்ட நிலையில், அளவுமீறிய உலகப் போக்கு, உடல் இன்பம், சொகுசு வாழ்வு, குடிவெறி, களியாட்டம் என்பன தலைவிரித்தாட இறைவனே தேவையில்லை என்ற போக்கே மேலோங்கி நிற்கிறது.

இவையனைத்தும் உள்ளத்து வெறுமையைப் போக்க எடுக்கும் போலி முயற்சிகள். இந்நிலையில்தான் நாம் இயேசுவின் வருகைக்கு ஆயத்தம் செய்கின்றோம். இன்று பல கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் வருகையையும் ஒரு களியாட்டமாகக் கருதுகின்றனர். திருவருகைக் காலம் என்பது இயேசுவின் 2ம் வருகைக்காக ஆயத்தம் செய்யும் காலம். நம்மில் பலர் அவரது பிறப்பை மட்டும் நினைத்துக்கொண்டு 2ம் வருகையை மறந்து அதற்கு ஆயத்தம் செய்யத் தவறுகின்றனர்.

எமது வாழ்வை 2ம் வருகைக்காக தகுந்த விதமாக ஆயத்தம் செய்வது அவசியம். எமது உள்ளம் மந்தமான, மழுங்கடிக்கப்பட்ட நிலையிலிருந்தால் அவரது வருகை எமக்கு அதிர்ச்சியாக, தண்டனையாக அமையும்.

அவரது வருகைக்காக நாம் ஆவலோடு காத்திருக்க வேண்டும். அதற்கு செபத்தில் விழிப்பாயிருந்து காத்திருக்க வேண்டும். நாம் இவ்வாறு காத்திருப்பதற்கு தமது ஆன்மீகக் கண்கள் திறந்திருக்க வேண்டும். பரிசுத்த ஆவியில் வாழும்போது துல்லியமான உணர்வுள்ளவர்களாக இறைவனின் செய்திகள், மனநிலைகள், வழிநடத்தல்களை உணர முடியும். இதற்கு செபத்தில் காத்திருக்கப் பழக வேண்டும். ஏன் காத்திருக்க வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் குரலைக் கேட்க - வழிபாட்டிலும் வரலாற்றிலும் ஓங்கி ஒலிக்கும் அவரது குரலைக் கேட்க.

அவர் அருளைப் பெற - அவரது குரல் விடுக்கும் அழைப்புக்கு ஏற்றவாறு வாழுவதற்கு வேண்டிய அருளைப் பெற

அவர் காட்டும் பாதையில் புதிய சமுதாயத்தை அமைக்க.

"கொடுக்கிற காலம் நெருங்குவதால் - இனி
எடுக்கிற அவசியம் இருக்காது
இருக்கிறதெல்லாம் பொதுவாய் போனால்
பதுக்கிற வேலையும் இருக்காது
ஒதுக்கிற வேலையும் இருக்காது.

உழைக்கிற காலம் உறுதியாயிட்டா
கொடுக்கிற நோக்கம் வளராது - மனம்
மேலும், கீழும் புரளாது.....!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருகைக்காலம் 2ம் வாரம்

**ஏசா 40 : 1–5; 9-11;   2இரா 3:8-14;   மாற் 1:1-8**

**கருப்பொருள் :** தபம் செய்து மனம் திரும்பி ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தம் செய்வோம்.

**1ம் வாசகம் :** இறைவனின் வருகைக்காக நம் உள்ளங்களை நாம் ஆயத்தப்படுத்த வேண்டும்.

**2ம் வாசகம் :** ஆண்டவர் தாம் வருவதற்கு காலம் தாழ்த்துவது போல் தோன்றினாலும் வந்தே தீருவார்.

**நற்செய்தி வாசகம் :** நம் உள்ளம் இறைவன் நடக்கும் பாதை. அது செம்மையாக இருந்தால்தான் நாம் அவரை வரவேற்க முடியும்.

நாம் முற்றும் இருளான சூழலில் இருப்பதுபோன்றும் விண்ணக ஜெருசலேம் தொலைவில் இருப்பதுபோன்றும் தோன்றுகின்றது. நாம் எம்மைத் தயார்படுத்துவதற்கு அதைப்பற்றிய மங்கலான தோற்றம் தெரிகிறது. இந்நிகழ்வுக்குப் பல நாடுகளிலிருந்தும் விருந்தினர் அழைக்கப்படுவர். அதன் பிரதான அடையாளம் மணமகனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணமகள், அத்துடன் வரலாற்றுத் திருப்பயணங்கள் நிறைவும் அர்த்தமும் பெறுகின்றன. அதன் இறுதி அழைப்பு நீதி, சமாதானம், அன்புக்கானது. வார்த்தையானவர் அழைக்கும் போது அன்பு, இரக்கத்திலிருந்துதான் நிரந்தர மகிழ்வு ஏற்படும் என்பதை அனைவரும் உணர்ந்துகொள்வார்கள். எல்லா நாடுகளும் சமாதானத்தைப் பிரகடனம் செய்யும். இச் சமாதானம் மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியால் பெறப்படும் ஒன்றாக இல்லாமல் முற்றுமுழுதும் இறைவனின் கொடையாக இருக்கும்.

இன்று மனித முயற்சியினால் நிறுத்தமுடியாத இரு பெரும் உண்மைகள்.

1) நவீன யுத்தம் 2) எய்ட்ஸ்

இவ் இரண்டுமே மனிதனுக்குச் சவாலாக அமைந்து, தீர்க்க முடியாதவைகள் என்பதை உணர்த்துகின்றன. லட்சக்கணக்கில் எய்ட்ஸ் நோயாளர்கள் மடிகின்றனர். அதைப்பற்றி எதுவுமே செய்யமுடியாத நிலை. செல்வந்த நாடுகளோ கோடிக்கணக்கில் ஆயுதங்களுக்காகச் செலவிடுகின்றன. இதனால், போருக்கான தீர்வு எவ்விதத்திலும் எட்டப்பட முடியாதுள்ளது. பல நாடுகளுக்கு இது பெரும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. விவிலியத்திலே சீரியா நாட்டு நாமான்மட்டில் இறைவாக்கினர் எலிசா கொண்டிருந்த நிலைப்பாடுபற்றிக் கூறப்படுகிறது. தொழுநோய்க்கு மருந்தே இல்லை. எனவே, நாமானுக்கு இரண்டு விதமான முடிவுகளை எடுக்க அவகாசம் கொடுக்கப்படுகின்றது.

1) இறைவாக்கினரின் அழைப்பை ஏற்று, தன்னைத் தாழ்த்தி யோர்தானில் குளித்துக் குணம் பெறலாம்.

2) தன்னுடைய பெருமையான நிலையை நினைத்துக் கொண்டு தொழுநோயாளியாகவே தன் வாழ்வைத் தொடரலாம்.

மூன்றாம் மிலேனியத்தில் வாழும் எத்தனையோ சவால்கள் நாமானுக்கு ஏற்பட்டவை போன்று ஏற்படுகின்றன. நம்மைத் தாழ்த்தி இறையருள் பெற்று குணம் பெறலாம்; மன அமைதி பெறலாம். அல்லது நமது பெருமையைப் பற்றிப்பிடித்துக் கொண்டு தொழு நோயாளிகளாகவே திரியலாம். பல வேளைகளில் நாம் மன அமைதிபெற ஒரே வழி மனமாற்றம் பெற்று திருமுழுக்கில் நாம் கிறிஸ்துவுக்கு மட்டும் செய்த அர்ப்பண வாழ்வுக்குத் திரும்புதல். கிறிஸ்துவின் வருகை நல்மனத்தவர்க்குத் தரும் சமாதானத்தை அனுபவிக்க எந்தெந்த வழிகளில் நாம் உண்மையாக மனம்மாறப் போகின்றோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருகைக்காலம்
# 3ம் வாரம்

**ஏசா 61 : 1–2; 10-11; 1தெச 5:16-24; யோவா 1:6-8, 19–28**

**கருப்பொருள் :** எளிமையும் தாழ்ச்சியும் ஆண்டவருடைய பணியாட்களின் அணிகலன்களாகும்.

**1ம் வாசகம் :** வரவிருந்த மெசியாவின் பணிகளை இறை வாக்கினர் முன்னறிவிக்கின்றார்.

**2ம் வாசகம் :** ஆண்டவரது வருகையில் நாம் தளராத நம்பிக்கை வைக்க வேண்டும்.

**நற்செய்தி வாசகம் :** ஆண்டவருடைய வழியை ஆயத்தம் செய்ய அனுப்பப்பட்டவர் யோவான், அவர் தாழ்ச்சியின் மாதிரிகை.

இன்றைய முதல் வாசகம், இறைவனை ஒரு போர்வீரனாகவும் வெற்றிதருபவராகவும் காட்டுகிறது. மீட்பின் சன்மானமான நித்திய வாழ்வுக்காகப் போராடுவோர், உலகம், சரீரம், பசாசு என்பவற்றை எதிர்த்துப் போராடுவோரே; அவர்கள் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். விழித்திருப்பவர்களே ஆபத்தை உணரமுடியும். தொடர்ந்து போராடிக் கொண்டிருப்போரே தமக்கு அருகில் ஆபத்து இருப்பதை உணருகின்றனர். எதிரிக்கு எதிராக எழுந்து நிற்பதன் அவசியத்தை உணருகின்றனர். தம் கரம் வலுவிழந்துபோவதாகவும் தாம் தோற் கடிக்கப்பட்டு, காயப்படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்படுவதாகவும், புறக் கணிக்கப்படுவதாகவும் எதிரிகள் தரப்பிலிருந்து கூச்சல் எழும்புவதாகவும் உணருகின்றனர். இதே வேளையில்தான் இறைவன் வெற்றிக் கீதத்துடன் தம்மை அணுகி வருவதையும் தமது வெற்றிக்கீதத்தில் பங்குகொள்ள இறைவன் அழைப்பதையும் உணருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

மூன்றாம் மிலேனியத்தின் திருச்சபை, மேற்கூறிய இஸ்ராயேலரின் நிலைமையை ஒத்துள்ளது. தவறுகளை நியாயப்படுத்தி பொய்மெசியாக்கள் மூலம் போலிப் பதில் தருவதை நிறுத்தாவிடில் தான் ஆபத்தால் சூழப்பட்டிருப்பதை உணரமுடியாது. நிகழ்வு மாறி நிகழ்வு என்று சென்று கொண்டிருப்பதனால் தன்னை எதிர்நோக்கியுள்ள பேராபத்தை உணரமுடியாது போய்விடும். இத்திருச்சபையை விடுவிக்க மெசியா தேவைப்படமாட்டார். ஏனெனில், அது போலி மெசியாவில் தஞ்சம் புகுந்துள்ளது. தனது இயலாமையை, தான் அவமானத்துக்கு உள்ளானதை ஒருபோதும் உணரமுடியாது போராடுபவர்களுக்குத்தான் 18,19,20ம் வசனங்கள் நம்பிக்கை தர கூறப்படுகின்றன.

இத்தகைய மக்களைத்தான் இன்றைய நற்செய்தியில் காண்கின்றோம். இது சாதாரண கூட்டமல்ல, பரிதாபமான நிலையில் உள்ள "பாவிகளின் கூட்டம்". திருமுழுக்கு யோவான் போன்ற ஒரு சிலரே அவர்களை அடையாளம் காணுகின்றனர். மரத்தின் வேரிலே ஏற்கனவே கோடரி வைத்தாயிற்று. இது ஒரு அடிப்படைச் செய்தி. எனவே, உடனடியாக ஆன்மீகப் போராட்டத்தை ஆரம்பியுங்கள். எதையும் மேலோட்டமாக எடுக்க வேண்டாம். மக்கள் தமக்கென வெவ்வேறு தெய்வங்களை உருவாக்கிவிட்டனர். ஆழமான சிந்தனையுடன் வாழ்க்கை முறையை மாற்றாவிடில் அழிவையே காண்பீர்கள். இது ஒரு விரக்தியில் வாழும் கும்பல். அவர்களின் வறுமையை யோவான் காண்கிறார். எனவேதான், பகிர்ந்து வாழப் பணிக்கிறார்.

போர்வீரர் போரின் தழும்புகளைத் தம் உடலில் தாங்கிக் கொண்டிருப்பவர்கள். போதிய ஊதியம் பெறாதவர்கள். திருச்சபையிலும் கூட பலர் இறுதிவரை நின்று போராடி தழும்புகளை சுமந்து நிற்கின்றனர். போராட்டத்தில் ஆழமாக ஈடுபட வேண்டும். யோவான் இதையே கூறுகின்றார். மரியாள், சக்கரியா போன்றோர் போராடிக்கொண்டே இருக்கின்றனர். அவர்களைப்போன்று போராடுபவர்களே மெசியாவைக் காண்பர். என் மீட்புக்காக நான் அச்சத்தோடும் நடுக்கத்தோடும் பாடுபடுகின்றேன் என்று புனித பவுல் கூறுகிறார். யோவான் அழைப்பை ஏற்ற மக்கள் கேட்ட கேள்வி: "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" இதற்கான பதிலில்தான் தங்கியுள்ளது நாம் மெசியாவைக் காண்போமா இல்லையா என்பது. எனவே, இத்திருவருகைக் காலம் முழுவதும் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இறைவார்த்தை ஒளியில், தூய ஆவியின் துணையோடு தனித்தும் ஒருமித்தும் இதய சுத்தியோடு தேடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருகைக்காலம்
# 4ம் வாரம்

**2சாமு 7 : 1-5; 8-12; உரோ 16:25-27; லூக் 1:26-38**

**கருப்பொருள் :** இறைவன் தம் மக்கள் மத்தியில் கூடாரம் அமைத்து அன்பின் ஆட்சி செலுத்த விரும்புகின்றார்.

**1ம் வாசகம் :** அவரது அரசுக்கு முடிவிராது

**2ம் வாசகம் :** நமது மீட்பின் திட்டம் மீட்பரின் வருகையால் வெளியாயிற்று

**நற்செய்தி வாசகம் :** மீட்பருடைய பிறப்பின் அறிவிப்பு

இறைவனின் தன்மையையும் அவர் மனிதனாகி நம்மோடு நடந்து கொள்ளும் விதத்தினையும் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். நாம் தாவீதைப் போன்றவர்கள். இறைவனுக்கு உகந்த பெரிய காரியங்கள் என ஆலயத்தைக் கட்டுதல் போன்றவற்றைச் செய்ய விரும்புகின்றோம். இறைவனை மகிமைப்படுத்த விரும்பும் நாம் எமது வாழ்வில் உருமாற்றம், அர்ப்பணம் போன்றவற்றில் கவனம் செலுத்தாமல் பல தரப்பட்ட நிகழ்வுகள், கோவில் கட்டுதல், திருத்துதல், பெரும் பணச் செலவில் அலங்கரிப்புக்கள் செய்தல் போன்றவற்றில் முனைப்பாய் இருக்கின்றோம். உலக மதிப்பீடுகளால் நிறைந்துள்ள நாம் அதை எமது சமயப் பழக்கவழக்கங்களுக்குள்ளும் கொண்டுவருகின்றோம். இறைவனை யாரும் ஏமாற்ற முடியாது. அவர் ஆலயங்களில் மாத்திரமல்ல நம் அன்றாட வாழ்விலும், வாழ்க்கை என்னும் வண்டியை நகர்த்த முடியாத ஏழைகள், இல்லிட மற்றவர்களிலும் இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர் தாவீதுக்கு சொன்ன வார்த்தைகள் எமது மத்தியிலும் இருக்கின்றன. இன்று வன்னி, குடாநாடு என்று இரு துருவங்களாக எமது மறைமாவட்டம் பிரிந்து நிற்கின்றது. வன்னியில் வாடும் எமது உடன் பிறப்புக்களின் நிலையைப் பற்றிச் சிந்தித்தும் சிந்திக்கா தவர்களாக வாழும் நாம் எதற்காக ஆலயங்களை அலங்கரிக்க வேண்டும்? அவர்களுக்குச் செய்யும் உதவி ஏழைக் "குழந்தைக்கு" செய்யும் உதவி என்பதை ஏன் உணர மறுக்கிறோம்?.

மரியாவை அருள் மிகப் பெற்றவரே வாழ்க என்று வானதூதர் வாழ்த்துகின்றார். "வாழ்க" என்ற வாழ்த்து மீட்பரை எதிர்பார்த்துக் காத்திருந்த சீயோன் மகளிருக்கு இறைவாக்கினர் சொன்ன வார்த்தைகள். நாமும் இறைவனில் மகிழ முடியுமா? "அருள் மிகப் பெற்றவரே" எனும் விவிலிய வார்த்தை இறைவனின் தனித்துவமான கொடையாகிய அருளைக் குறித்து நிற்கின்றது. மரியாவில் காணப்பட்ட இந்த நிலை நமக்கும் பொருந்தும். நாமும் அருள்மிகப் பெற்றவரே. பாவமாசுடன் உற்பவித்தாலும் திருமுழுக்கின் வழியாக தூய்மையாக்கப்பட்டவர்கள். யோவான் தனது நற்செய்தியில் மிகவும் அழகாக "இவரது நிறைவிலிருந்து நாம் யாவரும் நிறைவாக அருள் பெற்றுள்ளோம்" (யோவா 1:16) என்று கூறுகிறார். "ஆண்டவர் உம்முடனே" என்பது "கடவுள் நம்மோடு" என்பதைச் சுட்டி நிற்கின்றது. திருப்பலியில் "ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என்று கூறும் ஒவ்வொரு முறையும் "இம்மானுவேல்" என்று பொருள்படும். அதாவது "இறைவன் நம்மோடு" என்று அர்த்தம் பெறும். தூய ஆவி அனைத்தையும் செயல்படுத்துவார். இதுதான் அருளின் அர்த்தம். இறைவன் நம்மைப்போல் உருவெடுத்து நம்மோடு நடமாடுவதற்காக, மனித குரலில் பேசுவதற்காக நாம் மரியாவுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

மரியா விசுவாசத்தோடு தம்மைக் கையளித்ததன் மூலமாகவே மீட்பின் வரலாற்றுக்குள் நுழைகின்றார். விசுவாசம் என்பது அதன் அடையாளத்தில் இறைவனின் செயல்பாட்டிற்கு ''ஆம்'' என்று எமது உள்ளத்தைத் திறந்து வைப்பதாகும். இவ்விதமாக நாமும் நம் உள்ளங்களைத் திறந்து உண்மையான மீட்பரின் வரவுக்காக இல்லாதவர், இயலாதவர், ஏழை, எளியவர்களில் அந்த இறைவனைக் காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து பிறப்பு விழா

**கிறிஸ்து பிறப்பின் நல்வாழ்த்துக்கள்!**

ஆசீரும் அருளும் அமைதியும் சமாதானமும் கிடைக்க பாலக இயேசு அருள் புரிவாராக!

கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி என்பது வாழ்க்கையை மறந்து பாட்டுப் பாடுவதிலும், கொண்டாட்டங்களைக் கொண்டாடுவதிலும் அடங்குவதில்லை. குதூகலமெல்லாம் கிறிஸ்மஸ் அல்ல. கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி வாழ்க்கையின் மகிழ்ச்சி. வாழ்வில் இறைவனைக் கண்டுகொள்வதனால் ஏற்படும் மகிழ்ச்சி. கிறிஸ்மஸ் ஒரு பயணம், ஒரு தொடர் நிகழ்ச்சி, கிறிஸ்து பிறப்பின் சூழல் இன்றைய வாசகங்கள் கூறுவது போல அடிமைத்தனமும், விடிவே இல்லாதது போன்ற இருளும், அங்கலாய்ப்பும் நிறைந்த ஒன்று. உலகப் போக்குகளின் ஆதிக்கங்கள் தலைதூக்கி நின்ற நேரம். இன்றைய சூழல் எப்படியோ, அதே போன்றுதான் அன்றும்.

## நாசரேத்திலிருந்து பெத்லகேம்

இருளும் அடிமைத்தனத்தின் கொடூரமும் நிறைந்த நேரத்தில்தான் நாசரேத்திலிருந்து பெத்லகேமிற்கு பயணம் தொடங்கியது. "நாசரேத்து" என்றால் எவ்வித நன்மையும் இங்கிருந்து ஏற்படாது என்று கருதப்பட்ட இடம். "நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரமுடியுமோ?" (யோவான் 1:46) என்று நத்தானியேல் கேட்டார். "பெத்லகேம்" என்றால் அப்பத்தின் வீடு; வாழ்வும், சமாதானமும் தரும் இறைவனைத் தேடும் இடம் என்று பொருள். குழந்தைதான் ஒரேயொரு அடையாளம். அதாவது, மனித பலம் ஒன்றுமில்லை. இறை பலம் ஒன்றுதான் நமக்கு நம்பிக்கையும் சமாதானமும் தரும் என்று உணர்த்திய சூழல். எனவே, நாம் இங்கிருந்து ஏதாவது நன்மை ஏற்படக்கூடுமோ என்ற நாசரேத்து என்னும் எமது மனித நிலையிலிருந்து, ஆண்டவர் நமக்கு வாழ்வும், சமாதானமும் தருகின்றார் என்ற "பெத்லகேம்" எனும் நிலைக்குப் பயணம் செய்யும் ஒவ்வொரு முறையும் எமது வாழ்வில் கிறிஸ்மஸ் நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் கிறிஸ்மஸ்

பாலனைக் கண்டு மகிழ்ச்சியை அனுபவித்த முதல் கிறிஸ்மஸ் கூட்டம் யாரென்றால், கன்னிப் பெண்ணாக இருந்து, கருத்தரித்து, தனது பிரசவத்தை வீதியோரத்திலே காணும் அவமானத்தை அனுபவித்த கன்னிமரியாள். அவளது அங்கலாய்ப்புக்கள் அனைத்தையும் சுமந்து நின்ற அவளுடைய கணவர் சூசையப்பர். வானமே எங்கள் வீட்டுக்கூரை என்று வெட்டவெளியில் கிடந்த ஏழை இடையர்கள். ஆம், தமது அன்றாட வாழ்க்கை நிலையை, அவலங்களை ஏற்றபொழுதுதான் அவர்களுக்கு அங்கே இயேசு பிறந்தார், மகிழ்வைக் கொடுத்தார். நமது அன்றாட அனுபவங்களை இறையனுபவமாக ஏற்கும்பொழுதுதான் நாமும் இறைவன் தரும் மகிழ்ச்சியை அனுபவிக்கின்றோம். நமது உள்ளத்தில் இயேசு பிறக்கின்றார். "கடவுள் நம்மோடு" இருக்கிறார். அர்த்தத்தைக் கொடுத்து வழி நடத்துகிறார்.

## கிறிஸ்மஸ் ஒரு பயணம்

எமது அன்றாட வாழ்விலே இறைவனின் பிரசன்னத்தை உணர்ந்து, அவரது வழிநடத்தலில் நிறைவையும் மகிழ்ச்சியையும் அனுபவித்து, அதைப் பிறருடன் பகிர்ந்து வாழ்வதே கிறிஸ்மஸ் விடுக்கும் அழைப்பு, கிறிஸ்மஸ் மகிழ்ச்சி.

வாழ்வுச் சூழல் நாம் எதிர்பார்ப்பது போன்று என்றும் சுமுகமாயிருப்பதில்லை. மரியாள், சூசையப்பர், இடையர்களின் வாழ்வு போன்று மேடுபள்ளங்கள், முரண்பாடுகள், சவால்கள் நிறைந்தவை. இச் சூழ்நிலைகளில் மனித அவநம்பிக்கையிலிருந்து இறை நம்பிக்கைக்குப் பயணிக்கும் ஒவ்வொரு முறையும் எமது வாழ்வில் கிறிஸ்மஸ் இடம்பெறுகிறது. மனிதன் தனது அவநம்பிக்கையின் அடித்தளத்திற்குச் செல்லும்போதுதான் இறைவன் வந்து நம்மைக் கைதூக்குகின்றார். ஏனென்றால், இறைவன்தாமே நம்மைக் கைதூக்கினார் என்பதை நாம் உள்ளூர உணர வேண்டும் என்பதற்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"எருசலேம் - ஜெருஷலோம்" சமாதானத்தின் நகரம்**

பெத்தலகேமில் இயேசுவுடன் ஆரம்பிக்கும் பயணம் சமாதானத்தின் நகரம் எனப்படும் ஜெருசலேம் வரை செல்லும் போதுதான் இச்சமாதானம் நடைமுறை வாழ்வில் நாம் அனுபவிக்கும் சமாதானமாக, முதிர்ச்சி பெற்ற சமாதானமாக, தியாகம் எனும் மரத்தில் மலரும் சமாதானமாக, அமையும். இயேசு தனது பாடுகள், மரணம், உயிர்ப்பின் மூலமாகத்தான் அதாவது தன்னையே முழுமையாகப் பலியாக்கியதன் மூலம்தான் எமக்கு முழுமையான சமாதானத்தை, புது வாழ்வைப் பெற்றுத்தந்தார்.

பணம், பொருளைவிட மனிதனை நமது உள்ளத்தின் அடி ஆழத்தில் பெரிதாக மதிக்கும்போது, 'கடவுள் நம்மோடு' (இம்மானுவேல்) என்று உறுதியாய் உணரும் போது, நம்பிக்கை என்னும் விளக்கு துன்பப்புயலில் அணைந்து போகும் வேளைகளில், நமது இரவை ஒளிர்விக்கும் சுடர் விளக்காக இயேசு வருகிறார் என்று நம்பும்போது, பாலன் குடிலின்முன் கண்ணீர் சொரியும் எமது கண்கள் குடிசையிலுள்ள ஏழைகள், நோயுற்றோரையும், முகாம்களில் முடக்கப்பட்டோரையும் கண்டு நெஞ்சம் நெகிழும்போது, ஏழை மக்களோடு எமக்குள்ளதைப் பகிர்ந்து கொண்டு வாழும்போது, மற்றவர்களோடு நாம் கொண்டுள்ள அன்பும் உறவும் கபடற்ற, தூய்மையான , தியாகம் நிறைந்த அன்பாக மலரும்போது, வளரும்போது, இயேசு நமது உள்ளங்களில் பிறக்கிறார் - நமக்கு இதுவே கிறிஸ்மஸ். இப்படிப்பட்ட அர்த்தமுள்ள கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடவே பாலன் இயேசு நம் ஒவ்வொருவரையும் அழைக்கின்றார்.

இறைவனது திருவுளத்தை
உணவாகப் போற்றிச் செயல்பட்டவர் கிறிஸ்து!
அது கசந்த பானமாக மாறியபோதிலும்
அதன் கடைசித் துளி வரையிலும்
சுவைத்திட அவர் தயங்கவில்லை!
அவர் தம் திருவடிகளில் அமர்ந்து
நாம் ஒவ்வொருவரும் பாடம் பயிலவேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குடும்ப விழா

சீ.ஞா 3 : 3–7,14-17; கொலோ 3:12-21; லூக் 2:22-40

கருப்பொருள் : ஆண்டவரின் திருவுளத்தை ஏற்று நடக்கும் குடும்பம் அவரின் ஆசீரை நிறைவாகப் பெறும்.

1ம் வாசகம் : உனக்கு பிறக்கும் புதல்வன் தான் உனக்கு வாரிசு ஆவான்.

2ம் வாசகம் : ஆபிரகாம், சாராள், ஈசாக்கின் விசுவாசம்.

நற்செய்தி வாசகம் : பாலன் வளர்ந்து ஞானம் நிறைந்தவராய் இருந்தார்.

வாழ்க்கையிலே எப்படிப்பட்ட பிரச்சினை ஏற்பாட்டாலும் முதலில் பாதிக்கப்படுவது குடும்பம், எமது நாட்டிலே எழுந்துள்ள சமூக பொருளாதார, அரசியல் கலாச்சார தொடர்புசாதன பிரச்சினைகளினால் எமது குடும்பங்கள் பலவிதமாக உடைக்கப்பட்டு ஒரு மரணக் கலாச்சாரத்துள் தள்ளப்படுகின்றன. இன்று நிலவுகின்ற நுகர்வுக் கலாசாரத்துள் உலகிலிருந்து எழும் கவர்ச்சிகரமான வார்த்தைகளை இந்தக் குடும்பங்கள் இறை தந்தைக்கு எதிரான வார்த்தைகளாக முன்வைக்கின்றனர். இவ்வாறு குடும்பங்கள் இரு துருவங்களாக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட நிலையில் இறை தந்தையின் வார்த்தையை பெரும் துன்பங்கள் மத்தியிலும் ஏற்றுக்கொண்ட இருவரின் முன் மாதிரியான வாழ்க்கை ஒவ்வொரு குடும்பத்திற்கும் முன்னுதாரணமாகக் கொடுக்கப்படுகின்றது. அவர்கள் மரியாவும் சூசையும். மரியாவின் பங்கை லூக்கா விபரிக்கின்றார். சூசையின் பங்கை மத்தேயு விபரிக்கின்றார். இவர்கள் நாசரேத்து, பெத்தலகேம், எகிப்து யெருசலேம் என்னும் இடங்களில் களமிறங்குகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம தந்தையின் முக்கியமான திட்டம்தான் குடும்பம். ஆனால், அது ஏதேனில் பிழைத்துவிட்டது. இந்நிலையில் பழைய ஏற்பாட்டில் குடும்பங்களினூடாக நம்பிக்கையின் வித்துக்கள் விதைக்கபபடுகின்றன. புதிய ஏற்பாட்டில் தந்தையின் ஞானத்தில் சூசை, மரியாள் வளருகின்றார்கள். எல்லா இளம் கத்தோலிக்க குடும்பங்களும் இவர்கள் போல் வளர அழைக்கப்படுகின்றார்கள். பெற்றோர்கள் வளரும் அளவுக்குத்தான் பிள்ளைகளும் வளருவார்கள். இவர்கள் சரியாக வளரும்போது குடும்பம் மூவொரு கடவுளின் அவதாரம்போல் உலகில் தோன்றும்.

திருக்குடும்பம் பன்னிரண்டு வருடங்களின்பின் பெரும் சோதனைகளைச் சந்திக்கின்றது. இயேசுவை பன்னிரண்டு வயதில் காணுகின்றோம். இறை அனுபவத்தில் வளர்ந்த தாய்தந்தையை பிள்ளை சோதிக்கின்றது. "என் தந்தையின் அலுவலில் நான் இருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்கிறது. பிள்ளைகள் ஒவ்வொரு பருவத்தையும் அடைய அடைய, பெற்றோருக்கு அது ஒரு சவாலாக அமைகின்றது. இதுதான் ஜெருசலேம் தேவாலயத்தில் நடந்தது. இயேசு காணாமல் போய்விட்டார். அவர்கள் இயேசுவை மீளக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. எனவே, தேடல் தொடங்கியது. மூன்று நாட்கள் தொடர்ந்தது. இவ்வாறு ஒவ்வொரு பெற்றோரும் பெற்றோர் எனும் தங்கள் பணியை மீளத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியது மிகவும் அவசியம். பிள்ளைகள் ஒன்றில் உலகத்தினுள் சென்று அமிழ்ந்து விடுகின்றார்கள்; அல்லது இறைவனுக்குள் சென்று இணைந்து விடுகின்றார்கள்.

இயேசுவும் தேடுகின்றார். பெற்றோர் வளர்த்த பிதாவின் வழியில் இத்தேடல் ஒரு திருப்புமுனையை அடைகிறது. வீட்டில் கற்றுக் கொண்டவற்றை, வேதவாக்குகளை ஜெருசலேம் தேவாலயத்தில் அங்கிருந்த குருக்களோடு சேர்ந்து ஆராய்கிறார். தாய், தந்தை, பிள்ளையின் புதிய சந்திப்பு அங்கே நடைபெறுகின்றது. "ஏன் நீங்கள் அங்கலாய்த்தீர்கள்? நான் என் தந்தையின் அலுவலில் ஈடுபட்டிருக்க வேண்டாமா?" என்று கேட்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான தொடர் தேடலும் இறை தந்தையின் அன்பும் அவரை அவரது திருமுழுக்கு வரைக்கும் இட்டுச் செல்கின்றது. எம் ஒவ்வொருவரது குடும்பங்களும் இத்தகைய தொடர் தேடலினாலும் தந்தையின் அன்பினாலும் இட்டுச் செல்லப்படுகின்ற திருமுழுக்கு அனுபவத்தைப் பெறாமல், இத்தகைய நேர்மையான தேடலுக்கு எதிர்மறையாக நடந்தால் பெரும் துன்பகரமான நிகழ்வையே சந்திக்க நேரிடும். இறைவார்த்தை பிள்ளைகளின் உள்ளத்திலே வளர்ந்து, அந்தப்பிள்ளை ஆண்டவர் இயேசுவைப்போல தன் வாழ்வில் முதிர்ச்சியான தீர்மானத்தை எடுக்கும்பொழுதுதான் திருக்குடும்பம் அவர்கள் வாழ்விலே உண்மையானதாகின்றது.

**இறைவன் உயர்த்த உன்னை தாழ்த்து**

வருந்துகின்ற உள்ளம், தாழ்மையான சிந்தை
இறைவனை நோக்கி வருகை இம்மூன்றும்
மாற்றம் பெறுகின்ற மனிதனிடம் மலர்கின்றன!

ஏன் வருந்துகின்றான்?

முத்தம் பொழியவேண்டிய முகங்களை
குத்திக் காயப்படுத்தி விட்டான் என்பதைத் தெரிந்து
கொண்டதால்,
இறைவனது சாயலை பிரதிபலிக்காமல் அவன்
வெளிப்படுத்தும்
சீரழிந்த உருவத்தைக் கண்டு கொண்டதால்,
அவன் செய்யாது விட்ட காரியங்களினிமித்தம்
சிறுமை அடைந்த உலகத்தைப் புரிந்து கொண்டதால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரின் திருக்காட்சி விழா

**எசா 60 : 1-8; எபே 3:2-3, 5-6; மத் 2:1-21**

| | |
|---|---|
| **கருப்பொருள் :** | ஆண்டவரின் ஒளி அனைத்து மக்களுக்கும் பிரகாசிக்கும்படி நாம் வாழ வேண்டும். |
| **1ம் வாசகம் :** | ஆண்டவரின் மகிமை உதித்து விட்டது. |
| **2ம் வாசகம் :** | புறஇனத்தவரும் உரிமைப்பேற்றுக்கு வாரிசுகள் என எப்பொழுதும் வெளியாக்கப் பட்டுள்ளது. |
| **நற்செய்தி வாசகம் :** | அரசரை வணங்கக் கீழ்த் திசையிலிருந்து வந்துள்ளோம். |

புதிய ஆண்டு பெரும்பாலான ஏழைகளின் ஆண்டாகவும் மனிதவளங்கள் பற்றிய தேடலில் ஈடுபட்டுள்ள ஒருசில அறிவாளிகளின் ஆண்டாகவும் அமைகின்றது. அத்துடன் இவர்கள் புதிய மிலேனியத்தின் மெசியாவைத் தேடுகின்றனர். ஏழைகளுக்கு இத்தேடல் எளிதாயிருக்கும்.

அறிவாளிகள்தான் இத்தேடலில் மிலேனியம் காட்டும் அடையாளங்களின் அர்த்தங்களைத் தேடும்போது பலதரப்பட்ட சவால்களை எதிர்கொள்ளுகின்றனர். இத்தேடல் சிக்கலான, நீண்ட, பல திருப்பங்கள் நிறைந்ததாக அமையும். பல மெசியாக்கள் தோன்றுவர். ஆனால், உலக சக்திகளோடு மோதுண்டு விரைவில் மறைந்து போவார்.

ஞானிகள் பல கொடைகளோடு வந்தாலும் கிறிஸ்து ஒருவரே புதிய வாழ்வின் அப்பமாக இருப்பார். உணவாக, உடையாக, உறைவிடமாக இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மிலேனியத்தில் விண்ணிலிருந்து வரும் எச்சரிக்கை என்னவென்றால் இந்த மிலேனியத்தின் ஏரோதுக்களிடம் அவர்களது அரண்மனைக்குத் திரும்பி விடக்கூடாது என்பதுதான்.

அந்த அரண்மனைகளுக்குள் எத்தனையோ ஆபத்துக்கள் மறைந்திருக்கும். வாழ்வின் அப்பத்தை எடுத்துக்கொண்டு வாழ்வுக்கு நஞ்சைக் கொடுப்பர். அன்றாட வாழ்வின் அப்பத்துக்குப் பதிலாக அதைப்போன்ற போலிப் பொருட்கள் ஏராளமாக நிறைந்து வழியும். அடிப்படைத் தேவைகளுக்குப் பதிலாக ஆடம்பரப் பொருட்கள் நிறைந்திருக்கும். நவீன யுகத்தின் நவநாகரீகப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கும்.

வாழ்வில் சுமக்கவேண்டிய நாளாந்த சிலுவைகளுக்குப் பதிலாக கவலைகளை சுமைகளை மறப்பதற்கென இன்பங்கள், சுகபோக பொருட்கள் பெருவாரியாகக் கிடைக்கும்.

எனவே, எமது வாழ்வுக்கு அவசியமானதாக எவற்றைத் தேடப் போகிறோம்? புதிய வாழ்வின் அப்பமாகிய இயேசுவையா? அன்றேல் எங்கும் மலிந்துள்ள நவநாகரிகப் பொருட்களையா?

நானோ, கடவுள் விட்ட வழியென்றும்,
அழிக்கவியலா தலையெழுத்தென்றும்
இடிந்துபோய் இருந்து விடமாட்டேன்!
இறைவனைத் துணைக்கு அழைத்து,
இதயத்தில் அன்பைப் போற்றி
இருப்பதைப் பகிர்ந்தளித்து
இழிநிலை களைந்திட முயல்வேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரின் திருமுழுக்கு

**எசா 42 : 1-4, 6-7; தி.ப. 10:34-38; மாற் 1:6-11**

**கருப்பொருள் :** திருமுழுக்கினால் கிறிஸ்துவின் மீட்புப் பணியில் பங்கு கொள்கின்றோம்.

1ம் வாசகம் : நீரருகில் வாருங்கள் நீங்கள் வாழ்வீர்கள்.

2ம் வாசகம் : தூய ஆவியும் நீரும் இரத்தமும் உமக்கு வாழ்வளிக்கின்றன.

நற்செய்தி வாசகம் : நீரே என் அன்பார்ந்த மகன்; உம்மிடம் நான் பூரிப்படைகின்றேன்.

திருமுழுக்கு ஒரு பழம்பெரும் சடங்கு. யோர்தான் நீர் புனிதமடைந்து விசுவாசத்தில் ஒருவன் சரணாகதியடையும் நீராகின்றது. ஒருவனைத் தூய்மைப்படுத்தி அவனை ஒரு பணியாளனாக்கும் சக்தியை வழங்குகின்றது. யோசுவாவின் வாழ்வில் மக்களோடு ஆற்றைக் கடக்கும் போது இதுவே நடைபெறுகின்றது. வாழ்வு புனிதமாக்கப்பட்டு சக்தி வழங்கப்படுகின்றது. எலியா, எலிசா திருமுழுக்கு அருளப்பர் என்போருக்கும் வழங்கப்படுகின்றது.

இயேசுவின் சீடர் அனைவரும் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க அழைக்கப்படுகின்றனர். இது தம்மை வெறுமையாக்க விடுக்கப்படும் அழைப்பு. திருமுழுக்குக்காக இயேசு வரிசையில் காத்திருப்பதால் நசரேத்தின் 30 வருட நிகழ்வுகளை வெறுமையாக்குகின்றார்.

பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தின் 2ம் பகுதி தன்னை வெறுமையாக்கியவரைப் பற்றிக் கூறுகின்றது. அடிமையின் மனித கோலம் பூண்டவர் தண்ணீரில் மூழ்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம் திறக்கப்பட்டு இறைவல்லமை அவர்மீது இறங்கியது.

30 வருட மறைந்த வாழ்வு வானம் திறந்ததோடு திறந்தது. அவர் தம் வாழ்வைத் தொடங்க தெளிவான செய்தி கொடுக்கப்படுகிறது. பணியாளனாக அழைப்பு விடுக்கப்படுகிறது. இதுதான் திருமுழுக்கின் அனுபவம். முழுமையாக தன்னை மறுப்பது; கிறிஸ்துவோடு இறப்பது; கடந்த காலத்துக்கு இறப்பது. பல வேளைகளில் எமது வாழ்வு இறைதிட்டத்துக்கு முரணாக இருக்கலாம்.

எமது வாழ்வில் "உண்மை மனமாற்றம்" இல்லையென்றால் வேறு எதுவும் இடம்பெறாது. யுத்தகாலத்தின் 2ம் கட்டத்தில் நாம் காண்பது இதுதான்.

நாம் ஒவ்வொருவரும் முழுமையான, ஆழமான மன மாற்றத்துக்கு, அர்ப்பணத்துக்கு அழைக்கப்படுகின்றோம். அவரது நாமத்தின் வல்லமையில் அனுப்பப்படுகின்றோம். தந்தை "இயேசு என் மகன்" என்று யாரைப் பார்த்துக் கூறினாரோ, யார் மீது தூய ஆவி புறாவைப் போல் இறங்கினாரோ அவர் நம்மை ஆட்கொண்டு, திருச்சபையை வளப்படுத்த அனுப்புகிறார். மக்கள் மத்தியில் ஆவியானவரை கொண்டுவரும் கருவிகளாக அனுப்பப்படுகிறோம்.

யோவான் மனமாற்றத்தின் அறிவிப்பாளராக நிற்கிறார். யோர்தான் தண்ணீர் ஆவியின் வல்லமையைக் குறிக்கின்றது. இயேசு – தந்தையின் வதிவிடத்தின் புதிய மோயீசனாயிருக்கின்றார். நாம் ஒவ்வொருவரும் இப்பணியைத் தொடர அழைக்கப்படுகின்றோம்.

நாம் இப்பொழுது அந்த அழைப்பின் பணியை ஆழமாகப் பின்பற்ற அழைக்கப்படுகிறோம். முதல் திருமுழுக்கு முழுமையான அறிவின்றி அரைகுறை அறிவுடன் இயேசு மட்டில் கொள்ளும் அர்ப்பணம். இது மேலோட்டமான அர்ப்பணம்.

2வது அர்ப்பணம்தான் முழு அறிவோடு, சுய நினைவோடு 20 வருட யுத்த இடிபாடுகள் நடுவில் செய்யப்படும் அர்ப்பணம். 20 வருட யுத்த வாழ்வினால் தளர்ந்த எம் விசுவாசம் நம்பிக்கை, புத்துயிர் பெற்று இறையன்பை ஆழப்படுத்தி எம்மை வழி நடத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரின் திருமுழுக்கு

**எசா 42 : 1-4, 6-7; தி.ப. 10:34-38; மாற் 1:6-11**

**கருப்பொருள் :** திருமுழுக்கினால் கிறிஸ்துவின் மீட்புப் பணியில் பங்கு கொள்கின்றோம்.

1ம் வாசகம் : நீரருகில் வாருங்கள் நீங்கள் வாழ்வீர்கள்.

2ம் வாசகம் : தூய ஆவியும் நீரும் இரத்தமும் உமக்கு வாழ்வளிக்கின்றன.

நற்செய்தி வாசகம் : நீரே என் அன்பார்ந்த மகன்; உம்மிடம் நான் பூரிப்படைகின்றேன்.

திருமுழுக்கு ஒரு பழம்பெரும் சடங்கு. யோர்தான் நீர் புனிதமடைந்து விசுவாசத்தில் ஒருவன் சரணாகதியடையும் நீராகின்றது. ஒருவனைத் தூய்மைப்படுத்தி அவனை ஒரு பணியாளனாக்கும் சக்தியை வழங்குகின்றது. யோசுவாவின் வாழ்வில் மக்களோடு ஆற்றைக் கடக்கும் போது இதுவே நடைபெறுகின்றது. வாழ்வு புனிதமாக்கப்பட்டு சக்தி வழங்கப்படுகின்றது. எலியா, எலிசா திருமுழுக்கு அருளப்பர் என்போருக்கும் வழங்கப்படுகின்றது.

இயேசுவின் சீடர் அனைவரும் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க அழைக்கப்படுகின்றனர். இது தம்மை வெறுமையாக்க விடுக்கப்படும் அழைப்பு. திருமுழுக்குக்காக இயேசு வரிசையில் காத்திருப்பதால் நசரேத்தின் 30 வருட நிகழ்வுகளை வெறுமையாக்குகின்றார்.

பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தின் 2ம் பகுதி தன்னை வெறுமையாக்கியவரைப் பற்றிக் கூறுகின்றது. அடிமையின் மனித கோலம் பூண்டவர் தண்ணீரில் மூழ்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம் திறக்கப்பட்டு இறைவல்லமை அவர்மீது இறங்கியது.

30 வருட மறைந்த வாழ்வு வானம் திறந்ததோடு திறந்தது. அவர் தம் வாழ்வைத் தொடங்க தெளிவான செய்தி கொடுக்கப்படுகிறது. பணியாளனாக அழைப்பு விடுக்கப்படுகிறது. இதுதான் திருமுழுக்கின் அனுபவம். முழுமையாக தன்னை மறுப்பது; கிறிஸ்துவோடு இறப்பது; கடந்த காலத்துக்கு இறப்பது. பல வேளைகளில் எமது வாழ்வு இறைதிட்டத்துக்கு முரணாக இருக்கலாம்.

எமது வாழ்வில் "உண்மை மனமாற்றம்" இல்லையென்றால் வேறு எதுவும் இடம்பெறாது. யுத்தகாலத்தின் 2ம் கட்டத்தில் நாம் காண்பது இதுதான்.

நாம் ஒவ்வொருவரும் முழுமையான, ஆழமான மன மாற்றத்துக்கு, அர்ப்பணத்துக்கு அழைக்கப்படுகின்றோம். அவரது நாமத்தின் வல்லமையில் அனுப்பப்படுகின்றோம். தந்தை "இயேசு என் மகன்" என்று யாரைப் பார்த்துக் கூறினாரோ, யார் மீது தூய ஆவி புறாவைப் போல் இறங்கினாரோ அவர் நம்மை ஆட்கொண்டு, திருச்சபையை வளப்படுத்த அனுப்புகிறார். மக்கள் மத்தியில் ஆவியானவரை கொண்டுவரும் கருவிகளாக அனுப்பப்படுகிறோம்.

யோவான் மனமாற்றத்தின் அறிவிப்பாளராக நிற்கிறார். யோர்தான் தண்ணீர் ஆவியின் வல்லமையைக் குறிக்கின்றது. இயேசு – தந்தையின் வதிவிடத்தின் புதிய மோயீசனாயிருக்கின்றார். நாம் ஒவ்வொருவரும் இப்பணியைத் தொடர அழைக்கப்படுகின்றோம்.

நாம் இப்பொழுது அந்த அழைப்பின் பணியை ஆழமாகப் பின்பற்ற அழைக்கப்படுகிறோம். முதல் திருமுழுக்கு முழுமையான அறிவின்றி அரைகுறை அறிவுடன் இயேசு மட்டில் கொள்ளும் அர்ப்பணம். இது மேலோட்டமான அர்ப்பணம்.

2வது அர்ப்பணம்தான் முழு அறிவோடு, சுய நினைவோடு 20 வருட யுத்த இடிபாடுகள் நடுவில் செய்யப்படும் அர்ப்பணம். 20 வருட யுத்த வாழ்வினால் தளர்ந்த எம் விசுவாசம் நம்பிக்கை, புத்துயிர் பெற்று இறையன்பை ஆழப்படுத்தி எம்மை வழி நடத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப் புதன்

**ஏன் இந்த 40 நாட்கள்?**

1. நோவாவின் நாட்களில் 40 இரவும் பகலும் மழை பெய்தது (தொ.நூ: 7:4) ஏன்?

   தீயவர்களின் அழிவின் பின் நல்லவர்கள் கடவுளைச் சந்திக்க.

2. இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் 40 வருடங்கள் பயணம் செய்தனர். புதிய வானம் புதிய பூமியைக் காண.

3. மோயீசன் சீனாய் மலையில் 40 பகலும் 40 இரவும் செலவிட்டார். (வி.ப. 24:18)
   படைத்தவரைப் பார்க்க, அவருடன் பேச.

4. எலியாஸ் ஆண்டவரின் அப்பத்தை உண்டு 40 பகலும் 40 இரவும் பயணம் செய்தார். (1 அரசர் 19:8)
   அழைத்த இறைவனைச் சந்திக்க.

5. நினிவே மக்களும், மன்னனும் 40 நாட்கள் உண்ணா நோன்பு இருந்தனர். (யோனா3:4)
   இறைவனிடம் மன்னிப்புக் கேட்க.

6. இயேசு பாலைவனத்தில் 40 பகலும் 40 இரவும் நோன்பிருந்தார். (மத்: 4:2)
   மீட்பை விடுதலையைப் பெற்றுத்தர.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித நாட்கள் பல புனித நோக்கங்களை அடையப் பயன்படுத்தப் படுகின்றன.

இது புனித காலம் அருளின் காலம்.

நாம் வாழ்வில் பல மாற்றங்களை மேற் கொள்ளுகின்றோம்.

வெளிமாற்றங்கள்:
ஆலயத்தில் - ஊதா, உடை - அலங்கரிப்பு குறைப்பு
- உடல் மாற்றம் - ஒறுத்தல், உபவாசம்
அடிப்படைத் தேவையானது – மனமாற்றம்

யோவேல் கூறுவது போல் உங்கள் உடைகளையல்ல, உள்ளங்களைக் கிழித்துக்கொள்ளுங்கள்
- அதற்கான வழி?

இறைவார்த்தையைக் கேட்போம்
நோன்பின் அர்த்தம் என்ன என்று அறிந்து கொள்ள

செபம் - வார்த்தை வழி வாழ வரங்கேட்போம்
தபம் - நோன்பு – செபமும் நோன்பும் அருளுக்கு இரு கண்கள்.

**வேண்டியது வாழ்க்கை மாற்றம்**

உன் உள்ளத்தை செம்மைப்படுத்துவதற்கு, வீபூதி பூசினால் எப்படி? கல்லறைக்கு வெள்ளையடித்த கதையாகும். உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக் கொண்டிருந்தால் போதுமா? முழு இதயத்தோடு ஆண்டவனிடம் திரும்ப வேண்டாமா? (யோவா 2:12)

செபம், தவம், யாத்திரை செய்த போதும், ஆண்டவா! ஆண்டவா! எனக்குரல் எழுப்பியபோதும், உன் இதயம் ஆண்டவரிடமிருந்து தொலைவில் இருந்தால் பயன் என்ன?

வாழ்வில் வசந்தம் பிறக்க எங்கள் இதயங்களைத் கிழித்துப் பார்ப்போம். ஞானம் பிறக்கும். மனம் மாறி நற்செய்தியை நம்புவோம்.. இவ் அருளின் காலம் நம் வாழ்வில் மாற்றத்தை உருவாக்கி உயிர்ப்பின் மூலம் கிறிஸ்து தரும் புதிய வாழ்வுக்கு நம்மை இட்டு செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலம்
# 1ம் வாரம்

**தொ.நூ. 9 : 8-15; 1இரா 3:18-22; மாற் 1:12-15**

**கருப்பொருள் :** தபத்தினால் பாவச்சோதனைகளை மேற்கொண்டு மனம்திரும்புவோம்.

1ம் வாசகம் : பாவத்தால் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே நிலவிய உறவு முறிந்தது, அதைச் சீர்படுத்தியது உடன்படிக்கை.

2ம் வாசகம் : பெருவெள்ளத்தினால் மனுக்குலத்தின் பாவக் கறைகள் கழுவப்பட்டது போல் திருமுழுக்கு நீரால் நாம் மீட்கப்படுகின்றோம்.

நற்செய்தி வாசகம்: இயேசு சாத்தானால் சோதிக்கப்பட்டார்; வான தூதர் அவருக்குப் பணிவிடை புரிந்தனர். தவக் காலத்தின் முதல் ஞாயிறு இயேசுவின் 40 நாட்கள் பாலைவன வாழ்வை நினைவூட்டுகின்றது.

நம் ஒவ்வொருவர் வாழ்விலும் வெற்றிடங்கள் இடைவெளிகள் உண்டு. இவை தவிர்க்க முடியாதவை. இவற்றிலிருந்து நாம் தப்ப முடியாது. இவை தான் குறியீடாக பாலைவனமென்று அழைக்கப் படுகின்றது. இதைத்தான் இயேசுவின் வாழ்விலும் காண்கின்றோம். இந்நிலை வாழ்வின் வெவ்வேறு கட்டங்களுக்கிடையில் ஏற்படுகின்றது. இயேசுவுக்கு அவரது மறைந்த வாழ்வுக்கும் பகிரங்கப்பணிக்கு மிடையில் ஏற்படுகின்றது. அது மாத்திரமல்ல, அவரது இறப்புக்கும் உயிர்ப்புக்கும், விண்ணேற்புக்கும் தூய ஆவியின் வருகைக்கும் இடைப்பட்ட காலங்களில் ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாழ்விலும் இரு கட்டங்களுக்கு இடைப்பட்ட வாழ்வு இருக்கின்றது. A/L பரீட்சைக்கும் பல்கலைக்கழக அனுமதிக்கும் இடைப்பட்ட காலம்; விரிவுரைகள் முடிவதற்கும் பரீட்சைகள் ஆரம்பமாவதற்கும் இடையில்; பல்கலைக்கழக வாழ்வு முடிந்து வேலைவாய்ப்பு கிடைப்பதற்குமுன்னதான காலம்; இதேபோன்று வாழ்வின் இரு கட்டங்களுக்கு இடைப்பட்ட காலங்கள் பல உண்டு.

இவ்வாறு இரண்டு நிலைகளுக்கு இடைப்பட்ட காலம் - ஒரு பக்கம்; பலவிதமான எண்ணங்கள், அங்கலாய்ப்புக்கள், சோதனைகள், மறு பக்கம் பலவிதமான ஆறுதல்கள், நல்ல தீர்மானங்கள் நிறைந்த காலம்.

தவக்காலமானது நம் வாழ்வில் வரும் இத்தகைய வெற்றிடங்கள் அல்லது இடைவெளிகளை அடையாளங்களாக அல்லது சடங்குகளாக நமக்குக் காட்டுகின்றது.

இயேசுவின் வாழ்வில் புகழீட்டிய அவரது கலிலேயாப் பணிக்கும் பாடுகள் நிறைந்த ஜெருசலேம் பயணத்துக்குமிடையிலான வாழ்வின் நிகழ்வுகளை அடையாளமாகக் காட்டுகின்றது. இந்தக் குறிப்பிட்ட காலம்தான் பலவிதமான உள்ளப் போராட்டங்கள் நிறைந்த காலம். அவரது அதிகாரம் நிறைந்த போதனைகள், வல்லமை நிறைந்த புதுமைகளைப் பின்நோக்கிப் பார்த்து மக்களின் வரவேற்புக்கள், ஆர்ப்பரிப்புக்கள் என்பவற்றை புதிய ஒளியில் காணவும், பல்வேறு விதமான எதிர்பார்ப்புக்கள் நிறைந்த அப்போஸ்தலர்களுக்கு ஆறுதல் கூறவும் முடிகிறது. தான் ஏற்றுக் கொண்ட அடிப்படை அழைப்பை உணர்ந்து, தந்தையின் திட்டங்களுக்கும் விருப்பங்களுக்கும் தன்னை அர்ப்பணித்து வாழ இயேசுவுக்கு உந்து சக்தியைக் கொடுக்கிறது.

> எல்லாம் விதிவசப்படிதான் நடக்கும்....
> என்பதனை மறந்து விடு!
> இளமை தோளில் இருக்கும் போதே
> எது நிஜம் என்பதைக்
> காட்டி விடு!
> அப்போது - காலம் புரண்டு படுக்கும்.
>
> (வைரமுத்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலம்
# 2ம் வாரம்

**தொ.நூ.22:1-2,9,10-13,15-18-15; உரோ 8:31-34;மாற் 9:2-01**

**கருப்பொருள் :** தியாகமுள்ள விசுவாசத்தினால் நாம் இறை மாட்சியில் பங்கு கொள்ள முடியும்.

**1ம் வாசகம் :** ஆபிரகாம் தம் சொந்த மகனைப் பலியிடத் துணிந்தார். பரம தந்தையின் அன்பிற்கு அவர் ஓர் முன்னடையாளம்.

**2ம் வாசகம் :** பரம தந்தை நம் மீட்புக்காக தம் திரு மகனைக் கையளிக்கத் தயங்கவில்லை.

**நற்செய்தி வாசகம் :** பாடுகளை ஏற்கும் இயேசு பரம தந்தையின் அன்பார்ந்த மகிமைசேர் இறைமகனானார்.

சென்ற வாரம் இயேசு பாலைவனத்தில் 40 பகலும் 40 இரவும் செலவழித்தார் என்பதைப் பார்த்தோம். பாலைவன அனுபவம் உடல், உள, ஆன்மீக ரீதியாக ஏற்படுபவை. 1ம் வாசகத்தில் ஆபிரகாமுக்கு இவ் அனுபவம் தன் மகனைப் பலியிடுவதால் ஏற்பட்டது. இவ் அனுபவத்தின் விளைவு என்னவென்றால் ஆபிரகாம் புதிய சமூகத்தின் தந்தையாகிறார். தமிழ் மக்களாகிய நமக்கு இப் பாலைவன அனுபவம் போரின் கொடுமையால், நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப் படுவதனால் ஏற்படுகின்றது. நம் ஒவ்வொருவரது வாழ்விலும் இப்பாலைவன அனுபவம் ஏற்படுகின்றது. இன்றைய நற்செய்தி தபோர் மலையில் இயேசு மறுரூபமானது பற்றிக் கூறுகிறது. தபசு காலம் நாம் மலைமீது தற்காலிமாக நிற்கும் நேரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நேரத்திலே உள்ளத்தின் அமைதியில், மௌனத்தில் இறைவார்த்தையைக் கேட்க வேண்டும். "மகனைப் பலியிடு" என்று ஆண்டவர் சொன்னதை உள்ளத்தின் அமைதியில் சிந்தித்துக் கொண்டு மலைமீது ஏறிய ஆபிரகாம் 'நிறுத்து' என்ற 2வது வாக்கைக் கேட்டார். இன்று எரிகுண்டுகளினால் எமது மக்கள் பலியாகும் காலம். உள்ளத்து அமைதி, விசுவாசத்தோடு பயணிப்போர்தான் 'நிறுத்து' என்ற வாக்கைக் கேட்கமுடியும். மலைமீது அனுபவிக்கும் இன்பத்தை இக்காலத்தில் நாம் பெறவேண்டும். மலைமீது ஏறுவதன் மூலம் மலைக்கு அப்பால் என்ன உள்ளது என்று அறிய வேண்டும். இல்லையேல் நாளாந்தம் வாழ்வின் பள்ளத்தாக்குகளுக்குள் புதைந்து கிடப்போம். இந்த 40 நாட்களும் நாம் மலைக்கு அப்பால் என்ன உள்ளது என்பதை உணர வேண்டும். எமது விசுவாசம், உயிர்ப்பு, விண்ணக வாழ்வு என்பவற்றை உணரவேண்டும்.

பலர் மலைமீது மூன்று சிலுவைகளைத்தான் பார்க்கின்றனர். ஆபிரகாம் மலைமீது தன் மகன் பலியாகும் பீடத்தைத்தான் கண்டார். இயேசுவோ தன் சீடருக்கு மலைக்கு அப்பால் உள்ளவற்றை உணர்த்துகிறார். நம்முள் பலர் காலியான கல்லறையைத்தான் காணுகின்றோம். இயேசுவோ கல்லறைக்கு அப்பால் உள்ளவற்றை உணர்த்துகிறார்.

இந்த 40 நாட்களும் நமக்கு முகில்களுக்குள் இருக்கும் அனுபவத்தைத் தர வேண்டும். தபக்கால முயற்சிகளால் கடவுளுடைய பிரசன்னத்தை உணர வேண்டும். அது நாம் கீழே இறங்கிவந்து நாளாந்த சிலுவைகளைச் சுமக்கும் சக்தியை நமக்குத் தர வேண்டும். மலை உச்சியில் பெற்ற ஒளி பள்ளத்தாக்கின் ஊடாகச் செல்ல ஒளி கொடுக்க வேண்டும்.

பேதுரு, யாக்கோப்பு, யோவான் என்னும் இந்த மூன்று அப்போஸ்தலர்களும் மலையில் பெற்ற ஒளியினால் இயேசுவோடு மிக நெருக்கமாக இணைந்திருந்தனர். ஜெத்சமெனி, கல்வாரி, கல்லறை ஈறாகத் தொடர்ந்தனர்.

நமக்கும் இத் தபக்காலம் இயேசுவோடு மிக நெருக்கமாக ஒன்றித்திருக்கும் அருளின் காலம். வாழ்விலே தபோர், கல்வாரி என்ற இரு மலைகளையும் பிரிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலம்
# 3ம் வாரம்

**வி.ப 20 : 1-17; 1கொரி 1:22-25; யோவா் 2:13-25**

**கருப்பொருள் :** சிலுவையின் வழியாகவே நாம் மீட்பை அடைய முடியும்.

**1ம் வாசகம் :** பத்துக் கற்பனைகள்

**2ம் வாசகம் :** சிலுவையில் அறையுண்ட கிறிஸ்து உலகிற்கு ஓர் இடறல்; விசுவசிப்பவர்களுக்கு கடவுளின் வல்லமை.

**நற்செய்தி வாசகம் :** மனிதன் இடித்து அழிக்கமுடியாத திருக்கோயில் கிறிஸ்து.

இன்றைய 1ம் வாசகத்தில், கடவுள் "நான் உன் கடவுளாகிய ஆண்டவர். என்னைத்தவிர வேறு தெய்வங்கள் உனக்கு இல்லாது போவதாக" என்று கூறுகிறார். முதல் வாசகம் கடவுள் ஒருவரே என்றும் நாம் அவருக்குப் பிரமாணிக்கமாக வாழ வேண்டும் என்று கூறுகிறது.

இன்றைய போர்க்காலச் செய்திகளை எல்லாம் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்றவை நம் நாட்டுத் தலைவருடைய கண்களுடாகவே காட்டுகின்றன; நாமும் பார்க்க வேண்டியுள்ளது. ஆனால், கிறிஸ்தவர்களாகிய நாம் இவை அனைத்தையும் கிறீஸ்துவின் கண்களுடாக, கிறிஸ்துவின் கண்ணோட்டத்திலே பார்க்க வேண்டும். இன்றைய முதலாவது வாசகத்தைப் பார்க்கும்போது முதலாவது வசனத்தை அதாவது "நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை எடுத்துவிட்டால் இன்றைய அரசியலைப் போலவே அது தோன்றுகின்றது. (முதல் பந்தியைப் வாசிக்கவும்) ஆண்டவர் கூறுவதற்கும் அரசியல்வாதிகள் கூறுவதற்கும் எதுவித வித்தியாசமும் இல்லாதது போல் தெரிகின்றது. ஆண்டவர் கூறுவதற்கும் அரசியல் வாதிகள் கூறுவதற்கும் என்ன வித்தியாசம்?

முக்கியமான இந்தப் பிரச்சினைக்கான பதிலை இன்றைய இரண்டாம் வாசகம் சொல்கிறது. யூதர்கள் புதுமைகள் வேண்டு மென்கின்றனர். இன்று நம்முள் சிலர் "வெற்றிகள்", எத்தனையோ வருடங்களுக்குப் பின்னர் நடைபெறும் "அதிசயங்கள்" என்பவற்றையே பறைசாற்றுகின்றனர். கிரேக்கர்கள் ஞானத்தை நாடுகின்றனர். இன்று உலகநாடுகள் உலக ஞானம், சுடலை ஞானம், பிந்திய ஞானம் என்று பல ஞானங்களைப் பற்றிப் பேசுகின்றனர். ஆனால், கிறிஸ்தவருடைய ஞானமோ சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவிலேயே தங்கியிருக்கின்றது.

இன்றைய நற்செய்தி ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்வுபற்றிக் கூறுகிறது. இன்று "நானே கடவுள்" என்ற முதல் வசனத்தை எடுத்துவிட்டால் மற்றவையனைத்தும் வியாபாரமாக மாறுகின்றதைப் பார்க்கின்றோம். இன்று அமெரிக்கா போன்ற நாடுகளில் பலர் பொருள் எல்லாம் இழந்த நிலைக்குப் போவதற்குக் காரணம்? வாங்கு – அனுபவி பின்னர் கொடுக்கலாம் (Buy-enjoy-pay later) என்ற பழக்கத்திலே வாழுகின்றனர். இன்று நமது சமயவாழ்வில் நடப்பது இதுதான். எத்தனையோ பேருடைய வாழ்வில் எதுவும் இல்லா நிலை. இயேசு சென்றபோது ஆலயத்தில் நடைபெற்றதும் இதுதான் - எதுவும் இல்லாத நிலை "அங்கே கடவுள் இருக்கவில்லை" கடவுளின் இல்லம் சந்தையாக மாறிஇருந்தது.

இன்றும் ஆண்டவராகிய கடவுள் நாமே என்பதை உணர்ந்து, அந்த இறை உணர்வை எமது வாழ்வில் கொண்டிராதுபோனால் எந்தச் சமயமும் வெறும் சந்தையாகவோ வாணிபக்கூடமாகவோ மாறிவிடும். எங்களுடைய வழிபாட்டு நேரங்களில் எமது உள்ளங்களில் இறை உணர்வு, விசுவாசம், இறை பிரசன்னம் நிரம்பியுள்ளதா? அல்லது எல்லாமே வெளிச் சடங்குகளும் வெற்று வார்த்தைகளும்தானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானே உன் கடவுள்" என்று கடவுள் சொல்லும் பொழுது கடவுளுக்குரிய வழியில் அவர் நம்மை வழிநடத்துவார். இதை நாம் முழுமையாக நம்பவேண்டும். ஏழைகளைப் பார்த்து நானே உன் கடவுள் என்று கடவுள் கூறும்போது அவர் நம்மை பராமரிப்பார். ஏனெனில் 40 வருடங்களாக பாலைவனத்தில் பராமரித்த ஆண்டவர் நம்மையும் பராமரிப்பார். இதை மனதார ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு நோயாளியிடம் கடவுள் "நானே ஆண்டவர்" என்று கூறும் பொழுது, அவர் குணப்படுத்துகின்றார் (வி.ப.15:26). ஆனால், கடவுள் "நானே ஆண்டவர்" என்று சொல்வது மாத்திரம் அல்ல "நீங்கள் என் மக்களாக இருங்கள்" என்றும் கூறுகின்றார்.

மக்கள் எத்தகைய நெருக்கீடுகள் மத்தியில் வாழும் பொழுதும் நான் உங்கள் கடவுளாக இருக்கிறேன் என்று கடவுள் கூறும்பொழுது யார் யார் அதை உள்ளத்தில் முழுமையாக ஏற்றுக்கொள்ளுகிறார் களோ, அதற்கேற்ப வாழுகின்றார்களோ, அவர்கள் கடவுளின் வல்ல செயல்களைக் காண்பார்கள். இன்றைய நற்செய்தியிலும் இயேசு இந்த ஆலயத்தை இடியுங்கள்; மூன்று நாளில் கட்டுவேன் என்று கூறுகின்றார். அதாவது அவர் மீண்டும் உயிர்த்தெழுவார் என்பதை உறுதியாகக் கூறுகின்றார்.

கடவுள் நம்பிக்கையே எனக்கு இல்லாமல் போகிறது என்று பலர் கூறும் இன்றைய சூழலில் நாம் எமது விசுவாசத்தை, கடவுள் நம்பிக்கையைப் புதுப்பித்து புத்துயிர் பெறுவோம்.

படைக்கின்ற பணி இறைவனுக்குரிய ஒன்று.
அங்கே இறையாற்றலுக்குத் தடைவிதிக்க எதுவுமேயில்லை
ஆனால், துடைக்கின்ற பணியோ, மனிதனை
தூய்மைப்படுத்துகின்ற பணியோ
அவனது சுதந்திரத்தை மதித்து நடக்கவேண்டியதொன்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலம் 4ம் வாரம்

**சா.ஞா 36 : 14-16,19-23; எபேசி 2:4-10; யோவா 3:14-21**

**கருப்பொருள் :** பாவத்தை வெறுத்து மீட்பின் ஒளியாகிய கிறிஸ்துவை விசுவசிப்போம்.

1ம் **வாசகம்** : இறைமக்களின் அரசியல் அடிமைத்தனத்திலும், விடுதலையிலும் இறைவனின் சினமும் இரக்கமும் தெரியலாயிற்று.

2ம் **வாசகம்** : பாவத்தினால் இறந்திருந்த நாம் இறையருளால் மீட்கப்பட்டோம்.

நற்செய்தி வாசகம் : கடவுள் தம் மகனை உலகத்திற்கு அனுப்பியது அவர் வழியாக உலகம் மீட்புப் பெறவே.

இன்றைய வழிபாட்டில் இருளின் வல்லமை பற்றியும் அந்த இருள் எவ்வாறு ஒளியை முறியடிக்கக் கங்கணம் கட்டுகின்றது என்பது பற்றியும் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

1ம் வாசகம்: கிரேக்க அதிகாரத்தில் யூதர் தமக்கு வந்த எருசலேமின் அழிவு, பபிலோனின் வீழ்ச்சி, சைரஸ் மன்னனின் ஆட்சி என்பன போன்ற இருளான நிலைகள்பற்றிச் சிந்திக்கின்றனர். தமது வரலாற்றின் இருண்ட காலத்தைப் புதிய ஒளியில் காணுகின்றனர். தம்மை மேற்கொண்ட இருண்ட நிலையையும் கண்டனர். நாமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது இருண்ட காலங்களை இறைவனின் ஒளியில் காண்பது அவசியம்.

**இருளான பக்கம்** : தமது பிரமாணிக்கமின்மை, தேவாலயத்தின் அவசங்கை, இறைவாக்கினரின் நிராகரிப்பு, ஜெருசலேமின் அழிவு, நாடு கடத்தப்படல் என்பன.

**ஒளியான பக்கம்** : புதிய அதிகாரத்தின் எழுச்சி, சைரஸ் மன்னன் இறைதிட்டத்தின் கருவியாதல் என்பன. ஒட்டு மொத்தமாக ஆண்டவரின் அசைவுக்கு ஏற்றவாறு மக்கள் நடக்கின்றனர். இறைவனின் திட்டத்திற்கு எதிராக வாழ்ந்து நாம் அமைதி, சமாதானத்தை நம் உள்ளத்தில் அனுபவிக்க முடியாது. அன்னிய மன்னனான சைரஸ் மன்னன் யூதரை மீட்பவராகப் பயன்படுத்தப்படுகின்றார். "எரேமியாஸ் உரைத்த ஆண்டவரின் வாய்மொழிகள் நிறைவேறும் வண்ணம் ஆண்டவர் அவனது மனத்தை தூண்டி எழுப்பினார்" என்று முதலாவது வாசகம் கூறுகின்றது. இன்று நமது வாழ்விலும் இறைவன் பல மனிதர்களூடாக நம்மை உருவாக்குகிறார்; வழிநடத்துகிறார்.

இன்றைய நற்செய்தி நாம் மீண்டும் வாழ்வு பெறுவது பற்றிக் கூறுகின்றது. நிலத்திலே ஊரும்போது சாபமாகக் கருதப்படும் சர்ப்பம் பாலைவனத்தில் ஒரு தண்டின்மேல் உயர்த்தப்படும்பொழுது வாழ்வின் ஊற்றாக மாறுகின்றது. எத்தனையோ இஸ்ராயேல் மக்களைத் தீண்டிய அந்த சர்ப்பம் இப்பொழுது அவர்கள் வாழும்பொருட்டு உயர்த்தப் பட்டுள்ளது. அதேபோன்று நமக்காக பாவமே உருவாகியவர் சிலுவையிலே உயர்த்தப்பட்டார். மூன்று ஆணிகளிலேயே தொங்க விடப்பட்டார். பாலைநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டதைப் போல மானிட மகனும் நாம் வாழ்வு பெறும் பொருட்டு உயர்த்தப்பட்டவர்; நம் அனைவர் மீதும் அன்பு கூர்ந்தார். நம்மீது கடவுள் கொண்ட அன்பை யோவான் மூன்று சுற்று வட்டங்கள் மூலமாக விளக்குகின்றார். நம் ஒவ்வொருவருடைய வாழ்வின் அனுபவங்களும் இதே போன்று சுற்று வட்டங்களாகவே போய்க்கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்று நம்முடைய வாழ்வில் ஒளி வரும்பொழுது இருள் கலைத்துத் துரத்துகிறது. நம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்விலும் குடும்ப வாழ்வு - நாட்டு நிலைமையிலும் ஒளிக்கும் இருளுக்குமான இப்போராட்டம் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. எமது நாட்டு நிலையிலும் முதலில் அமைதி அல்லது சமாதானம் என்னும் பெரும் ஒளி காட்டப்படுகின்றது. அதன்பின் உடனடியாக அதை இருள் அடித்துக்கொண்டு போகின்றது. நிக்கொதேமு எப்படிப்பட்டவர்? ஒளியிடம் வரவேண்டுமென்ற விருப்பம் உடையவர். ஆனால், இருளுக்கு (மற்ற பரிசேயர், சதுசேயருக்குப்) பயம். நிக்கொதேமுவும் இயேசுவின் ஒளியை பின்பற்ற ஆசைப்படுகின்றார். ஆனால், இருளுக்கு அஞ்சுகின்றார். ஒளிக்கும் இருளுக்குமான இப்போராட்டத்தில் ஒளியின் மக்கள் கடவுளோடு இணைந்தே அனைத்தையும் செய்யவேண்டும். நிக்கோதேமுவுக்கு சொல்லப்பட்டவை, அன்று எல்லா சீடருக்கும் சொல்லப்பட்டவையே. இன்று இங்கிருக்கும் நம் ஒவ்வொருவருக்கும் சொல்லப்படுகின்றது. இருள் நம்மைக் கவ்விக்கொள்ளாதவாறு நம் உள்ளத்தில் இருக்கும் ஒளியை செபம், அருட்சாதனங்கள், இறைவார்த்தை என்பவற்றினால் தூண்டிக் கொண்டே இருக்கவேண்டும். அதற்கான அருளின் காலம் தான் இத் தபக்காலம்.

"கவலையில்லாத மனிதன்
உலகத்தையறிந்தவன், துணிந்தவன் - அவனே
கவலையில்லாத மனிதன்......!

போவதைக்கண்டு கலங்காமல்
வருவதைக்கண்டு மயங்காமல்
மெய் தளராமல் கை நடுங்காமல்
உண்மையை, பொய்யை உணர்ந்தவனே
கவலையில்லாத மனிதன்......!

காலத்தை வென்றவன் வீரனடா....!
நல்லின்பத்தைத் தேடி உறவாடு.....!
நீ எழுந்திடு,மனிதா,விளையாடு.....!

(கவியரசு கண்ணதாசன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலம்
# 5ம் வாரம்

**எரேமி 31 : 31-34; எபி 5:7-9; யோவா 12:20-33**

கருப்பொருள் : சுயநலம் என்னும் பாவத்திற்கு மரித்து இறை வாழ்வில் நிறைந்திருப்போம்.

1ம் வாசகம் : கடவுள் நம்மோடு ஒரு புதிய உடன் படிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

2ம் வாசகம் : கீழ்ப்படிதலைத் துய்த்துணர்ந்தார். முடிவில்லா மீட்பின் காரணரானார்.

நற்செய்தி வாசகம் : கிறிஸ்து தம் பாடுகளினாலேயே மகிமையடைய வேண்டும் என்பது தந்தையின் திருவுளம்.

யோவான் நற்செய்தியில் எத்தனையோ உரையாடல்கள் இடம் பெறுகின்றன.

உதாரணம்: நிக்கொதேமு, சமாரியப்பெண்.

இன்றைய நற்செய்தியில் கிரேக்கர்கள் வந்து "ஐயா இயேசுவைக் காண விரும்புகிறோம்" என்று கேட்டார்கள் (யோவான் 12:21). இயேசுவை அவர்கள் காண்பதற்கு பிலிப்புவும், அந்திரேயாவும் உதவி புரிகின்றார்கள். தவக்காலப் பயணத்தின் இக்கட்டத்தில் நம் உள்ளத்தின் தேட்டமும் தேடுதலும் இதுவாக இருப்பது சிறப்பாகும். தவக்காலம் தனித்துச் செய்யும் பயணமும் அல்ல, நோக்கமின்றிச் செய்யும் பயணமும் அல்ல. மாறாக இயேசுவின் அனுபவத்தைப் பெறுவதற்கு நாம் செய்யும் புதிய தேடலாகும். இது இயேசுவுடன் செய்யும் பயணம் என்பதால் ஒருவர் ஒருவருடைய துணையை நாடிச் செய்யும் பயணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோவான் நற்செய்தியில் "நேரம்" என்பது முக்கியமான ஒரு சொல்லாகும். அது மீட்பின் நேரம், மகிமையின் நேரம் ஆகும். யோவான் நற்செய்தியை அருள் அடையாளத்தின் புத்தகம், மகிமையின் புத்தகம் என இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். இயேசு இங்கே மகிமையைப் பற்றிக் குறிப்பிடுகிறார் "இப்பொழுது என் உள்ளம் கலக்கமுற்றது" என்று குறிப்பிடும்பொழுது, அவர் குறிப்பிடும் மகிமை அவரது மரணம்; அதுவும் சிலுவை மரணம். பிரிக்க முடியாத இறைபற்றுக் கொண்டு வாழ்ந்தவர் இயேசு. முதல் வாசகத்தில் குறிப்பிடுவதுபோல கற்பலகையில் எழுதப்பட்ட ஆண்டவனின் கட்டளையுடன் நின்றுவிடாமல், உள்ளத்தில் எழுதப்பட்ட இறை சித்தத்தைத் தேடுவதில் நாட்டம் கொண்டார். அத்தேடலின் விளைவாக இயேசு கீழ்ப்படிபவர் ஆனார். இயேசுவின் கீழ்ப்படிவானது மென்மையான மலர் போன்றோ பஞ்சணை போன்றோ அவருக்குக் கிடைத்ததல்ல. மாறாக இன்றைய இரண்டாம் வாசகம் குறிப்பிடுவதுபோல "துன்பங்களை சந்தித்து, கண்ணீர் சிந்தி, மன்றாடிக் குரலெழுப்பி கீழ்ப்படிவைக் கற்றுக்கொண்டார்" (எபி. 5:7-8).

கிறிஸ்துவின் சீடத்துவம் என்பது அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றுவது. இயேசுவோடு நடப்பவர் அவரோடு இருக்கிறார். அவரைப் பின்பற்றுவது எளிதல்ல. "என் உள்ளம் கலக்கமுற்றுள்ளது" என்று இன்றைய நற்செய்தியின் 27ம் வசனம் குறிப்பிடுகின்றது. இயேசுவைப் பின்பற்றுவது பெரும் போராட்டம். போராட்டத்தில் நிலைத்திருப்பது கடினம். ஏதோ அறிவு ரீதியாக அறிவதும் சிந்திப்பதும் விவாதிப்பதும் கிறிஸ்தவம் அல்ல. இயேசுவின் முழு வாழ்விலும் பங்குபற்ற வேண்டும். தந்தைக்கு கீழ்ப்படிந்தவர் "என்னை மகிமைப்படுத்தும்" என்று கூறுகிறார். ஆம்; மரணத்திற்கு இட்டுச் செல்லப்படும் அவர் மகிமைப்படுத்தப்படுகின்றார். சிலுவையில் அறையப்படும் இயேசுவுக்கு ஜெருசலேம் பாடுகள், மரணம், உயிர்ப்பு போன்றவை மகிமையின் இடம் போல, நமது மக்களுக்கு இன்று வன்னிப்பாடுகள், மரணம் என்பன மகிமையின் இடமாகின்றன. இயேசு அனுபவித்த பாடுகள் மரணத்தை நமது மக்கள் இன்று அனுபவிக்கின்றார்கள். இன்று வன்னியிலே இடம் பெறும் உரையாடல் "அன்று கண்ணி வெடிகளுக்கு மேலாக கவனமாக நடந்தோம். இன்று கால்வைக்கும் இடம் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த சடலங்கள்". இறந்த சடலங்களைப் பார்க்கிறவர்கள், "அவர்கள் கொடுத்து வைத்தவர்கள்" என்று கூறுகின்றார்கள். அவர்கள் ஒரே முறையில் இறந்து விட்டார்கள் நாம் நாளாந்தம் செத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நேரத்திலே அவர்கள் மட்டில் நமது மனநிலை, நாம் அவர்களுக்காகச் செய்கின்ற பங்களிப்பு என்ன? முன்னர் 40, 50 என்று இறந்தவர்கள் இப்பொழுது 100, 120 என்று இறந்துகொண்டு இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நேரத்திலே எமது பங்களிப்பு என்ன என்று கேட்டால் "எமது வேலைகளை நாம் செய்யத்தானே வேண்டும்" "இந்தக் காலத்தில் தானே மரணம் நெருங்கு முன் நாம் அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவிக்க வேண்டும்" என்கிறார்கள்.

ஈடுபாட்டில் தான் கிறிஸ்தவ வாழ்வு மலர்கிறது. அடுத்தவருக்கு நடக்கும் பொழுது எனக்கு அக்கறை இல்லை என்றால், எனக்கு நடக்கும்பொழுது அக்கறை கொள்ள அடுத்தவர் என்று ஒருவர் இருக்கமாட்டார். எனவே, மகிமையின் இந்த நேரத்தை தவறவிடாது கடைப்பிடிப்போம்.

படைக்கின்ற பணி இறைவனுக்குரிய ஒன்று.
அங்கே இறையாற்றலுக்குத் தடைவிதிக்க எதுவுமேயில்லை
ஆனால், துடைக்கின்ற பணியோ, மனிதனை
தூய்மைப்படுத்துகின்ற பணியோ
அவனது சுதந்திரத்தை மதித்து நடக்கவேண்டியதொன்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாடுகளின் ஞாயிறு

**எசா 50 : 4-7; பிலி 2:6-11; மாற். 1-15,47**

1ம் வாசகம் : நிந்தை கூறுவோரிடமிருந்து என் முகத்தைத் திருப்பிக் கொள்ளவில்லை; அதற்காக வெட்கப்படேன் என்பது எனக்குத் தெரியும்.

2ம் வாசகம் : தம்மைத் தாழ்த்தினார்; ஆதலாற்றான் கடவுள் அவரை உயர்த்தினார்.

**நற்செய்தி வாசகம் :** இயேசுவைச் சூழ்ச்சியாய்ப் பிடித்துக் கொலை செய்ய வகை தேடிக்கொண்டிருந்தார்கள்.

## பவனி

இது ஒரு நீண்ட 33 வருடப் பயணம். நித்தியத்தில் நிறைவேறுகின்ற வாழ்க்கைப் பயணம். முதலில் 30 வருடம் பின்னர் 3 வருடம்; பின்னர் 3 நாட்கள். 3ம் நாளிலே புதிய படைப்பு தோன்றுகின்றது. ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு மறைபொருள்; மறைபொருளோடு ஒரு சிறிய வெளிப்பாடு.

ஆலயத்தில் நடந்ததுபோல, தபோரில் நடந்ததுபோல, யோர்தானில் ஏற்பட்டதுபோல இன்னும் உயிர்ப்பிலும் ஏற்பட்டு இந்தச் சுற்றுவட்டமானது பரிசுத்த ஆவியின் பொழிவோடு நிறைவு பெறுகின்றது. இந்தப் பரிசுத்த ஆவி இதற்குமுன் நிகழ்ந்த அனைத்தையும் மீண்டும் உணர்ந்து வாழச் செய்கின்றார்.

குருத்தோலைப் பவனியானது 3 வருடப் பணிவாழ்வின் உச்சக்கட்டம். கலிலேயாவிலிருந்து ஜெருசலேமுக்குச் செல்லும் மக்களுக்கு இது இவ்வுலக மகிமையையும் பெருமையையும் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று. இப்பவனியின் விளைவாக இயேசு பெரும் அரசராக ஏற்படுத்தப்படுவார் என்னும் எதிர்பார்ப்பை ஊட்டும் ஒன்று.

ஆனால், இயேசுவுக்கோ இவை அனைத்தும் தொடர் அடையாளங்களாய் அமைகின்றன. இந்தப் பவனி அவரது மகிமையின் நேரமாக அமைகின்றது. இந்தப் பவனி அவரை பெத்தானி, இராவுணவு, ஒலிவத்தோப்பு மலை, பிடிபடுதல், கசையடி போன்றவற்றிற்கு இட்டுச் செல்கிறது. இறுதியாக அவரது இறப்பு உயிர்ப்பிலே நிறைவேறுகிறது. மேற்சொல்லப்பட்ட இரண்டு கண்ணோட்டங்களிலும் நாம் ஈடுபட்டு நல்லதைத் தேர்ந்து கொள்ளவேண்டும்.

மகிமைக்கு உண்மையான வழி என்ன? துன்பப் பாத்திரம், விலாவைக் குத்திய ஈட்டி, இறுதியாக வெறுமையான கல்லறை. இரண்டு மறைபொருளிலும் பவனிகள் இருக்கின்றன. ஒன்று ஏமாற்றத்திற்கும் மற்றது புதுப்படைப்பின் திட்டத்திற்கும் இட்டுச் செல்கின்றன.

நாம் இப்பொழுது இந்நாட்களில் இந்த மறை பொருள்களில் பங்குபற்ற அழைக்கப்படுகின்றோம். அவருடைய இறப்பு, உயிர்ப்பில் மலருகின்ற மறைபொருளில் பங்குபற்ற நாம் அழைக்கப்படுகின்றோம்.

> என்னை அனுப்பியவர் என்னோடு இருக்கின்றார். என்னை அவர் தனியே விட்டுவிடவில்லை எனத் தம் வாழ்க்கை அனுபவத்தை வெளிப்படுத்தும் கிறிஸ்து இறைவனின் பிரதிநிதிகளிடம் இடம்பெறவேண்டிய இறை பிரசன்னத்தை வலியுறுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரின் இறுதி இராவுணவு
# பெரிய வியாழன்

இன்று இயேசு குருத்துவத்தையும் நற்கருணையையும் ஏற்படுத்திய நாள். நாம் எல்லோருமே திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவின் பொதுக் குருத்துவத்தில் பங்குபற்றுகின்றோம். குருத்துவம் காட்டும் பலி வாழ்வினதும் நற்கருணை காட்டும் சகோதரத்துவ வாழ்வினதும் ஆழமான அர்த்தங்களை இன்றைய பலி நமக்கு உணர்த்துகின்றது.

இன்றைய முதலாம் வாசகம் அற்புதமான விதத்தில் இறைவன் விடுதலை வாழ்வுக்கு மக்களை இட்டுச் சென்றதையும், ஆனால் அவர்களோ மீண்டும் மீண்டும் தம் பழைய வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்ததையும் கூறுகின்றது.

அவ்விடத்திலேயே நாங்கள் உட்கார்ந்து வயிராற அப்பம் உண்டோம். (வி.ப 16:3)

தண்ணீர் இல்லாதபோது முறுமுறுத்து "ஏன் இங்கு கூட்டி வந்தீர்". (17:3)

தங்களுக்காக தெய்வங்களை செய்து வழிபடத் தொடங்கினார்கள். (32:)

மீண்டும் மீண்டும் பழைய வாழ்வுக்கே சென்றதால் தண்டனை மூலம் திருத்தவிரும்பி கொள்ளிவாய் பாம்புகளால் கடியுண்டு இறந்தார். (எண் 21:8)

**95ம் ஆண்டின் இடப்பெயர்வு அனுபவம் (அனைத்தையும் விட்டுப் போவது எவ்வளவு கடினம்)**

எமது வாழ்வில் பழையதை, பழக்கப்பட்டதை, கட்டிக் காத்ததை விட்டுவிடுவது கடினம். பழைய பழக்கங்கள், தவறான பழக்கங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை முறைகள்... எமது மனம், உடலிலிருந்து எழும் எதிர்ப்புக்கள்... கடந்த 40 நாட்களும் எத்தனை தீர்மானங்களை, பாவசங்கீர்த்தனங்களைச் செய்தோம் என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

இறைவனை நோக்கிய விடுதலைப் பயணத்தின் 2ம் கட்டம் இயேசுவோடு நடத்தல்; புதிய சமுதாயத்தை, சகோதர சமுதாயத்தை உருவாக்கல்.

இதைத்தான் இன்றைய நற்செய்தி காட்டுகிறது.

எப்படி இப்புதிய சமூகத்தை உருவாக்குவது?

மற்றவர்களுக்குப் பணிபுரிகின்ற, பாதம் கழுவுகின்ற நிலையில்தான் இப்புதிய சமுதாயம் உருவாகும். மற்றவர்களை உயர்வாகக் கருதும், புரிந்து கொள்ளும், மற்றவர்களுக்காக தியாகம் செய்யும் நிலையில்தான் இப்புதிய சமுதாயம் உருவாகும்.

நீங்கள் ஒவ்வொருவரும் பங்குக்காக, குடும்பத்துக்காக செய்யும் தியாகம் பங்குக்காகப் பணிபுரியும்போது, பொது நன்மைக்காக தியாகம் செய்யும்போது மற்றவர்களிடமிருந்து வரும் வீணான குற்றச்சாட்டுக்கள் போன்ற தியாகங்கள் மூலம் தான் நாம் புதிய சமுதாயத்தை உருவாக்குகிறோம்.

அதே போன்று பெற்றோர் பிள்ளைகளுக்காகத் தம்மையே உருக்கும்போது பிள்ளைகளின் அலட்சியப்போக்கு, நன்றியற்ற தனங்கள்...

வயோதிபர், நோயாளிகளை புரிந்துணர்வோடு பராமரித்தல்... இவைகள்தான் பாதம் கழுவும் நேரங்கள்...

> அடுத்தவன் முதுகில் ஏறி நிற்பதுதான்
> முன்னேற்றத்தின் புதிய இலக்கணமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாடுகளின் புனித வெள்ளி

சிலுவையை நிமிர்ந்து பாராயோ!

நம் ஒவ்வொருவருக்காகவும் உயர்த்தப்பட்டுள்ள சிலுவையை உற்றுப் பார்ப்போம். ஆலயத்தில் கம்பீரமாகக் காட்சியளிப்பது சிலுவை; வீட்டில் தொங்குவது சிலுவை. எதையும் தொடங்குமுன் நம்மீது வரைவது சிலுவை; நம் கழுத்தில் தொங்குவது சிலுவை; இது வெறும் அழகுப் பொருளா?

அடையாளமாக நாம் ஏற்றுக்கொண்டது தான் வாழ்வில் வருகின்றது.

- எவ்வித அன்பு, பாசம், புரிந்துணர்வு இல்லாத கணவனால் கொடுமைப் படுத்தப்படுகின்ற மனைவி சுமக்கின்ற சிலுவைகள்!
- எவ்வித அன்பு, பாசம், புரிந்துணர்வு இல்லாத மனைவியின் நாளாந்த நச்சரிப்பினால் கணவன் சுமக்கின்ற சிலுவைகள்!
- மற்றவர்களோடு வாழும்போது எனக்கு ஏற்படும் சிலுவைகள்
- தவறாக என்னைத் தீர்ப்பிடுவதால், என்னைப்பற்றி அவதூறான கதைகளை பரப்புவதால் நான் செய்யாத குற்றங்களை என்மேல் சுமத்துவதால் உண்டாகும் சிலுவைகள்
- வறுமை எனது குடும்பத்தை வாட்டும்போது ஏற்படும் சிலுவைகள்.
- இளமைப் பருவத்திலே குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நான் இன்னும் பெற்றோரிடம் கையேந்தி நிற்கும் போது; என் எதிர்கால வாழ்வு இன்னும் எனக்கு இருண்ட வாழ்வாக இருக்கும் போது; எத்தனையோ விதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்வாழ்வில் வந்த சிலுவைகள்!!

- என் இறைவா! என் இறைவா! ஏன் என்னைக் கைவிட்டீர்? இறைவா ஏன் எனக்கு இந்தச் சிலுவை? என்று கதறிய நேரங்களை எண்ணிப் பார்ப்போம்.

- இந்தச் சிலுவையை விட்டு ஓட எடுத்த முயற்சிகள்... இவற்றை மறப்பதற்கு நான் எடுத்த பல்வேறு முயற்சிகளை எண்ணிப் பார்ப்போம்.

- இவ்வேளையில் இயேசு அன்பு மகனே! அன்பு மகளே! சிலுவை வந்து நீ தள்ளாடியபோது நானே உன்னைத் தூக்கிச்சென்று என் அன்பை உனக்கு உணர்த்தி என்னை அதிகம் அறியச்செய்தேன் விசுவசிக்கச் செய்தேன். இப்போது துன்பம் என்று நீ துடித்தபோதும் அதனூடாக உன்னை வழிநடத்தி நீண்டகால நன்மைக்கு உன்னைக் கொண்டு வந்த சந்தர்ப்பங்களை எண்ணிப்பார்.

- சிலுவையினூடாக உன்னை வழி நடத்தி ஆழமான அனுபவங்களைக் கொடுத்து அனைத்திற்கும் மேலாக உன்னை உறுதிப்படுத்தி, புனிதமாக்கி எனக்குகந்த வாழ்விலே உன்னை வளரச் செய்த சந்தர்ப்பங்களை எண்ணிப்பார்.

- ஒட்டுமொத்தமாக சிலுவையின் மூலம் நீ பெற்றுக்கொண்ட வெற்றிகள், இவற்றிற்கு மேலாக சிலுவையை விசுவாசத்தோடு ஏற்றபோது நீ பெற்ற மீட்பின் பலன்களை எண்ணிப் பார்!

- சிலுவை இல்லாத வாழ்வு இல்லை. சிலுவைகளைச் சுமந்து மாபெரும் மனிதராக, புனிதராகத் திகழ்கின்றனவர்களை எண்ணிப்பார். உனக்காக, நீ நிறைவான வாழ்வு வாழ்வதற்காக, சிலுவையை ஏற்றுக் கொண்ட என்னைப் பார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பு பெருவிழா

"கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கின்ற விசுவாசமும் பொருள் அற்றதாயிருக்கும்" (1கொரி 15:14). உயிர்ப்புத்தான் எமது வாழ்வின் அடிப்படை அனுபவம். உயிர்ப்பின் அனுபவத்திற்கு வருவதற்கு பல நிலைகளை நாம் தாண்ட வேண்டியுள்ளது.

இயேசு கலிலேயாவில்தான் உயிர்ப்பின் நேரடி அனுபவத்தைக் கொடுகின்றார். அவரை அவர்கள் காண்கின்றார்கள். அவர்கள் மத்தியில் அவர் இருக்கின்றார். கல்லறை அருகில் அமர்ந்திருந்த வானதூதர்கள் "இயேசு உயிருடன் எழுப்பப்பட்டார்; நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள். உங்களுக்கு முன்பாக கலிலேயாவுக்கு செல்லுகின்றார்" என்று சொல்லுகின்றார்கள். வானதூதரின் இந்த வார்த்தையை நம்பிக்கொண்டு தான் அவர்கள் செல்கிறார்கள். நம்பிக்கையில் நடப்பவர்களுக்குத் தான் அடுத்த கட்டமான நேரடி அனுபவம் ஏற்படுகின்றது.

உயிர்ப்பின் அனுபவத்தை நாம் அடைவதற்கு ஏற்படுகின்ற நிலைகள் பின்வருமாறு:

1) காலியான கல்லறை, கல் புரட்டப்பட்டுள்ளது, வானதூதர்கள் அமர்ந்திருக்கின்றனர்.

2) அவர்கள் கல்லறைக்குச் செல்கின்றனர். அங்கு இயேசுவைச் சுற்றியிருந்த துணியைக் காணுகின்றனர். அதாவது அவரது உயிர்த்த உடலுக்கு இனிமேல் ஆடைகள் அவசியமில்லை.

3) கலிலேய அனுபவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடர்கள் இயேசுவைத் தம் மத்தியிலே காணுகின்றனர். அவருக்கு இப்பொழுது புதுவிதமான உடல், உயிர்த்து உருமாற்றம் பெற்ற உடல். அவர் அவர்களைத் தன் அருகே வந்து ஆணிகளால் உண்டான தழும்புகளை சோதித்துப் பார்க்குமாறு கேட்கின்றார். இப்பொழுது இயேசுவின் பிரசன்னம் ஒரு புதுவிதமான பிரசன்னம். இயேசு கலிலேயாவில் வாழ்ந்தபோது அவர் பசியுற்றதை, தாகம் கொண்டதை, சோர்வடைந்ததை எல்லாம் சீடர்கள் கண்டார்கள். ஆனால், இப்பொழுது உள்ளதோ வேறுவிதமான உடல். இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்ட, சீடர்களால் விளங்கிக்கொள்ள முடியாத உடல். இயேசுவைக் கண்டவுடன் எல்லோரும் ஆர்ப்பரிக்கின்றார்கள்.

இதுதான் உயிர்த்த இயேசு மட்டில் உள்ள விசுவாசத்தின் முதல் வெளிப்பாடு, ஆச்சரியம், அதிசயம். இயேசு உடனடியாக அவர்களை அமைதிப்படுத்தி "சமாதானம்" என்கின்றார். இந்த விசுவாச வெளிப்பாடு பிற்காலத்தில் "இயேசு கிறிஸ்துவை உயிர்ப்பித்த தந்தையானவர் வாழ்த்தப் பெறுவாராக" என்ற முதல் கிறிஸ்தவ சமூகத்தின் விசுவாச அறிக்கையாக மாறுகின்றது. எல்லாச் செபங்களும் உயிர்த்த கிறிஸ்துவுக்கே சமர்ப்பிக்கப்படுகின்றன. முதல் கிறிஸ்தவர்கள் தனித்தும் குழுமமாகவும் உயிர்த்த இயேசுவைக் காணுகின்றனர்.

உதாரணம் : பேதுரு, பவுல்

4) இயேசு அவர்களை அமைதிப்படுத்தி "உங்களுக்குச் சமாதானம்" என்று கூறுகின்றார். இயேசு தன்னுடைய வல்லமையை அவர்களுக்குக் கொடுக்கின்றார். தன்னுடைய காயங்களை சோதித்துப்பார்க்க அனுமதிக் கின்றார். இந்தக் காயங்கள் வித்தியாசமான தன்மை கொண்டவை. சாதாரண காயங்கள் போல அவற்றிலிருந்து இரத்தம் ஓடவோ துர்நாற்றம் வீசவோ இல்லை.

5) அவர் அப்போஸ்தலர்களை உருமாற்றுகின்றார். அவர்கள் மேல் தூய ஆவியை ஊதி அவர்களுக்கு தூய ஆவியைக் கொடுக்கின்றார். இப்பொழுதிலிருந்து அவர்கள் இயேசுவைப் புதிய ஒளியில் காண்கின்றார்கள்.

6) அவர்கள் உயிர்த்த இயேசுவின் குழுமத்தை உருவாக்குகின்றார்கள். அதாவது, தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட மக்களாக அனைத் துலகிற்கும் உயிர்ப்பின் வல்லமையை எடுத்துச் சொல்லி மக்களை ஒன்று சேர்க்கப்புறப்பட்ட மக்களாக மாறுகின்றார்கள். அவர்கள் முழுமையான பெந்தகோஸ்தே அனுபவத்திற்காகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுதே அவர்கள் இயேசுவின் குழுமமாக மாறிவிட்டார்கள். இதுதான் இயேசுவின் உயிர்ப்பின் அர்த்தம். பரம்பரை பரம்பரையாக உயிர்த்த இயேசுவின் இந்தக் கூட்டம் அல்லது குழுமம் வளர்ந்து கொண்டே இருக்கின்றது. தூய ஆவியில் திருமுழுக்குப் பெற்றவர்களாக உயிர்த்துடிப்போடு வாழ்கின்றார்கள். ஆண்டவர் இயேசு மீண்டும் வரும் வரைக்கும் ஒவ்வொரு திருப்பலி நேரத்திலும் கிறிஸ்து உயிர்த்தார். கிறிஸ்து மீண்டும் வருவார் என்று அறிக்கையிடுகின்றார்கள். இது தான் திருச் சபையிலுள்ள உயிர்த்த இயேசுவின் இயக்கம். இதிலே நாமும் உயிர்த்துடிப்புள்ள கிறிஸ்தவர்களாக மாறி ஆர்வமுள்ள, ஈடுபாடுள்ள கிறிஸ்தவர்களாக வாழ்வோம்.

பகலவன் நீங்கள்;

பனியைப் பார்த்து பயப்படலாமா?

அழுக்குப் படிந்த, துர்நாற்றமுடைய இருள் சூழ்ந்த சிறையில்

சிக்கித் தவிக்கின்றீர்கள் நீங்கள்.

கலங்காதீர்கள்... உண்மைக்காக நீங்கள் தற்போது ஏற்றுள்ள துன்பத்திற்கு கடவுள் கைம்மாறு தருவார்.

(புனித கிறிஸ்தோஸ்தம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸ்கா காலம்
# 2ம் வாரம்

**தி.ப 4 : 32-35; 1யோவா 5:1-6; யோவா 20:19-31**

**கருப்பொருள் :** உயிர்த்த இயேசுவின் மீதுள்ள விசுவாசம் செயலிலே வெளிப்படவேண்டும்.

1ம் வாசகம் : ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர்.

2ம் வாசகம் : கடவுளிடமிருந்து பிறந்தவன் எவனும் உலகை வெல்கின்றான்.

நற்செய்தி வாசகம் : எட்டு நாளுக்குப் பின் இயேசு வந்தார்.

தோமையார் ஏன் ஏனைய அப்போஸ்தலர்களோடு இருக்கவில்லை? எல்லா அப்போஸ்தலர்களும் பயத்தினால் கதவைப் பூட்டிக்கொண்டு அறைக்குள் இருந்தார்கள். தோமையாரோ வெவ்வேறு இடங்களுக்குச் சென்று வெவ்வேறு நபர்களைச் சந்தித்து இயேசுவின் இறப்புப்பற்றிக் கலந்துரையாடிக்கொண்டு வந்தார். அவர் வீட்டிலே முடங்கிக்கிடந்த ஒருவரல்ல; வாழ்க்கையிலே அடிபட்ட ஒருவர். இதே போன்றுதான் மரியமதலேனாளும். அவளிடமிருந்து ஏழு பேய்கள் விரட்டப்பட்டன என்று கூறப்படுகின்றது. ஏழு என்ற இலக்கம் பல பேய்களைக் குறிக்கும். அவள் மிக மோசமான பாவ வாழ்க்கை வாழ்ந்தவள். அவளும் உலகத்திலே நன்றாக அடிபட்டவள்.

இந்த இருவரும் உயிர்த்த இயேசுவைச் சந்தித்தபோது மற்ற எவருக்கும் ஏற்படாத அனுபவம் இவர்களுக்கு ஏற்படுகின்றது. உயிர்த்த இயேசுவைச் சந்தித்தபோது அவரது காலிலே விழுந்தவர்கள் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும்தான். ஏன் இவர்கள் இயேசுவின் காலில் விழுந்தார்கள்? உயிர்த்த இயேசுவின் உடல் உருமாற்றம் பெற்ற உடல். தபோர் மலையிலே உருமாறியபோது எவ்வாறு வெள்ளை வெளேரென ஒளி வீசிக்கொண்டிந்ததோ அதே போன்று ஒளி வீசி பிரகாசித்துக் கொண்டிருந்தது அவரது உடல். தபோர் மலையில் எவ்விதம் மூன்று அப்போஸ்த லர்களும் இயேசுவின் ஒளி வீசும் உடலைப் பார்க்க முடியாமல் தங்கள் முகத்தை மூடிக்கொண்டார்களோ, அதேபோல் தோமையாரும் மரியமதலேனாளும் இயேசுவின் தெய்வீக பிரசன்னத்தால் ஆட்கொள்ளப்பட்டு அவரது காலடியில் விழுந்தார்கள். உயிர்த்த இயேசுவின் பிரசன்னம் அவர்களை முற்றுமுழுதாய் மாற்றிவிட்டது.

"கண்டதால் விசுவசித்தாய். காணாமல் விசுவசிப்போர் பேறு பெற்றோர்" என்பது தோமையாருக்கு மட்டும் சொல்லப்பட்ட வார்த்தைகள் அல்ல. எல்லா அப்போஸ்தலர்களுக்கும் சொல்லப்பட்ட வார்த்தைகள். ஏனெனில், அவர்கள் எல்லோரும் இயேசுவைக் கண்டபின்தான் விசுவசித்தார்கள். உயிர்த்த இயேசுவைச் சந்தித்து, அனுபவிப்பதற்கு முன் எல்லா சீடர்களின் விசுவாசமும் குறைவுள்ள விசுவாசமாக, மனித வரையறைக்குட்பட்டதாகவே இருந்தது. அவர்கள் சாதாரண மனிதர்களாகத்தான் சிந்தித்தார்கள். உதாரணமாக பேதுரு இயேசுவையும் அவரது பணியையும்பற்றி தான் நன்கு அறிந்திருந்த தாகவே நினைத்தார். ஆனால், மெசியா பாடுபட்டு கொலை செய்யப் படுவார் (மத்.16:13-28) என்பதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அதேபோன்றுதான் தோமையாரும் இயேசுவோடு இறப்பதற்கும் ஆயத்தமாக இருந்தவர் (யோவான் 11:16). ஆனால், இயேசு ஏன் இறந்து உயிர்த்தெழவேண்டுமென்பதை அவரால் உணர்ந்துகொள்ள முடியவில்லை?

ஆனால், உயிர்த்த இயேசுவைச் சந்தித்த பின்னர் அவர்களுள் எவருமே இரட்டை வேடமுள்ளவர்களாய் இருக்கவில்லை. சாதாரண மனிதர்கள் போல் சிந்திக்கவில்லை; வாழவில்லை. இன்று வெவ்வேறு நிலையிலுள்ளவர்களது இரட்டை வேடத்தில்தான் அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டும், பலியாகியும் இருக்கின்றனர். அவர்கள் முழுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமடைந்தவர்களானார்கள். தூய ஆவியின் அற்புதச் செயலே அவர்களின் மாற்றத்துக்குக் காரணம். அவர்கள் பெந்தக்கோஸ்தே நாளுக்காகக் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. உயிர்த்த இயேசுவைச் சந்திப்பவர்கள் தூய ஆவியைப் பெறாமல் இருக்க முடியாது. நாமெல்லோருமே தவக்கால ஆயத்தங்கள், பரிசுத்த வார வழிபாடுகள் என்பவற்றால் ஆயத்தம் செய்யப்பட்டு உயிர்த்த இயேசுவைச் சந்தித்து இருக்கிறோம்; அனுபவித்திருக்கிறோம். எமது கடந்தகால வாழ்வு வேறுவிதமாக இருந்திருக்கலாம். ஆனால், இனிமேல் எக்காரணம் கொண்டும், இரட்டை வேடமுள்ளதாயிருக்க முடியாது. வெறும் மனித நிலையில் வாழமுடியாது. நாம் சொல்வதொன்று; செய்வதொன்றாக, ஆலயத்தில் ஒருவிதம்; அன்றாட வாழ்வில் இன்னொருவிதமாக இருக்க முடியாது.

உயிர்த்த இயேசுவைச் சந்திப்பது என்பது ஒரு தொடர் முயற்சி. எப்படி இதைச் செய்யப்போகிறோம்? இடைவிடாத செபமும், உயிருள்ள இறைவார்த்தையை வாசிப்பதும், உயிர்த்த இயேசுவைச் சந்திக்க மிக முக்கியமானவை. தோமையாரைப்போல, மரியமதலேனாளைப் போல உலகத்திலே அடிபட்டவர்களாய், இன்று நாளாந்தம் நடைபெறும் நிகழ்ச்சிகளை மனத்திலே உணர்ந்தவர்களாய் தொடர்ச்சியான செபத்திலும், உயிருள்ள இறைவார்த்தை வாசிப்பதிலும் ஈடுபட்டு உயிர்த்த இயேசுவின் பிரசன்னத்தில் வாழுவோம். அப்பொழுது இன்றைய முதல் வாசகம் கூறுவதுபோல் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் வாழ்வோம்.

> "பகுத்தறிவு பிறந்ததெல்லாம்
> கேள்விகள் கேட்பதனாலே....!
> உரிமைகளைப் பெறுவதெல்லாம்
> உணர்ச்சிகள் உள்ளதனாலே....!
> நம் தோள் வலியால்
> அந்த நாள் வரலாம்....!
> அன்று ஏழை எளியவர்கள்
> நலம் பெறலாம்....!
> முன்னேற்றம் என்பதெல்லாம்
> உழைப்பவர் உழைப்பதனாலே....!
> உடமைகள் புரிவதெல்லாம்
> விடுதலை வேண்டுவதாலே...!
>
> (வாலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸ்கா காலம்
# 3ம் வாரம்

**தி.ப 3 : 13-15, 17-19; 1யோவா 2:1-5; லூக் 24:35-48**

**கருப்பொருள் :** உயிர்த்த இயேசு எம்மை மனந்திரும்பிய வாழ்வுக்கு அழைக்கிறார்.

**1ம் வாசகம் :** வாழ்வு அளிப்பவரைக் கொன்றீர்கள்! ஆனால் கடவுள் அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார்.

**2ம் வாசகம் :** நாம் பாவங்களைப் போக்கும் பரிகாரப்பலி அவரே, உலகனைத்தின் பாவங்களையும் போக்கும் பரிகாரப்பலி அவரே.

**நற்செய்தி வாசகம் :** மெசியா பாடுபட்டு, இறந்தோரிடமிருந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும் என்றிருந்தது.

மனித வாழ்வில் விழாக்கள் கொண்டாட்டங்கள் அவசியம். எனவேதான், எந்தப்பெரிய போரின்போதும் சிறந்த தலைவர், தளபதிகள் கொண்டாட வேண்டுமென வலியுறுத்துகின்றார்கள். இவை வாழ்வை மறந்து, வாழ்விலே தொடர்பற்று வாழ்வதற்காகவல்ல. வாழ்வில் இன்னும் ஊக்கத்துடன் ஈடுபாடுகொண்டு வாழ உந்து சக்தியாக இருக்க வேண்டும் என்பதற்காக. உயிர்த்த இயேசுவைச் சந்தித்தவர்கள் மரிய மதலேனாவைப்போல சீடர்களைப்போல மகிழ்ச்சியடைகின்றார்கள். இது வெறும் மேலோட்டமான, உணர்ச்சிவசப்பட்ட மகிழ்ச்சியோடு முடிவதில்லை. இச்சந்திப்பு மகிழ்ச்சியோடு கூட ஒரு பணியையும் கொடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பணியைச் செய்யவேண்டுமானால் கிறிஸ்து பற்றிய மறை உண்மையை உணரவேண்டும். அம் மறை உண்மை அவர் பாடுபட்டு உயிர்த்த மெசியா, எம்மை மீட்ட மெசியா என்பதாகும். இயேசு இம் மறை உண்மையைப் பல தடவை விளக்குகின்றார். இவ் அனுபவத்திலே பங்குபெற தோமையாரையும் "உன் விரலை என் விலாவிலிட்டு சோதித்துப்பார்" என அழைக்கின்றார். இத்தகைய அனுபவத்தை சீடருக்குக் கொடுத்ததின் ஒரு நிகழ்ச்சிதான் இன்றைய நற்செய்தியில் ஒரு உதாரணமாகக் காட்டப்படுகின்றது.

1) முன்னர் கூறப்பட்ட இறைவார்த்தையை மீண்டும் விளக்குகின்றார்.

2) உணவருந்துகின்றார்கள் - புதிய திருச்சபையின் சகோதரத்துவத்தை படிப்பிக்கின்றார்:

3) குருவாகிய அவர் சீடத்துவம் எதில் தங்கியுள்ளது என உணர்த்துகின்றார்; மனக்கண்ணைத் திறக்கிறார். இதுவே (மன) மாற்றத்தின் தொடக்கம்.

இதையே 40 நாட்களும் செய்கின்றார். இந்த 40 நாட்களும் அவரது போதனை இவ் அடிப்படையில்தான் அமைந்தது. அவரது உயிர்ப்பு என்ன? அவர்களது சீடத்துவம் என்ன? என்பதை சான்றுபகரச் செய்தது.

நாமும் கிறிஸ்துவின் உயிர்ப்பைக் கொண்டாடுவது மட்டும் போதாது. இந்த 40 நாட்களும் அவரது காலடியில் அமர்ந்து இதே அனுபவத்தைப் பெற்று நமது சீடத்துவத்தைப் பற்றிப்பிடித்து மெசியாவின் எப்படியான சீடராக வாழப் போகிறோம் எனத் தீர்மானிக்க வேண்டும். சீடத்துவம், சிறப்பாக இன்று நம் சொந்த வாழ்வில் மக்கள் மத்தியில் ஏற்பட நாம் எவ்வாறு தூண்டுதலாய், சாட்சிகளாய் வாழப்போகிறோம்?

இறைவன் அளவற்ற நன்மைத்தனமுள்ளவர் என்றும் நம் பாவங்களை மன்னிக்க ஆவலாயுள்ளாரென்றும் விசுவசிக்கிறோம். பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தை இயேசு திருச்சபைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளித்துள்ளார். தன் இரத்தத்தைச் சிந்தியே இயேசு நமக்கு பெற்றுத்தருகிறார். பாவமன்னிப்பைப் பெறவேண்டி நம் பாவத்துக்காக மனம் வருந்தும்போது இயேசுவே மனமாற்றத்துக்கு இட்டுச் செல்லுகிறார்.

எனவே, இறைவன் நம் பாவங்களை மன்னிப்பதற்காக, அதுவும் மீண்டும் மீண்டும் மன்னிப்பதற்காக அவருக்கு என்றும் நன்றிகூறுவோம். இந்த மன்னிப்பின் அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.

"வாழ்ந்து பார்க்க வேண்டும் - அறிவில்
மனிதனாக வேண்டும்.....!
வாசல் தேடி உலகம் - உன்னை
வாழ்த்திப்பாட வேண்டும்.....!
நாடு காக்க வேண்டும் - நல்லதற்றதைக்
கிள்ளி வீசவேண்டும்.

(கவியரசு கண்ணதாசன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸ்கா காலம்
# 4ம் வாரம்

**தி.ப 4 : 8-12; 1யோவா 3:1-2; யோவா 10:11-18.**

**கருப்பொருள் :** உயிர்த்த இயேசு நல்ல ஆயனாகத் தம் உயிரை எமக்களிக்கின்றார்.

**1ம் வாசகம் :** இவராலன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை.

**2ம் வாசகம் :** கடவுள் இருப்பது போல் அவரைக் காண்போம்.

**நற்செய்தி வாசகம் :** நல்ல ஆயன் நானே. நல்லாயன் தன் ஆடுகளுக்காகத் தன்னுயிரையே கொடுக்கிறான்.

மன்றத்தின்முன் பேதுரு ஆற்றிய உரை மனத்தைரியம் நிறைந்தது. இந்த மன்றம்தான் இயேசுவுக்கு மரண தண்டனை விதித்தது. ஆயினும், பேதுரு துணிந்துவிட்டார். துணிவு உள்ளத்திலிருந்து தான் பிறக்கின்றது. உள்ளம்தான் எமது எண்ணங்கள், உணர்வுகள், தீர்மானங்கள் அனைத்தினதும் பிறப்பிடம். இயேசுதான் ஒரேயொரு மீட்பர் என்பதை எப்பயமுமின்றி பேதுரு கூறுகின்றார். எமக்கும் இத்தகைய துணிவு ஏற்படுமா? பல வேளைகளில் இயேசுவுக்காகச் சான்று பகிர்வதற்குத் தயங்குகின்றோம். மௌனிகளாக நிற்கின்றோம். இயேசு தன்னை விலக்கப்பட்ட மூலைக்கல்லுக்கு ஒப்பிடுகின்றார்.

இயேசு துணிச்சலோடு தன்னை ஓர் நல்லாயன் என்றும் உலகின் மீட்பர் என்றும், கூறுகின்றார். உண்மையின் நேரம்தான் ஆபத்தின் நேரம். கூலிக்கு மேய்ப்பவர்பற்றி இயேசு குறிப்பிடுவதை விட்டுவிடவில்லை. இயேசு தனது சொந்த மரணத்தினால்தான் எம்மைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றினார்; வாழவைத்தார். தன்னைத் தானே காப்பாற்றுபவன் மற்றவர்களைக் காப்பாற்ற முடியாது. இதுதான் சிலுவையின் சித்தாந்தம். இயேசுவின் இறப்பு அன்பின் அர்ப்பணம். இறுதிவரை செய்த அவரது அன்பு தொலைநோக்குடையதும், உலகளாவியதுமாகும். அவரது பணி மனுக்குலம் முழுவதையும் உள்ளடக்கியது. தன்னை நல்லாயன் என்று கூறுகின்ற இயேசு உண்மையான செம்மறியாக மாறினார்.

பலஸ்தீனா நாட்டில் ஆயனின் வாழ்வு மிகக் கடினமானது. மந்தையோடு சேர்ந்து வாழ்க்கையை நடத்தவேண்டும். மந்தையைத் தாக்கவரும் விலங்குகளிடமிருந்து அவற்றைக் காக்கவேண்டும். ஆயன் என்பது யூத மக்களுக்கு மிகவும் பழக்கமான ஒரு உருவகம். எசெக்கியேல் 34:11-14ல் "நானே என் மந்தையைத் தேடிச்சென்று பேணிக்காப்பேன்" என்று யாவே கூறுகின்றார். "மந்தை, ஆடு" போன்ற சொற்கள் விவிலியத்தில் 600 முறைக்கு மேல் வருகின்றன. இயேசு 99 ஆடுகளையும் விட்டுவிட்டு காணாமற் போனதைச் தேடிச் செல்கின்ற ஆயன். அவரது மகிழ்ச்சி தொலைந்ததை மீண்டும் கண்டுபிடிப்பதனால் ஏற்படும் மகிழ்ச்சி. இறுதித் தீர்ப்பு நேரத்திலும் "ஆயனைப் போல் தான் வரவிருக்கின்றார் இயேசு" (மத் 25:32).

ஒரு ஆயனிடம், உம்முடைய மந்தை ஒவ்வொன்றையும் இனம் காட்ட முடியுமா? என்று கேட்டார்கள். அப்பொழுது அவன் என் கண்ணைக் கட்டிவிட்டு என் மந்தையை என்னிடம் கொண்டு வந்தால் அதன் முகத்தில் என் கையை வைத்து அதற்குரிய பெயரோடு இனம் காட்டுவேன் எனப் பதிலளித்தான். இயேசு "என் ஆடுகளை நான் அறிவேன். அவையும் என்னை அறிகின்றன" என்று கூறுவதன் மூலம் தனக்கும் நமக்குமிடையே உள்ள நெருக்கமான இந்த உறவையே குறிப்பிடுகின்றார்.

ஒரு பங்கில் வீடுகளைச் சந்திக்கச் சென்ற பங்குக் குருவானவர் அந்த வீட்டுப் பெண்ணிடம் உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்று கேட்டார். அதற்கு அப்பெண் மேரி, யோண், யோசப், ஆன் என்று சொல்லத்தொடங்கினார். பங்குத்தந்தை குறுக்கிட்டு நான் பெயர்களைக் கேட்கவில்லை. எண்ணிக்கையைத்தான் கேட்டேன் என்றார். அதற்கு அப்பெண் சற்றுக் கோபத்துடன் என் பிள்ளைகளுக்கு பெயர் தான் உண்டே தவிர எண்ணிக்கை இல்லை என்று சொன்னார். யோவான் 20:16 இல் இயேசு "மரியே" என்று கூறியவுடன் அவள் அவரை இனம்கண்டு "ரபூனி" என்று அழைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸ்கா காலம் 5ம் வாரம்

**தி.ப 9 : 26-31; 1யோவா 3:18-24; யோவா 15:1-8**

**கருப்பொருள் :** எமது வாழ்வு பலனுள்ளதாயிருக்க நாம் கிறிஸ்துவோடு நெருங்கி இணைந்திருக்க வேண்டும்.

**1ம் வாசகம் :** ஆண்டவர் அவருக்கு வழியில் தோன்றியதை பர்னபா எடுத்துக் கூறினார்.

**2ம் வாசகம் :** விசுவாசம் வைத்து, அன்பு செய்ய வேண்டும். இதுவே அவரது கட்டளை.

**நற்செய்தி வாசகம்:** ஒருவன் என்னுள்ளும், நான் அவனுள்ளும் நிலைத்திருந்தால்,அவன் மிகுந்த கனி தருவான்.

பவுலின் மனமாற்றம் அவரின் அழைப்பாக மாறி எத்தனையோ அச்சுறுத்தல் ஊடாக அவரை அழைத்துச் செல்கிறது. இன்றைய திருப்பாடல் துன்புறும் ஒருவரின் உணர்வுகள் இறைவனுக்கு செலுத்தும் புகழ்ச்சிப் பாடலாக அமைகின்றது. எமக்கும் இறைவன் செய்து வருகின்ற நன்மைத்தனங்களை நாமும் இறைவனை நோக்கிக் குரல் எழுப்பும்போது ஆண்டவர் நமக்குச் செய்தார் என்று கூறுவோம்.

பவுல் கிறிஸ்துவோடு இரண்டறக்கலந்தவராக "வாழ்வது நானல்ல, என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார்" என்று கூறுகின்றார். இஸ்ராயேலுக்குச் சொல்லப்பட்ட திராட்சைக்கொடி எதுவென வெளிப்படுத்த "இயேசு நானே உண்மையான திராட்சைக்கொடி" என்று கூறுகின்றார். எசா 5:1-7 இல் கூறப்பட்ட திராட்சைக்கொடி பலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்காத காட்டுத் திராட்சையாக மாறியது. இந்தப் பின்புலத்தில்தான் தந்தையால் அன்பு செய்யப்பட்ட உண்மையான திராட்சைக் கொடி நானே என்று இயேசு கூறுகின்றார். ஆயினும், முதலில் கிளைகள் களையப்பட வேண்டும். இந்த உவமைகள் அனைத்தும் திருச்சபையிலுள்ள நமக்கும் பொருந்தும்.

இயேசு அப்போஸ்தலர்களை அழைத்தபோது தமக்காக அவர்களும் துன்புற வேண்டும் எனக் கூறுகின்றார். அவர் சிலுவையை நோக்கிப் பயணித்தபோது அந்த அழைப்பிற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்து என்னைப் பின்செல்ல விரும்புபவன் தினமும் தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்செல்லட்டும் என்றார். இயேசுவோடு நாம் கொண்டுள்ள பிணைப்பு அவரது போதனைகளைக் கேட்பதால் அல்ல, மாறாக அவரோடு இணைந்து எமக்குள்ளிருக்கும் தெய்வீகத்திற்கு மாறானவற்றைக் களைந்து, உண்மையான பலன் கொடுக்கும் திராட்சைக் கொடிகளாக மாறுவதன் மூலமாகவே ஏற்பட முடியும்.

உண்மையான பலன் கலா 5:22-23 கூறுவது போல ஆவியின் கனிகளாகிய அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதன் மூலமாகவே கிடைக்கும். இவைதான் நாம் கொடியாகிய இயேசுவோடு இணைந்துள்ளோமா என்பதன் சான்று. என்னோடு இணைந்திராதவர் கொடியைப்போல தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார். "என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார். என்னோடு இணைந்து மக்களை கூட்டிச் சேர்க்காதவர் அவர்களை சிதறச் செய்கிறார்" (மத் 12:30) என்று இயேசு கூறும்போது, இயேசு இதையே குறிப்பிடுகிறார். கிறிஸ்துவால் ஒருங்கிணைக்கப்படாத வாழ்வு சிதறடிக்கப்பட்ட வாழ்வாக மாறும். அதற்கு மாறாக, கிறிஸ்துவிலே ஒன்று சேர்ப்பவர் ஒருங்கிணைந்த வாழ்வையும் அந்த வாழ்வு தரும் சொல்லொண்ணா சக்திகளையும் பெற்று வாழ்வார்.

உலகப்படம் ஒன்றைப் பல துண்டுகளாக வெட்டியபின் அந்த உலகப்படத்தை ஒன்றுசேர்க்கும்படி ஒரு குழந்தையிடம் கொடுத்தார்கள். அந்தக் குழந்தை பலமுறை முயற்சித்தும் பலன் இல்லை. மனமுடைந்த நிலையில் படத்தின் மறுபக்கத்தை திருப்பி இயேசுவின் உருவத்தை ஒன்று சேர்த்தது. அவ்வாறு சேர்த்தவுடன் மறுபக்கத்தில் உலகப்படம் சரியாக அமைந்தது. கிறிஸ்துவை எமது வாழ்வில் பெற்றுக்கொண்டால் எமது உலகம் சரியாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸ்கா காலம்
# 6ம் வாரம்

**தி.ப 10:25-26,34:35,44-48; யோவா 4:7-10; யோவா 15:9-17**

**கருப்பொருள் :** தம் அளவில்லா அன்பை எம்முடன் பகிர்ந்து வாழ தமது மகனை எம்மிடம்அனுப்பினார்.

**1ம் வாசகம் :** தூய ஆவியாம் திருக்கொடை புறவினர்த்தார் மேலும் பொழியப்பட்டுள்ளது.

**2ம் வாசகம் :** அன்பே கடவுள்

**நற்செய்தி வாசகம் :** தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்புயாரிடமும் இல்லை.

இன்றைய வழிபாடு கடவுளின் அன்பையும் அவரது கட்டளையையும் மையமாகக் கொண்டுள்ளது. சென்ற ஞாயிறு வழிபாட்டில் திராட்சைச் செடியின் உருவகத்தின்மூலம் என்னில் நிலைத்திருங்கள் என்று கூறிய இயேசு இன்றைய நற்செய்தியில் என் அன்பில் நிலைத்திருங்கள் என்கிறார் (யோ.வா 15:14). "நான் கட்டளை இடுவதையெல்லாம் செய்தால் நீங்கள் என் நண்பர்கள்." கட்டளைகளை அனுசரித்துக் கொண்டு பணியாளனாக, வேலைக்காரனாக இருக்கலாம். ஒருவன் வெளிப்படையாக கட்டளைகளை அனுசரித்தும் ஒருபோதும் நண்பனாக மாறாமல் இருக்கலாம்.

எனவே, கற்பனைகளை அனுசரிக்கும்போது எப்படிப்பட்ட மனப்பான்மையோடு, அதாவது உண்மையான அன்புச் செயல்களாக, கடவுளின் திட்டத்தை நிறைவேற்றும் செயல்களாகச் செய்கின்றோம் என்பது முக்கியம். இவ்வாறு நாம் செய்வதற்கு முக்கிய காரணமும், தூண்டுதலுமாய் இருப்பவர் தூய ஆவி. தூய ஆவிதான் நம்மைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்ச்சி உள்ளவர்களாகவும், பிறர் துன்பத்தில் பங்குபற்றுபவர்களாகவும் இருக்கச் செய்பவர். மற்றவர் வாழ்வில், மற்றவர் இன்ப துன்பங்களில் எவ்வளவுக்கு உணர்வு பூர்வமாகப் பங்குபற்றுகிறோம் என்பதிலிருந்துதான் நம் உள்ளத்தில் கிறிஸ்துவின் அன்பு எவ்வளவுக்கு உள்ளது என்று தெரியும். "ஒருவனுடைய உலகம் அவனது இதயத்தின் அளவு". அதனால்தான் இயேசு சொன்னார் "நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை" (15:13). மற்றவர்களின் உணர்வுகள், துன்பங்களில் ஒன்றுபட்டவர்களாய் நாம் இருக்க வேண்டும். நாம் என்ன செய்கிறோம் என்பதல்ல, எப்படி வாழுகின்றோம் என்பதுதான் முக்கியம். அதுதான் எம்மை மீட்கப்போகின்றது. இயேசு குறிப்பிடுவது ஒரு மேலோட்டமான, உணர்ச்சிவசப்பட்ட அன்பு அல்லது 'ஒரு தேன் நிலவு' அன்பல்ல. மாறாக கணவன்-மனைவி, பெற்றோர் பிள்ளைகள் வாழ்வில் அர்ப்பணிப்பின் காரணங்களைக் கண்டு உணருகின்ற அன்பு. இப்படிப்பட்ட அன்பு வேறு எதனாலுமல்ல. மாறாக இயேசுவோடு நாம் கொண்டுள்ள உறவினாலே ஏற்படும் அன்பு. இது கடவுளின் கொடை. இப்படிப்பட்ட அன்பைத்தான் அன்னை திரேசா போன்றவர்களிடத்தில் நாம் காண்கின்றோம். குஷ்டரோகிகள் என்றால் என்ன, குப்பை மேட்டில் உள்ள குழந்தைகள் என்றால் என்ன, அவர்களில் அன்பு நிறைந்த கிறிஸ்துவைக் கண்டு அவர்களுக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணிக்கும் அன்பு.

"இனி நான் உங்களை பணியாளர் என்று சொல்லமாட்டேன் நண்பர்கள் என்பேன்" (15:15). எப்படி ஒரு வேலைக்காரன் நண்பனாக முடியும்? எசமானின் ஒவ்வொரு உணர்விலும் முழுமையாகக் கலந்து எசமானுடன் முழுமையாக ஒன்றுபடுவதன் மூலமாகத் தான்.

"நீங்கள் ஒருவர் மற்றவர்களிடம் அன்பு கொள்ள வேண்டும்" (15:17) என்பதே என் கட்டளை. எங்களுடைய அன்பின் அளவுகோல் என்ன? இன்று வன்னியில் அகப்பட்டு துன்புற்றுக் கொண்டிருக்கின்ற 50,000 இற்கு மேற்பட்ட மக்களின் துன்பங்களில் நாம் பங்குபற்றும்போது அதுதான் கிறிஸ்து குறிப்பிடும் அன்பு.

நம்முடைய மனதுக்குப் பிடித்தமாதிரி அமையும் போது அல்ல, மாறாக கடவுளுக்குப் பிடித்தமாதிரி அமையும்போது அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்வதுதான் உண்மையான அன்பு. இவ்வாறான அன்பு எம்மை எல்லாவித மனக்குழப்பங்களிலிருந்தும் விடுவித்து கடவுளுக்குச் செபத்தில் நன்றி கூறத் தூண்டும்.

பூ வளர்ப்புப் போட்டியில் ஒரு சிறுமி முதல் இடம் பெற்றாள். அவள் பூங்கன்றை உடைந்துபோன தேனீர்க் குவளைக்குள் வைத்து வீட்டின் பின்புற யன்னல் அருகில் வைத்து வளர்த்தாள். இப்படி ஒரு அசாதாரண சூழலில் இவ்வளவு அழகான பூவை எப்படி வளர்க்க முடிந்தது? என்று அவளிடம் கேட்டபோது அவள் சொன்ன பதில் "எந்த நாளும் சூரிய வெளிச்சம் படக்கூடிய விதமாக அந்தப் பூக்கன்றுக் குவளையை திருப்பி வைத்துக்கொண்டிருந்தேன்."

நாமும் நம் உள்ளங்களை கிறிஸ்துவின் அன்பு படக்கூடிய விதமாக இறைவார்த்தை, அருட்சாதனங்கள், என்னும் ஒளி, சிறப்பாக திருப்பலி, திவ்விய நற்கருணை மூலம் கிறிஸ்துவின் பக்கம் திருப்பிக்கொண்டே இருக்க வேண்டும்.

> மனிதருக்குப் பாடம் புகட்டவே கடவுள் ஆதவன்,
> பூமி, நீர், காற்று, கடல், ஒளி, விண்மீன்கள், பிற மூலதனங்கள்
> போன்றவற்றைப் பொதுவில் வைத்தார்.
> மனிதன், இயற்கையிடமிருந்தாவது பொதுப்பகிர்வை
> கற்றுக்கொள்வான் என்று கடவுள் நினைத்தார்
> என்று கூறுகின்றார் புனித கிறிஸ்தோஸ்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரின் விண்ணேற்றம்

**தி.ப 1 : 1–11; எபே 1:17-23; மாற் 16:15-20**

**கருப்பொருள் :** இயேசுவின் மீட்புப் பணியை இவ்வுலகில் தொடர்ந்தாற்ற நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

**1ம் வாசகம் :** அவர்கள் கண்முன்பாக அவர் மேலே உயர்த்தப் பட்டார்.

**2ம் வாசகம் :** அவரை விண்ணுலகில் தம் வலப்புறத்தில் அமரச்செய்தார்.

**நற்செய்தி வாசகம் :** விண்ணேற்படைந்த கடவுளின் வலப் பக்கத்தில் அமர்ந்தார்.

கிறிஸ்துவின் இறப்பும், உயிர்ப்பும் ஒரு நிகழ்வின் இருபக்கங்கள். அவை இயேசு தன்னை அர்ப்பணிப்பதும் தந்தை அவரை ஏற்று மகிமைப்படுத்துவதும் ஆகும். விண்ணேற்பு இன்னுமொரு நிலைமையையும் காட்டுகின்றது அவர் தந்தையிடம் செல்வது நாம் இவ்வுலகுக்குச் சேர்ந்தவர்களல்ல, இன்னுமொரு வீடு நமக்கு உண்டு என்பதே அது. இந்த 40 நாட்களும் நாமும் இன்னுமொரு வீட்டுக்காகக் காத்திருக்கிறோம் என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

இக்காலத்தில் தூய ஆவி நம்மைச் சந்தித்து இறைவனைப் பற்றி நமக்கு விளக்கி, விசுவாசத்தில் உறுதிப்படுத்துகின்றார்.

நாம் ஆரம்பிக்கவேண்டிய பயணம் ஒன்றுண்டு. அது தந்தையை நோக்கிய பயணம். "என்னை இவ்வாறு பற்றிக் கொள்ளாதே" என்று மதலேனாளுக்குக் கூறி, பயணத்தை ஆரம்பித்த இயேசு மூன்று வருடங்கள் சீடரோடு இருந்தார். 40 நாட்கள் சிலவேளை இருந்தார்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளை இல்லாமலிருந்தார். விண்ணேற்றத்தின் பின் இவ்வுலகில் இருக்கவே மாட்டார். பரிசுத்த ஆவிதான் அவர் பிரசன்னத்தைத் தெளிவாக்குவார்.

இயேசு தந்தையின் வலப்பக்கம் இருப்பது புதிய நிலையைக் காட்டுகிறது. திருச்சபை ஒரு புதுநிலையை, மறைபொருளை, புதிய உடலைப் பெற்றுள்ளது. எவ்வளவுக்கு இவ்வுடலை உயிர்ப்புக்கு ஏற்றதாக்குகின்றோமோ அவ்வளவுக்கு தந்தையிடம் செல்வதன் அவசியத்தை உணருவோம். இப்புதிய நிலைக்கு ஏற்ப வாழ்வோரில் காணப்படும் அருங்குறிகள் மாற்கு 16: 17-18 வசனங்களில் விபரிக்கப்படுகின்றன.

விண்ணேற்பு எமது வாழ்வின் ஓர் தரிசன நோக்கு. எம்முடன் வாழ்ந்த இயேசு இன்று நமக்காகப் பரிந்து பேசுகிறார் என்பதை என்றும் நமக்கு உணர்த்துகின்றது.

"மாண்டுபோன பழக்கவழக்கப்
பாலைவனத்திலே
தெள்ளிய சிந்தனை ஆறு எங்கே
சிந்தையும் செயலும் இணைந்து எங்கே
விரிந்து பரவிடுமோ
அந்த சுதந்திர சொர்க்கத்தில் என் தந்தையே
என் தேசம் விழிக்கட்டும்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியின் திருவிழா

**தி.ப 2 : 1–11; 1கொரி 12:3-7,12-13; மாற் 20:19-23**

**கருப்பொருள் :** ஆவியின் ஆற்றலால் நாம் இயேசுவுக்கு சான்று பகர்வோம்.

**1ம் வாசகம் :** எல்லோரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப் பெற்று பேசத்தொடங்கினர்.

**2ம் வாசகம் :** நாம் அனைவரும் ஒரே ஆவியாய் ஒரே உடலுக்குள்ளாக திருமுழுக்குப் பெற்றோம்.

**நற்செய்தி வாசகம் :** தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்; தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒன்பது நாள் ஆயத்தங்களின்பின் இன்று தூயஆவியின் திருவிழாவைக் கொண்டாடுகிறோம். தூய ஆவி பலர் வாழ்வில் மறக்கப்பட்ட இறைவனாகவே இருக்கிறார்.

புனிதர்களைப் பற்றி நமக்கு நன்கு தெரியும் ஆனால்...

- புனித பவுல் கிறிஸ்தவர்களிடம் தூய ஆவியைப் பெற்றீர்களா? என்று கேட்டார். ஆனால், அண்மைக் காலமாக தூய ஆவியை அறியும் ஆவல் அதிகரித்துள்ளது. தூய ஆவி இறையரசைக் கட்டியெழுப்புவதற்காகக் கொடுக்கப்பட்ட கொடை. இதனால்தான் பல அற்புத அடையாளங்கள் இடம் பெறுகின்றன.

*உதாரணம்* : பெருங்காற்று, அக்கினி நாக்கு போன்றவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய ஆவி இணைக்கும் ஆண்டவர் Para – Clitos
தந்தை – மகனை அன்பினால் இணைப்பவர்
***உதாரணம்:* சிதறுண்ட அப்போஸ்தலர்கள், ஆதிக் கிறிஸ்தவர்கள் மீண்டும் இணைக்கப்படுகிறார்கள்.**

- எமது வாழ்விலும் குடும்பங்கள், சமூகங்களை அன்பினால் இணைக்க மன்றாடுவோம். தாலியில் பரிசுத்த ஆவியை பதித்து வைத்துள்ளதும் அந்த அன்பின் இணைப்பைப் பாதுகாக்க வேண்டியே.

- ஆவியானவர் நம்மை ஆட்கொள்ளும்போது தமது வல்லமையால் நம்மை நிரப்புகின்றார். பலவேளைகளில் நாம் உலகப் போக்கி லுள்ள வல்லமையாலேயே (உ+ம்: பணம், அதிகாரம்) நிரப்பப்படுகிறோம்.

- ஆனால், ஆவியின் வருகைக்காகக் காத்திருந்து தம்மை வெறுமையாக்குவோரின் உள்ளங்களை ஆவியானவர் நிரப்புகின்றார். நாம் நமது உள்ளங்களை வெறுமையாக்கும் போது ஆவியின் கனிகளை அனுபவிக்கின்றோம் (கலா 5:22)

- இயேசுவும் தன்னை வெறுமையாக்கியதால் தான் ஆவியால் நிரப்பப்பட்டு வழிநடத்தப்பட்டார்.

- இன்று நம் மத்தியில் பலர் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். முக்கியமாக இறைத்தியான நிலையத்தின் வருகையும் இதற்கு ஒரு காரணம் எனலாம். குணப்படுத்துவோர், குணம்பெறுவோர் சான்று பகர்வோரைக் காண்கின்றோம். பல சமூகங்கள் கட்டியெழுப்படுவதைக் காண்கின்றோம். நமது அனுபவங்கள், நமது நிலை என்ன? "அல்லேலூயா" ஒரு வல்லமையுள்ள வார்த்தையாகிவிட்டது.

- இன்றைய விழாவின் முக்கிய வார்த்தைகள்... நான் உங்களுக்குக் கூற வேண்டியவை இன்னும் பல உண்டு. ஆனால், இவற்றை உங்களால் இப்போது தாங்கமுடியாது. கிறிஸ்தவ வாழ்வின் பல சவால்கள், சந்தேகங்களுக்கு எம்மால் பதில் கூற முடியாது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவொரு கடவுளின் திருவிழா

**இணை.ச 4:32–34, 39-40; உரோ 8:14-17; மாத் 28:16-20**

**கருப்பொருள் :** உறவுகளின் ஊற்றாகிய மூவொரு கடவுள் நாமும் ஒன்றிப்பில் வாழ ஆற்றல் அளிக்கிறார்.

**1ம் வாசகம் :** மேலே விண்ணிலும் கீழே மண்ணிலும் ஆண்டவரே கடவுள். அவரைத் தவிர வேறொருவருமில்லை.

**2ம் வாசகம் :** பிள்ளைகளாக்கும் தேவ ஆவியைப் பெற்றுக்கொண்டீர்கள், அந்த ஆவியால் நாம் "அப்பா தந்தாய்" எனக் கூப்பிடுகிறோம்.

**நற்செய்தி வாசகம் :** பிதா, சுதன், தூய ஆவியின் பெயரால் அவர்களுக்கு திருமுழுக்குக் கொடுங்கள்.

வன்னிப் போரின் வெற்றிக்களிப்பின் பின்னணியில் வானொலி, தொலைக்காட்சி அனைத்திலும் பௌத்த சமய மேலாதிக்கம் என்றுமில்லாத அளவு மேலோங்கி நிற்பதை எல்லோருமே அவதானிக்கக் கூடியதாயுள்ளது. அதுமாத்திரமல்ல, இராணுவம் வெற்றி பெற்ற பெரும்பான்மையான இடங்களில் புத்தர் சிலைகள் நிறுவப்படுகின்றன. நேரடியாகவோ மறைமுகமாகவோ பௌத்தமத உடன்படிக்கை ஒன்று நிறுவப்படுவதைக் காணக்கூடியதாயுள்ளது. பௌத்த மதத்துக்கு அடுத்தபடியாக இஸ்லாம்மத உடன்படிக்கை பரவிக்கொண்டு போகின்றது.

இந்தப் பின்னணியில்தான் இன்றைய முதல் வாசகம் இறைவன் இஸ்ராயேல் மக்களோடு செய்துகொண்ட ஓர் உன்னதமான உடன்படிக்கை பற்றிக் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்படிக்கை என்பது வெறும் வார்த்தைகளால் ஆனதல்ல. இறைவன் இஸ்ராயேல் மக்களோடு இரத்தத்தினால் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை, எம்முடைய உயிருள்ளளவும் அந்த ஒரே இறைவனுக்கு மட்டுமே பிரமாணிக்கமாயிருக்க நாம் செய்து கொண்ட உடன்படிக்கை. புதிய ஏற்பாட்டில் இவ் உடன்படிக்கை கிறிஸ்துவின் இறப்பினாலும் இரத்தத்தினாலும் செய்யப்பட்டது. எனவே, இவ் உடன் படிக்கை எமது உயிருள்ளவரை காப்பாற்றப்பட வேண்டிய உடன்படிக்கையாகும்.

இந்த உடன்படிக்கை செய்யப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் இயேசு கொடுக்கின்ற கட்டளை "நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்" என்பதாகும். பெற்ற பெருவாழ்வைப் பிறருடன் பகிர்ந்து வாழ வேண்டும். எறும்புகள் நல்ல உணவைச் சுவைத்தபின் நீண்ட வரிசையாகச் செல்வதை நாம் அவதானித்திருக் கலாம். உணவைச் சுவைத்த எறும்புகள் எதிர் வரிசையில் வரும் எறும்புகளின் வாயில் இவ்வுணவைத் தொட்டுச் செல்லும். இது போன்று தான் இயேசுவின் வாழ்வைச் சுவைத்த நாமும் மற்றவர்களோடு அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

பொதுவுடமைவாதிகள் மத்தியில் ஒரு பொது விதி உள்ளதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் தமது கூட்டத்துக்கு வரும் பொழுது புதிய உறுப்பினர் பத்துப்பேரை அழைத்து வரவேண்டுமாம். கிறிஸ்தவர்களாகிய நாமும் இதே போன்று செயல்பட வேண்டும்.

**கலிலேயாவின் மலைக்குச் சென்றனர்**

பழைய ஏற்பட்டில் 'ஒரேபு' மலைபோல் ஜெருசலேம் மலையும் இருந்தது. இந்த ஜெருசலேம் பலமுறை அழிக்கப்பட்டது. இறுதியாக கிறிஸ்துவின் இறப்புடன் அது முற்றுப்பெற்றது. எனவே, இயேசு அவர்களை கலிலேயாவிலுள்ள மலைக்குக் கூட்டிவந்து அங்கிருந்து சீடர்களை அனுப்புகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சிலரோ ஐயமுற்றனர்"**

இயேசுவின் வாழ்வில் எல்லாக் காலங்களிலும் அவரோடு இருந்தவர்களில் சிலர் ஐயமுற்றனர். அவரது சீடரில் சிலர் இயேசு ஏற்படுத்தப் போகிற இறையரசின் தன்மை பற்றியே ஐயமுற்றனர். இயேசுவோடு நாம் கொண்டுள்ள வாழ்வில் ஏற்படும் சந்தேகங்கள், விளக்கமின்மைகளைப் போக்க வல்லவர் தூய ஆவி ஒருவரே.

இயேசு நமக்குக் கொடுத்த நற்செய்தி பரப்பும் பணியை நாம் செய்யும்பொழுதுதான் தூய ஆவியை முழுமையாகப் பெற்றுக் கொள்ளுகிறோம். எம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட கட்டளை, "உலகெங்கும் போய் நற்செய்தியைப் பரப்புங்கள்". அத்துடன் கொடுக்கப்பட்ட வாக்குறுதி "உலகம் முடிவு வரை உங்களோடு நான் இருப்பேன்."

"கவலையில்லாத மனிதன்
உலகத்தையறிந்தவன் துணிந்தவன் - அவனே
கவலையில்லாத மனிதன்.........!
போவதைக்கண்டு கலங்காமல்
வருவதைக்கண்டு மயங்காமல்
மெய் தளராமல் கை நடுங்காமல்
உண்மையை, பொய்மை உணர்ந்தவனே
காலத்தை வென்றவன் வீரனடா.............!
நல்லின்பத்தைத் தேடி உறவாடு.........!
நீ எழுந்திரு, மனிதா, விளையாடு......!

(கவியரசு கண்ணதாசன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் திருவுடல் திரு இரத்தம்

**வி.ப 24 : 3–8; எபி 9:11-15; மாற் 14:12-16, 22,26**

**கருப்பொருள் :** பகிர்தல், தியாகம், பிறரன்பு ஆகியவற்றில் வாழ நற்கருணை எமக்கு ஊட்டமளிக்கின்றது.

**1ம் வாசகம் :** ஆண்டவர் உங்களுடன் செய்தருளிய உடன் படிக்கையின் இரத்தம் இதுவே.

**2ம் வாசகம் :** கிறிஸ்துவின் இரத்தம் நமது மனச்சாட்சியைத் துன்பப்படுத்துகின்றது.

**நற்செய்தி வாசகம் :** இது என் உடல், இது என் இரத்தம்

'இரத்தம்' என்ற சொல் விவிலியத்தில் 400 முறை வருகின்றது. காரணம் இரத்தம் 'பலி', 'உயிர்' என்னும் இரண்டு முக்கிய பதங்களைக் குறித்தது. விவிலியத்தில் இரத்தம் என்றுமே புனிதமான ஒன்றாகக் கருதப்பட்டது.

இன்றைய முதல் வாசகம் இஸ்ராயேல் மக்களோடு இறைவன் செய்த உடன்படிக்கைபற்றிக் கூறுகின்றது. இந்த உடன்படிக்கை இரண்டுமுறை இரத்தம் சிந்தப்பட்டமைக்கு இடையில் நடைபெற்றது.

1) எகிப்திலே சிந்தப்பட்ட இரத்தம்
2) கானான் தேசத்திலே சிந்தப்பட்ட இரத்தம்

இவ்வாறு சிந்தப்பட்ட இரத்தம்தான் உடன்படிக்கையையும் வெற்றியையும் உறுதிப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய ஏற்பாட்டில் இறைவன் இஸ்ராயேல் மக்களோடு செய்த உடன்படிக்கைகளெல்லாம் இரத்தத்தினாலேயே உறுதிப்படுத்தப்பட்டன. இந்த உடன்படிக்கையின் சிறப்பையும் உறுதிப்பாட்டையும் உணர்த்துவதற்காகத்தான் மோயீசன் பாதி இரத்தத்தை கடவுளைக் குறிக்கும் பீடத்தின்மீதும் பாதி இரத்தத்தை மக்கள் மீதும் தெளித்தார்.

புதிய ஏற்பாட்டைப் பார்த்தால், இன்றைய இரண்டாம் வாசகம் (எபிரேயர் 9:15) இயேசு புதிய உடன்படிக்கையின் இணைப்பாளராக வருகிறார் என்கிறது. இன்றைய நற்செய்தி இந்த உடன்படிக்கையை உணர்த்த இயேசு கடைசி இராவுணவின்போது கிண்ணத்தின் மூலம் செய்த நிகழ்ச்சியைக் கூறுகின்றது. முந்திய உடன்படிக்கைகளை விட இந்த உடன்படிக்கை எவ்வளவோ சிறப்பானது. பழைய ஏற்பாட்டில் மோயீசன் பலியிடப்பட்ட மிருகங்களின் இரத்தத்தை மக்கள் மீது தெளித்து 'ஆண்டவர் உங்களோடு செய்த உடன்படிக்கை" (வி.ப 24:8) என்றார். இயேசுவோ தன் சொந்த இரத்தத்தைச் சிந்தி "உடன்படிக்கைக்கென பலருக்காகச் சிந்தப்படும் என் இரத்தம்" என்றார் (மாற்கு 14:25). இயேசுவினது இரத்தத்தின் இன்னுமொரு சிறப்பு என்னவென்றால், மோயீசனோ இரத்தத்தை மக்கள்மீது தெளித்தார். இயேசுவோ 'இதை வாங்கிப் பருகுங்கள்' என்று தருகின்றார்.

ஏரோதும் பிலாத்துவும் மக்கள் மத்தியில் இரத்தக் களரியை ஏற்படுத்திய சூழலில்தான் இயேசு நமக்காகத் தன் இரத்தத்தைச் சிந்தினார்.

தானங்களிலெல்லாம் சிறந்த தானம் இரத்ததானம் என்பார்கள். மனித இரத்தமே இவ்வளவு பெறுமதி மிக்கதென்றால், இறைமகனாகிய இயேசுவின் இரத்தம் எவ்வளவு பெறுமதி மிக்கது?

இரத்தம் இல்லையென்றால் நமது உடலில் உயிர் இருக்காது. அதேபோன்று இயேசுவின் திரு இரத்தம் நம்மில் ஓடவில்லையென்றால் ஆன்மீக வாழ்வில் நாம் இறந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல உடற்கட்டுள்ள இளைஞன் ஒருவன் தனது மோட்டார் சைக்கிளில் மிக வேகமாகச் செல்கிறான். கட்டுக்கடங்காத வேகத்தினால் எதிரே வந்த பஸ் வண்டியோடு நேருக்கு நேராக மோத நேரிட்டது. இதனால் உடலிலே பலத்த காயங்கள்; இரத்தம் பீறிட்டு ஓடுகின்றது. அவனை அவசர அவசரமாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுகின்றார்கள். பெற்றோர், உறவினர் எல்லோரும் தமது தலையில் அடித்து அழுது கொண்டிருக்கின்றனர்.

அங்கு விரைந்து வந்த மருத்துவர் அவனைப் பார்த்ததும் இவனுக்கு உடனடியாக இரத்தம் ஏற்றினால் உயிர் பிழைப்பான் என்றார். எனவே, பெற்றோர் விரைவாகச் செயல்பட்டு இரத்தத்துக்கு ஒழுங்கு செய்தனர்.

மருத்துவர் அவனுக்கு இரத்தத்தை ஏற்றும் நேரத்தில் இந்த இரத்தம் எனக்கு வேண்டாமென்று கூறி இரத்தப் போத்தலை காலால் உதைத்தான். இரத்தப் போத்தல் நிலத்திலே விழுந்து உடைந்து இரத்தமெல்லாம் நிலத்தில் ஓட, மறுபக்கத்தில் அவ்வாலிபன் பரிதாபமாக இறந்தான்.

ஞாயிறு திருப்பலிக்கு வருகிறோம். நல்லது; திருப்பலியிலே சிந்தப்படுகின்ற திரு இரத்தத்தின் பெறுமதியை எவ்வளவுக்கு உணருகிறோம்? 'திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா?' (1 கொரி 10:16) எனவே, ஒவ்வொரு திருப்பலியிலும் சிந்தப்படும் இயேசுவின் விலைமதிப்பற்ற திரு இரத்தத்தின் பெறுமதியை நன்கு உணர்ந்து விசுவாசத்தோடு முழுத் திருப்பலியிலும் பங்கு பெறுவோம்.

இன்று எமது மக்களின் இரத்தவெள்ளம் ஆறாகப் பாய்ந்த சூழலில்தான் நாம் இயேசுவின் திரு இரத்தத்தின் திருவிழாவைக் கொண்டாடுகிறோம். ஆபேலின் இரத்தம் தொடக்கம் உலக முடிவுவரை சிந்தப்படும் குற்றமற்றவர்களின் இரத்தம் கிறிஸ்து சிந்திய இரத்தத்தோடு சேர்க்கப்படும். குற்றமுள்ள இரத்தமா? குற்றமற்ற இரத்தமா? என்று கண்டுகொள்வது எப்படி? இறை வார்த்தையாலும் தூய ஆவியாலுமே அதனைக் கண்டு கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபேலின் இரத்தம் போன்று இன்று குற்றமற்றவர்களின் இரத்தம் விண்ணை நோக்கிக் கூக்குரலிடுகின்றது.

3 லட்சத்து 80 ஆயிரம் மக்கள் வன்னி முகாம்களில்
11 ஆயிரம் மக்கள் யாழ் முகாம்களில்
10 ஆயிரம் குழந்தைகள் அநாதைகளாக...

போரிலே இறந்தவர்களும் இன்று அரை உயிராயிருப்பவர்களும் உடன்படிக்கையின் ஒரு பகுதியினர். இத்தகைய குற்றமற்ற இரத்தத்தினால்தான் - மக்களுக்கு விடிவு – உலகத்துக்கு மீட்பு வரும். இப்படிப்பட்ட குற்றமற்ற இரத்தத்தின் மட்டில் நமக்குள்ள உணர்வு என்ன? ஆழமாகச் சிந்திப்போமா? வாழ்வில் உண்மையான மாற்றம் ஏற்படுமா?

பிரதிநிதிகளாகப் பணியாற்றுபவர்கள்
எண்ணத்திலும் இதயத்திலும்
தங்களை அனுப்பியவர்களை முழுமையாகப்
பிரதிபலிக்க எதிர்பார்க்கப்படுகிறார்கள்!
தங்கள் சொந்தக் கருத்துக்களையும்
விருப்பு வெறுப்புக்களையும் ஒதுக்கிவிட்டு
அவர்கள் யாருடைய பிரதிநிதியாக விளங்குகின்றார்களோ
அவருடையவற்றை வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்!
குறிப்பிட்ட ஒரு சிறப்புப் பணியை நிறைவேற்றவே
பிரதிநிதிகள் அனுப்பப்படுகிறார்கள்!
அதை மறந்து, அவர்கள் தங்கள் நலத்தை மட்டும் பேணுகின்ற
நயவஞ்சகம் புரிந்துவிடக்கூடாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம்
# 2ம் வாரம்

**1சாமு 3:3–10,19; 1கொரி 6:13-15, 17-20; யோவா 1:35-42**

**கருப்பொருள் :** நிலைத்திருத்தல்

1ம் வாசகம் : ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கிறான்

2ம் வாசகம் : உங்கள் உடல்கள் கிறிஸ்துவின் உறுப்புக்கள்

நற்செய்தி வாசகம் : இயேசுவின் சீடனாய் இருக்க விரும்புகின்றவன் அவரது அழைத்தலுக்கு செவிகொடுத்து அவரோடு தங்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

இன்றைய முதல் வாசகத்தின் அடிப்படையில் சாமுவேல் இரண்டு நிலையுள்ள சூழலில் இறைவனைத் தேடுகிறார்.

1. குழப்பம் 2. இருள்

முதலாவது: ஏலியின் பிள்ளைகளே தந்தையால் திருத்த முடியாத மதி கெட்டவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற குழப்பம்.

இரண்டாவது: கூடாரத்தில் இருளில் கிடந்த சிறுவன் தன்னை அழைத்தது யாரென்று தெரியாமல் தவிக்கின்றான். எனவே, குழப்பமும் இருளும் நிறைந்த நிலையில்தான் இறைவா நீர் எங்கே இருக்கின்றீர்? என்று கேட்கிறார். இதே வினாவைத் தான் இன்றைய நற்செய்தியில் சீடர்கள் இயேசுவிடம் "ரபி, நீர் எங்கே தங்கியிருக்கின்றீர்?" என்று கேட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நமது வாழ்க்கைச் சூழலும் ஒரு குழப்பமும் இருளும் நிறைந்ததொன்று. மனங்களிலே, குடும்பங்களிலே, சமுதாயத்திலே குழம்பிய நிலை... எங்கே போகின்றேன்? என்ன செய்கின்றேன்? என்று அறியாத ஒரு சுய உணர்வற்ற நிலை. வீடு இழந்து முகாம்களிலே, குடிசைகளிலே வாழும் பரிதாப நிலை. வீடு இருந்தும் வீடென்ற நிம்மதியற்ற எதிர்காலத்தை ஏக்கம் நிறைந்ததாக்கி, இருள் அடர்ந்ததாய் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் நிலை. இந்த நிலையில் "இறைவன் எங்கே?" என்ற வினாவைத்தான் மக்கள் கேட்கிறார்கள். இது ஒரு மேலோட்டமான வினா அல்ல. ஆழமான, சோகம், அவநம்பிக்கை, விரக்தி நிறைந்த ஒரு வினா.

ஆனால், இவ்வினாவைக் கேட்கும் மனிதன் இறைவனின் பதிலைக் கேட்காமலே அலைந்து திரிகின்றான். காரணம் என்னவென்றால், முதலாவது; இன்றைய மனிதனுக்கு கேட்கின்ற மனநிலையோ உடல் நிலையோ இல்லை. பலர் இன்று விழிப்பற்ற தூக்க மயக்கத்திலேயே இருக்கிறார்கள்.

இரண்டாவதாக; சத்தங்கள் நிறைந்த ஒரு சூழல். இந்தச் சத்தம் மனிதனுக்கு வெளியேயும் உள்ளது. உள்ளேயும் உள்ளது. அடுத்தவனது சொல்லைக் கேட்க முடியாத நிலை. இப்படிப்பட்ட நிலையில் ஆண்டவர் சொல்வதை எப்படிக் கேட்க முடியும்? மூன்றாவதாக; பயம். ஆண்டவரின் பதிலைக் கேட்டால் வாழ்வை மாற்ற வேண்டுமே எனும் பயம்; உள்ளத்தை உற்றுப்பார்க்க பயம். எனவே தான், இன்றைய மனிதன் அலைந்து கொண்டே திரிகின்றான்.

இப்படிப்பட்ட மனிதனுக்குத்தான் இறைவனின் பதில் வருகின்றது. "வந்து பாருங்கள், என்னோடு தங்குங்கள், நிலைத்திருங்கள்". இயேசு தந்தையுடன் இரண்டறக் கலந்த நிலையிலுள்ளதுபோல சீடரும் இயேசுவோடு நிலைத்திருக்க வேண்டும் என்று கேட்கிறார். "அன்று அவர்கள் அவரோடு தங்கினார்கள்" என்று நற்செய்தி கூறுகின்றது.

நிலைத்திருத்தல் என்பது உறவிலே ஏற்படுகின்ற மௌனத்தின் உச்ச நிலை. உதாரணமாக உற்ற நண்பர் இருவர் ஒருவரை ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்கும் நேரத்தில் மௌனத்தில் செலவிடும் நேரம். அது வெறும் மௌனமல்ல; ஒருவரின் இதயத் துடிப்பை (அது அன்பாக இருக்கலாம். துக்கமாக இருக்கலாம்) அடுத்தவர் தனது உள்ளத்தால் கேட்கும் மௌனம்.

இறைவனோடு நிலைத்திருத்தல் என்பது ஒரு ஆழமான அனுபவம். என்னை அளவற்ற அன்பு செய்து, எனக்கு வாழ்வளித்து, என்னைப் பாதுகாத்து வரும் என் நண்பனான இயேசுவோடு நான் கொண்டுள்ள ஆழமான உறவு. இந்த அனுபவம் ஓர் ஆழ்கடலைப் போன்றது. அங்கு அலைகளில்லை; அமைதி நிலவும்.

நான் பங்குகளிலே ஆலயத்திற்குள் இருந்து செபிக்கும் பொழுது நற்கருணை எண்ணெய் விளக்கை அவதானிப்பது உண்டு. ஆலயத் திற்கு வெளியில் பெரும் காற்று, புயல் அடித்துக் கொண்டிருக்கும். ஆனால், இந்த நற்கருணை விளக்கு ஆடாமல் அசையாமல் எரிந்து கொண்டிருக்கும். இறைவனோடு இருக்கும் உள்ளங்களும் இதே போன்று தான். வாழ்க்கையிலே பலவிதமான புயல்கள் வீசலாம். ஆனால், உள்ளத்து அமைதி குன்றாமல் இருக்கும். இந்த அமைதி வாழ்வில் இருந்து ஒதுங்கி ஈடுபாடு இல்லாதிருப்பதனால் வரும் அமைதி அல்ல, மாறாக இறைவனின் இதயத்துடிப்பு, இறைவனின் செய்தி என்பவற்றை உள்ளத்தில் உணர்வதனால் வரும் அமைதி.

அன்பின் அனுபவத்தைப் பெற்ற இயேசுவின் சீடர் யோவான் நிலைத்திருத்தலைப்பற்றிப் பல தடவைகள் கூறுகின்றார். நிலைத் திருத்தல் என்னும் சொல் 122 தடவை நற்செய்தியில் வருகிறது. அது யோவான் நற்செய்தியில் 66 முறை இடம்பெறுகிறது. நிலைத்திருத்தல் சீடத்துவத்தின் உச்சக்கட்டம். யோவான் 15ம் அதிகாரத்தில் திராட்சைக் கொடி பற்றிய நிலைத்திருத்தல் பற்றி யோவான் பல தடவை கூறுகின்றார். இயேசுவே என் வாழ்வின் ஊற்று, உயிர், அனைத்தும். அவரிலே இணைந்து வாழும் பொழுது கலாத்தியர் 5:22ல் கூறப்படுகின்ற ஆவியின் கனிகள் நிறைந்து விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 3ம் வாரம்

**யோனா 3 : 1–5,10; 1கொரி 7:29-31 மாற் 1:14-20**

கருப்பொருள் : மனமாற்றம்

1ம் வாசகம் : இறைவாக்கினர் யோனாஸ் மக்களை மனந் திரும்ப அழைக்கிறார்.

2ம் வாசகம் : இவ்வுலகத்தின் இன்பம் நிலையானதல்ல.

நற்செய்தி வாசகம் : இயேசு மனந்திரும்ப மக்களை அழைக்கின்றார்.

சென்ற வாரம் "இறைவனோடு நிலைத்திருத்தல்" என்னும் கருப்பொருளில் சிந்தித்தோம். இவ்வார வழிபாடு "நமது உள்ளத்தில் இறைவனுக்கு இடத்தை ஒதுக்க வேண்டும்" என்னும் கருப்பொருளில் சிந்திக்க நம்மை அழைக்கின்றது. இன்றைய உலகின் பிரச்சினை என்னவென்றால் யாரைப் பார்த்தாலும் "நேரமில்லை" என்ற வார்த்தையோடு வாழ்வது. நீண்டகாலப் போரின் விளைவாக நமது வாழ்வு வசதிகள் அற்ற ஒன்றாக மாறிவிட்டது. போரினால் ஏற்பட்ட நிகழ்வுகள், அதனால் ஏற்பட்ட தாக்கம், கவலை போன்றவை நம் உள்ளங்களை நிரப்பி விடுகின்றன. வழிபாட்டுக்கு வந்தாலும் நமது உள்ளம் சடங்கு, நிகழ்ச்சிகளால் நிரம்பி விடுகின்றது. இறைவன் நம் உள்ளத்தில் பேச இடமில்லாது போகின்றது. "நடந்து வந்த பாதையினை திரும்பிப் பாரடா" என்ற பாடல் வரி உண்டு. நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்வை திரும்பிப் பார்த்தோம் என்றால் இறைவனுக்கு எவ்வளவு இடம் கொடுத்துள்ளோம் என்பது புரியும். இன்றைய வழிபாடு நம் உள்ளத்தில் இத்தகைய இடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கு ஏற்படுத்த நம் ஒவ்வொருவரையும் அழைக்கின்றது. குறிப்பாக இன்றைய இரண்டாம் வாசகம் இதை வலிந்துரைக்கின்றது.

இறைவனிடம் திரும்புவதாலேயே இவ் இடம் உருவாக்கப்பட முடியும். இதுவே "மனந்திரும்புதல்" என்று அழைக்கப்படுகிறது. இன்றைய இரண்டாம் வாசகம் கூறுவது போல இறைவனின் கண்ணோட்டத்தில், இறையரசு அண்மித்து விட்டது எனும் மன நிலையில் அனைத்தையும் செய்வதே அது. இறையரசு என்பது முழுக்க முழுக்க இறைவனின் கொடை. மனிதனைப் பொறுத்த வரையில் அந்தக் கொடையை ஏற்கும் மனநிலை அவனிலே உருவாக்கப்பட வேண்டும். இன்றைய முதலாவது வாசகத்தின் பின்னணியில், அசீரியா (நினிவே) 400 ஆண்டுகளுக்குமேல் பல நாடுகளை ஆட்சி செய்த இடம். எனவே, மிகச் சுறுசுறுப்பாக, பல்வேறு பணிகளில் ஈடுபட்ட இடம். இராணுவத் திட்டங்கள் எந்நேரமும் அமுல் படுத்தப்படுவது பற்றிய சிந்தனை நடந்து கொண்டிருந்த இடம். இத்தகைய பெரிய அரசின் தலைநகர் அழிக்கப்படப் போகின்றது என்பது அனைவருக்கும் பெரும் சவாலாக அமைந்தது. வேறு விதத்தில் சொல்லப் போனால் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும் என்னும் "அழைப்பு" விடுக்கப்பட்டது.

யோனா தனது வாழ்வை மத நிகழ்வுகளால் நிரப்பிய ஒருவர். மத நிகழ்வுகளால் நிரப்பிய காரணத்தினால் இறை அழைப்பை அவரால் உணர முடியவில்லை. ஒவ்வொரு மனித உள்ளத்திலும் இறைவனுக் கான இடம், ஏக்கம் உண்டு. எந்த மத நிகழ்வும் இத்தகைய இடத்தை ஏற்படுத்துவதற்குத் துணைபுரிய வேண்டும். அத்துடன் அந்த இடத்தை இறை பிரசன்னத்தாலும் இறை அருளாலும், இறை விழுமியங்களாலும் நிரப்ப வேண்டும். அவ்வாறு நிரப்பாவிடில் அவ்விடம் விரைவில் வேறுபல உலகப் போக்குகளால் நிரப்பப்படுகின்றது.

யோனா வாழ்வின் ஆரம்பத்தில் மட்டுமல்ல இறுதியிலுமே தனது வாழ்வை சமய நிகழ்வுகளால் நிரப்பியதனாலேயே இறை அழைப்பின் குரலை கேட்கவோ, இறை திட்டத்தை உணரவோ முடியவில்லை. வழிபாடுகளுக்கு வரும் நாம் ஒவ்வொருவரும் எமது உள்ளத்திலே எவ்வளவுக்கு இறைவனுக்கு உரிய இடம் ஏற்படுத்தப்படுகின்றது, இறைவனின் குரலைக் கேட்கவும், இறை திட்டத்திற்கு சரணடையவும் வழி வகுக்கின்றது என்று சிந்திப்பது அவசியம். பல்வேறு குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இறைவனின் குரலை இனங்காண நாம் எந்நேரமும் விழிப்பாய் இருப்பது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம்
# 4ம் வாரம்

**இ.ச 18: 15–20; 1கொரி 7:32-35; மாற் 1:21-28**

**கருப்பொருள் :** இறைவார்த்தையை அதிகாரத்துடன் போதிக்கும் துணிவுள்ளவர்களாய் நாம் மாற வேண்டும்.

1ம் வாசகம் : நாம் ஒரு இறைவாக்கினரைத் தோன்றச் செய்து, நம் வார்த்தைகளை அவருடைய நாவில் வைப்போம்.

2ம் வாசகம் : கன்னிப்பெண் தூயவளாயிருக்கும்படி ஆண்டவருக்குரியதிலேயே கவலையாயிருக்கிறாள்.

நற்செய்தி வாசகம் : அதிகாரமுள்ளவராக போதித்து வந்தார்

இறையரசு நெருங்கிவிட்டது என்று இயேசு அறிவிக்கின்றார். இறையரசைப் பொறுத்தவரை இது மிகவும் கடினமான காலம். இறையரசின் வேலைகளும் இறையரசு அறிவிப்பும் பலவிதங்களில் தடைசெய்யப்படுகிறது. இன்று திருச்சபையின் அடிப்படைப் பிரச்சினையாக இருப்பது இரண்டு விதமானவர்கள் இறையரசின் முயற்சிகளைத் தடை செய்து கொண்டிருப்பதே. அவர்கள் படித்தவர்களும், பரிசேயர்களும் ஆவர். இவர்களே இன்று இறைபணிக்கு எதிரான தீய சக்திகளுக்குத் துணை போகின்றனர்.

படித்தவர்கள் இறையரசின் அவசியத்தையும் காத்திரத் தன்மையையும் குறைக்கின்றனர். அறிவியல் வளர்ச்சி, விஞ்ஞான த்தின் முன்னேற்றம் போன்றவை இறையரசின் வருகை தற்போதைக்கு இல்லையென்று மறுத்துப் பின்போடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீய சக்திகள் பலவிதங்களில் இறையரசின் போதனைக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் போலிப் போதகர்கள் பெருமளவு உருவாகின்றனர். இதனால் உண்மை இறைவாக்கினர் பின் தள்ளப்படுகின்றனர்.

புதிய இறைவாக்கினர் சமாளிக்க முற்பட்டால் தண்டனையை அனுபவிப்பர். எனவே, ஆண்டவர் மீது முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டும். இன்றைய முதலாம் வாசகமும், இரண்டாம் வாசகமும் இறையரசுக்காகக் காத்திருப்போர் பிளவுபட்ட மனநிலையில் வாழமுடியாது என்பதை உறுதிப்படக் கூறுகின்றன. 3ம் மிலேனியத்தில் பல இறைவாக்கினர் தமது அதிகாரத்தை இழந்து விட்டனர். ஏனெனில், இருளின் சக்திகளோடு போராடுவதாலேயே அவ்வதிகாரம் கிடைக்கும். நாமோ இயேசுவைப்போல் 'வாயை மூடு; வெளியே போ' என்று சொல்ல முடியாதவர்களாகிவிட்டோம்.

தகுதியைக் கண்டு பொறுப்பினைக் கொடுப்பது
மனிதர்களின் செயல்முறை!
பொறுப்பினை வழங்கி தகுதியை உருவாக்குவது
இறைவனின் பாணி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 5ம் வாரம்

**யோபு 7: 1–4, 6-7; 1கொரி 9:16-19, 22-23; மாற் 1:29-39**

**கருப்பொருள் :** வேதனையுறும் மனுக்குலத்தின் மீது இறைவன் தன் இரக்கத்தைப் பொழிகின்றார்.

1ம் **வாசகம் :** துன்பங்கள் நிறைந்த மனித வாழ்க்கை

2ம் **வாசகம் :** நற்செய்தியை அறிவிக்காவிடில் நமக்கு ஐயோ கேடு.

நற்செய்தி **வாசகம் :** இயேசு பிணி போக்கும் மருத்துவர்

இன்றைய நிகழ்வுகளின் அடிப்படையில் நமது மக்களை மூவிதமாக நாம் இனங்காணலாம்.

1) அனைத்தையும் இழந்தோர்
2) இழப்பு இல்லாதோர்
3) என்ன நேருமோ என்ற ஏக்கத்துடன் வாழ்வோர்

இவர்களுள் இறைவனைத் தேடுவோர் யார்?

யோபுவின் வாழ்வு வெறுமைக்குத் தள்ளப்பட்டது போல், இன்று நம் வாழ்வும் எப்பொழுது விடியும், நிம்மதி வருமோவென ஏங்கும் வாழ்வாக, நெசவுத்தறி நாடாபோன்று அங்குமிங்கும் அலைக்கழிக்கப் படும் அர்த்தமற்ற வாழ்வாக, சொந்தமென்று எதுவுமில்லா இடம் பெயர்ந்த வாழ்வாக மாறி, வெறும் காற்றடித்த பைகளாக - இளைத்துக் களைத்து மூச்சே அற்றுப் போனவர்களாக அத்தனை துன்பங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையிழந்தவர்களாக, கடவுள் நம்பிக்கையையுமிழந்தவர்களாக நம் மக்கள் வாழ்வதை நாம் காண்கிறோம்.

இத்தகைய சூழலில்தான் இறைவார்த்தையான இயேசு நம் மத்தியில் வருகிறார். இராயப்பரின் மாமியைப்போல் நாமும் மீண்டும் மீண்டும் நோய்வாய்ப்பட்டவராகிறோம். இத்தொடர் நோய், பாதிப்புக்களால் நம்முள் பலருக்கு பலமெல்லாம் அற்றுப்போய் நல்மனம் ஒன்றுதான் எஞ்சியுள்ளது. நமது இந்தத் துன்பநிலையை மாற்ற யார் நம்மைக் கைதூக்குவார்...?

நம்மைத் தூக்கிவிட, குணமளிக்க இறைவனே நம்மத்தியில் வருகிறார். அவர் நம் வீட்டில், நம்மத்தியில் வந்து நம் நிலையை நன்கு கவனிக்கிறார். நாம் நமது நிலைகளுக்குள் நின்று கொண்டு அவரை வரவேற்கிறோமா என்று பார்க்கிறார்.

கரம் நீட்டுதலும் கைதூக்குதலும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் செய்வதன் அடையாளம். இன்று முதல், அவரே ஆண்டவர், தலைவர், வழிகாட்டி. அப்படியானால் நமது வாழ்வு அதற்குப் பதிலளிக்கும் வாழ்வாக மாற வேண்டும். அவ்வாறான வாழ்வு புதிய இறை உறவை ஏற்படுத்தி இறைவனின் விருப்பு, திட்டத்தையே நிறைவேற்றி இறையரசைக் கட்டியெழுப்பும் வாழ்வாக அனைவருக்கும் சகோதர சகோதரிகளாக பணிவிடை புரியும் வாழ்வாக அமையும். சகோதர சகோதரிகளுக்கு நம்மை அர்ப்பணித்த வாழ்வு அவரை நம் தலைவராக ஏற்கும் வாழ்வாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 6ம் வாரம்

**லேவி 13: 1–2, 44-47; 1கொரி 10:31,11:1; மாற் 1:40-45**

**கருப்பொருள் :** அப்பழுக்கற்ற அன்பே தேவையானதொன்று.

1ம் வாசகம் : தொழுநோயாளி பாளையத்துக்கு வெளியே தனித்து வாழக்கடவான்.

2ம் வாசகம் : நான் கிறிஸ்துவைப் போல் நடக்கிறவாறே நீங்களும் என்னைப்போல் நடந்து கொள்ளுங்கள்.

நற்செய்தி வாசகம்: தொழுநோய் அவனைவிட்டு நீங்க, அவன் குணமானான்.

3ம் மிலேனியத்தில் அன்பு செய்யப்படுவது ஒரு சொற்ப, தேர்ந்தெடுக்கப்பட்ட, மறைமுகமாயுள்ள ஒரு சிலருக்கே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்று எண்ணத் தோன்றுகிறது.

இன்று உலகம் சகல இன்பங்களையும் தேடி ஓடும் கூட்டம், துன்புறும் பெரும் மனுக்குலம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

இவ்விரு சாராரும் அரசியல் நோக்கங்களுக்காகவே தேடப் படுகின்றார்கள். அரசியல்வாதிகள் இவர்களைத் தேடுவது தமது சுய இலாபங்களுக்காகவே.

அவர்கள் மேலுள்ள அக்கறை அரசியல் இலாபங்களுக்காக மட்டுமே. அரசியல் சதுரங்கத்தில் அடகு வைக்கப்பட்டவர்களாக அல்லது என்றோ மறக்கப்பட்டுவிட்டவர்களாகவே அவர்கள் உள்ளனர். தொழுநோயாளிகளின் நிலையும் இவ்வாறுதான், சொந்த வீட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே, நகருக்கு வெளியே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள். அவர்கள் பெயரே மாசுபடிந்ததாகக் கணிக்கப்பட்டது.

ஒரு சிலர் வாழ்வின் வடுக்களைப் பெற்ற மக்களாயிருந்தனர். அவர்களை யாரும் கணக்கெடுக்கவில்லை. எவ்வேளையிலும் உதாசீனம் செய்யப்படக்கூடியவர்களாயிருந்தனர். ஒரு சாரார் தம் சொந்தக் குற்றங்களினாலும், மது, போதைப் பொருள் பாவனையாலும் இன்னொரு சாரார் தாம் வாழும் சமூகத்தில் தமது நடத்தைக் கோலங்களால் பெற்றுக் கொண்ட சமூகக் கணிப்பினாலும் உதாசீனம் செய்யப்படுகின்றனர்.

இவ்விதமானவர்களாக இல்லாமல் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு சமூகத்துடன் அண்டிப் பிழைத்து எப்படியும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும்.

அன்பு செய்யப்படாததும் அரவணைக்கப்படாததும் ஓர் உளவியல் ஆன்மீக நோய். இன்று பலர் அன்பு செய்ய, அரவணைக்க யாருமின்றி அலைகின்றார்கள். இவ்வாறு அலைவோரில் ஒருவன்தான் இன்றைய தொழுநோயாளி. இயேசு அணுகக்கூடியவர், நம்பிக்கைக் குரியவர் என்பதால் அவரை அணுகுகின்றார். அவரும் அவனைத் தொட்டு - அணைத்து - ஏற்று மீண்டும் சமூகத்தின் அங்கத்த வராக்குகின்றார்.

சாதாரணமாக குற்றம் புரிந்தவரின் கடந்த காலத்தையே நம்மில் பலர் பார்க்கின்றோம். இவ்விதம் பழையதையே பார்ப்பதால் பலர் பாதிப்புக்குள்ளாகி - அன்பையும் அனுதாபத்தையும் இழக்கின்றனர்.

இன்று நம் முன் உள்ள தேவை அன்பும் அனுதாபமும் நிறைந்த சமூகத்தை உருவாக்குவதே என்பதை உணர்ந்து வாழுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 11ம் வாரம்

**எசெக் 17: 22–24; 2கொரி 5:6-10; மாற் 4:26-34**

**கருப்பொருள் :** இறையரசின் தன்மைகள் உலகெங்கும் நிறைந்து விளங்கிட நாம் உழைத்திடுவோம்.

**1ம் வாசகம் :** தாழ்ந்திருக்கும் மரத்தையெல்லாம் ஓங்கச் செய்வோம்.

**2ம் வாசகம் :** உடலில் குடியிருந்தாலும் அதனின்று குடி பெயர்ந்தாலும் ஆண்டவருக்கு உகந்தவர்களாய் இருக்க முயல்கிறோம்.

**நற்செய்தி வாசகம் :** விதைகளிளெல்லாம் மிகச் சிறியது செடிகளில் எல்லாம் மிகப்பெரியதாகிறது.

இறையரசின் வளர்ச்சிபற்றிச் சிந்திக்க இன்று நாம் அழைக்கப் படுகின்றோம்.

அரசியல் கட்சிகளின் வளர்ச்சி, மனித வளர்ச்சி, வித்திலிருந்து தாவரங்களின் வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி போன்ற ஏராளமான வளர்ச் சிகளை நாம் அறிவோம்.

ஆனால், இறையரசு உலகில் நாம் காணும் வளர்ச்சியிலிருந்து பெரிதும் வேறுபட்டது. நாம் இறையரசை விரும்புகின்றோம். ஆனால், அதன் நிபந்தனை, தன்மை, ஒழுங்குகளை விரும்புவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையரசின் முக்கியமான தன்மை என்னவென்றால், அதன் மெய்மைகளை நாம் வெளிப்படையாகக் காண முடியாது. பல வேளைகளில் இறைமக்களாகிய நாமே திருச்சட்டம், வேதாகம வாழ்வு அனைத்தையும் உலகப் போக்குக்கு ஏற்றதாக்கி விடுகின்றோம். விசுவாசக் கண்ணோட்டம் இல்லாமல் செய்து விடுகின்றோம். எமது வாழ்வு இறை விசுவாசக் கண்ணோட்டத்தில் இல்லாமல், உலககண் ணோட்டத்தில் பதிந்து விடுகின்றது. விசுவாசக் கண்ணோட்டத்தில் எல்லா விழுமியங்களும் உலக நிலைக்கு எதிர் மாறானதாக அமைந்து விடுகின்றன. இவ் விழுமியங்கள் மனித பலத்தினால் வளருவதில்லை. அவற்றின் ஆரம்பம், வளர்ச்சி, முதிர்ச்சி, அனைத்தும் மனித கணிப்பு, கண்ணோட்டம் என்பவற்றிலிருந்து வேறுபட்டவை.

ஆனால், இறையரசுக்காக வாழ முன்வந்தவர்கள்கூட உலகக் கனவு, கணிப்பை வைத்து எமது வாழ்வைப் பார்த்து குழப்பமடை கின்றனர்.

1ம் வாசகத்தில் எசெக்கியேலின் எச்சரிக்கை நமக்குக் கொடுக்கப்படுகிறது. இறையரசு முற்றும் இறைவன் செயல். ஓங்கிய மரத்தைத் தாழ்த்தி, தாழ்ந்த மரத்தை ஓங்கச் செய்வார். பசுமையான மரத்தை உலரச் செய்து உலர்ந்த மரத்தை தழைக்கச் செய்வார். ஆண்டவர் தாமே செயலாற்றுவார் என்று கூறுகிறார்.

2ம் வாசகம் நாம் நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாழ்கின்றோம் என்று கூறுகின்றது. இவ்வுடலில் குடியிருக்கும் வரையில் நாம் ஆண்டவரிடமிருந்து அகன்று இருக்கின்றோம். இறையரசை, நம்மிலே, திருச்சபையிலே, உலகிலே காண விசுவாசம் தேவை. இறையரசுக்கு எனது பங்களிப்பு என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம்
# 12ம் வாரம்

**யோபு 38:1, 8-11; 2கொரி 5:14-17; மாற் 4:35-40**

**கருப்பொருள் :** இயற்கை அனைத்தும் இறைவனின் ஆட்சிக்கு உட்பட்டது.

**1ம் வாசகம் :** உன் கொந்தளிப்பின் இறுமாப்பு இங்கே அடங்கி நிற்கட்டும்.

**2ம் வாசகம் :** இதோ புதியன தோன்றியுள்ளன.

**நற்செய்தி வாசகம் :** காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே, இவர் யாராயிருக்கலாம்?

"சோதனை மேல் சோதனை
போதுமடா சாமி
வேதனைதான் வாழ்க்கையென்றால்
தாங்காது பூமி"

என்ற கவிஞனின் வரிகள், துன்பத் தீப்பிழம்புகளோடு பயணித்துக் கொண்டிருக்கும் எமது மக்களின் விவரிக்க முடியாத மன வேதனைகளையும் இதயக் குமுறல்களையும் நம் கண்முன்னே நிறுத்துகின்றன.

'கடவுள் எங்கே? அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? நாம் செய்த எந்தக் குற்றத்திற்காக இவ்வளவு தண்டிக்கப்படுகின்றோம்?' என்ற கேள்விகளைக் கேட்கின்ற எமது மக்களின் பிரதிநிதியாக யோபு காட்டப்படுகின்றார். இவ்வாறு கேள்வி கேட்ட யோபுவை ஆண்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர் கொள்ளுகின்றார். கடவுளது வல்லமைமுன் யோபுவின் ஒன்றுமில்லாமை வெளிப்படுத்தப்படுகிறது.

'மாலை நேரம்' எங்கள் வாழ்வின் மதியம் திரும்பிய நேரம், குடியாட்சியின் மதியம் திரும்பிய நேரம். 'அக்கரைக்குப் போவோம்' என்று இயேசு கூறுகிறார். வாழ்வின் அக்கரைக்கு, புதுப்பித்தல் திட்டத்துக்கு சீடரின் படகுகள் மட்டுமல்ல, வேறுபடகுகளும் நின்றன.

'பெரும் புயல் அடித்தது'

வாழ்வின் வெவ்வேறு புயல்களை இது அடையாளப்படுத்துகின்றது.

'நாங்கள் சாகப்போகிறோமே, உமக்கு கவலை இல்லையா?' இது இரண்டு விடயங்களை வலியுறுத்துகின்றது.

1) வல்லமை நிறைந்த கடவுள் 'தூக்கம்' 'இறப்பு' 'இயலாமை' க்குள் இருக்கிறாரா? தூக்கம், இறப்பு, இயலாமை மூன்றும் எபிரேய மொழியில் ஒரே சொல்லின் அர்த்தத்தைப் பெறுகின்றன.

2) மனிதனின் இயலாமை

கடவுளின் வல்லமைக்கு எதிராகப் புயல் வீசுகிறது

திருப்பாடல் 4 ஆபத்துக்கள் பற்றிக் கூறுகின்றது. வனாந்தரம், சிறை, நோய், புயல். ஆழ்கடல், பயங்கர மிருகங்கள் வாழும் சாத்தானின் இடமாகக் கூறப்படுகிறது.

மேலோட்டமாகப் பார்க்கும்போது தீய சக்திகளின் கை ஓங்கி நிற்கின்றது. புயல் அடிக்கும் நேரம்: கடலோடு நீண்ட அனுபவமுள்ள மீனவர்கள் கடல் அனுபவமே இல்லாத இயேசுவின் காலில் விழுகின்றனர். இது மனிதனின் இயலாமையையும் விரக்தி நிறைந்த நிலையையும் காட்டுகின்றது.

முதலில் இயேசு மௌனமாயிருக்கிறார். பின்னர் தீய சக்திகளை – புயலைக் கடிந்து, தனது வல்லமையைக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே இயேசு இன்று தமிழ் மக்களையும் பார்த்து, "உங்களுக்கு இன்னும் விசுவாசமில்லையா? ஏன் அஞ்சுகிறீர்கள்?" என்கிறார். கடவுளின் மௌனம் நாம் பிரச்சினைக்குள் ஆழமாக இறங்க உதவுகிறது. எப்பொழுது மனிதன் அவநம்பிக்கையின் அடித்தளத்துக்கு இறங்குகிறானோ அப்பொழுதுதான் இறைவன் வந்து கை தூக்குகின்றார். அவர் அவ்வாறு செய்வது "கடவுள்தாமே வந்து நம்மைக் கைதூக்கினார்" என்பதை நாம் என்றும் உணரவேண்டும் என்பதற்காகவே.

பிரச்சினைகள் வரும் நேரங்களில் நாம் 2 விதமாக செயற்படலாம்.

1) கடவுளை நிந்தித்து தீயவர்களாக மாறலாம்.

2) அப்போஸ்தலர் போன்று ஆழமான விசுவாசத்துடன் இறைவனிடம் சரணடையலாம்.

வாழ்விலே பிரச்சினைகள் வரும்போது நாம் சாந்தப்படுத்தும், பிரச்சினையிலிருந்து தப்பியோடும் வார்த்தைகளை பலவேளைகளில் பயன்படுத்துகிறோம். உதாரணம் 'பசிக்குது என்றால்' "பரவாயில்லை பரலோகத்தில் பாயாசம் கிடைக்கும்" என்பது போன்ற வார்த்தை களைப் பயன்படுத்துகிறோம். மாறாக, இயேசுவோ பிரச்சனைகளின் அடிப்படைக்குச் சென்று பிரச்சினைகளுக்கு நாம் முகங்கொடுக்கச் செய்கிறார். இவ்வாறுதான் நமது வாழ்விலே உண்மையான விடுதலை பெறச் செய்கிறார்.

அப்போஸ்தலர்கள் புயலினால் ஏற்பட்ட பயத்திலிருந்து இன்னுமொரு பயத்துக்குள் போகிறார்கள் "இவர் யாரோ?" புனித மாற்கு தனது நற் செய்தியை கடவுளின் மகனான....(1:1) என்று ஆரம்பித்து (15:39ல்) இம் மனிதர் உண்மையாகவே இறைமகன் என்ற புறவின மனிதனின் விசுவாச அறிக்கையோடு நிறைவு செய்கிறார். அவரது சீடரோ ஒவ்வொரு அருங்குறியின் முடிவிலும் அவரது இறைத்தன்மையைக் கண்டு கொள்ள முடியாதவர்களாக "இவர் யாரோ?" என்று மலைத்து நிற்கின்றனர். இன்றும் இயேசுவின் சீடராகிய நாமும் இயேசுவின் இறைத் தன்மையைக் கண்டுணர முடியாத மந்த புத்தியுள்ளவர்களாயிருப்பதை மாற்கு சுட்டிக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 13ம் வாரம்

**சா.ஞா 1:13-15, 2:23-25; 2கொரி 8:7,9,13-15; மாற் 5:21-43**

**கருப்பொருள் :** வாழ்விக்க வந்த இயேசுவை நாம் உறுதியாக விசுவசிப்போம்.

**1ம் வாசகம் :** பசாசின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது.

**2ம் வாசகம் :** உங்களிடம் மிகுதியாயிருப்பதைக்கொண்டு ஏழைகளின் குறைவை நீக்குங்கள்.

**நற்செய்தி வாசகம் :** சிறுமியே, உனக்குச் சொல்லுகிறேன் எழுந்திரு.

**இயேசுவின் பணி வாழ்வு கொடுப்பது**

மனித சமூகம் வாழ விரும்பினாலும் மனிதனும் சமூகமும் சாவையும் விரும்புகின்றது. தொழுகைக்கூடத் தலைவனுடைய வீட்டிலிருந்து ஆள்கள் வந்து அவரிடம் "உம்முடைய மகள் இறந்துவிட்டாள். போதகரை ஏன் இன்னும் தொந்தரவு செய்கிறீர்?" என்று கூறுகின்றனா். இயேசு ஜாயீரின் வீட்டுக்கு வந்தபோது ஓலமிட்டுப் புலம்புவோரையும், மரணச் சடங்கின் அமளியையும் பார்க்கின்றார். இங்கு ஓலமிட்டுப் புலம்புவோர் அநேகமாக கூலிக்கு மாரடிப்போர். அங்கு நின்ற பெரும்பான்மையானோர், மரணச் சடங்கின் மூலம் பிழைப்பவர்கள். வேலைக்காரர் எதிர்க்கின்றனர். மக்கள் நையாண்டி செய்கின்றனர். இயேசு வாழ்வு கொடுப்பதற்கு ஒருவகைப் போராட்டம் செய்ய வேண்டியிருந்தது.

இரத்தப்போக்குடைய பெண்ணின் வாழ்வில் - அவள் சமூகத்துக்குள் போகமுடியாது – தடை – இதனால்தான் இயேசுவினுடைய ஆடையின் விளிம்பை இரகசியமாக வந்து தொடுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவரும் அவளைத் தொட முடியாது – அப் பெண்ணைத் தொட்டால் அவர்களும் தூய்மையற்றவர்களாகிவிடுவார்கள் என்பது அன்றைய மக்களின் எண்ணம்.

இங்கு இயேசுவுக்கு ஒரு போராட்டம். "என் மேலுடையைத் தொட்டவர் யார்?" சீடர் "இம்மக்கள் கூட்டம் உம்மைச் சூழ்ந்து நெருங்குவதைக் கண்டும் என்னைத் தொட்டவர் யார்? என்கிறீரே" என்றனர்.

## வாழ்வு கொடுப்பது எளிதல்ல

இன்று முகாம்களிலே முட்கம்பிகளுக்குப் பின்னால் முடங்கிக் கிடப்பவர்களுக்கு வாழ்வு கொடுப்பது எளிதல்ல. எம்முள் எத்தனைபேர் அவர்களுக்கு ஏதாவது செய்கிறோம்?

இந்த முழு நிகழ்விலும் பாதிக்கப்பட்டவர்கள் மட்டும், அதாவது இரத்தப்போக்குடைய பெண்ணும், இறந்த சிறுமியின் தந்தையும் இயேசுவிடம் சரணடைகின்றனர்.

இயேசு அப்பெண்ணிடம்: "மகளே! உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கிற்று." சிறுமியின் தந்தையிடம்: "விசுவாசத்துடன் இரு" விசுவாசமற்றவர்களுக்கு வாழ்க்கைப் பிரச்சினை புரியாது. எத்தனையோ பேருக்கு வாழவேண்டுமென்று ஆசை. ஆனால், வேறு சிலர் சாவோடு விளையாடுகின்றனர்.

முகாம்களில் இருக்கும் இளையோர், முதியோர் அனைவரும் வாழ்வுக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றனர். அணுஅணுவாக இறந்து கொண்டிருக்கின்றனர். எமது உடன் பிறப்புக்கள் இவ்வாறு இறந்து கொண்டிருக்க இங்கே வாழும் நாம் எவ்வளவுக்குக் களியாட்டங்க ளென்றும் தேவையற்ற விழாக்கள் பொழுதுபோக்குகளென்றும் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றோம்?

நாம் ஒவ்வொருவரும் எவ்வளவுக்கு உயிரை மதித்து, உயிரைக் காப்பாற்றுவதற்கு முயற்சியெடுத்து வருகிறோம்? அடுத்தவருக்கு நடக்கும்போது நான் ஏனென்று கேட்காவிட்டால், எனக்கு நடக்கும் போது அயலவரென்று யாரும் இருக்கமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 14ம் வாரம்

**எசெக் 2:2-5; 2கொரி 12:7-10; மாற் 6:1-6**

கருப்பொருள் : எதிர்ப்புக்கள் மத்தியிலும் இறைவாக்குரைக்கும் பணிக்கு எம்மை நாம் அர்ப்பணிக்க வேண்டும்.

1ம் வாசகம் : தங்கள் நடுவில் இறைவாக்கினர் ஒருவர் அனுப்பப் பட்டுள்ளார் என்பதை அந்தக் கலகக்காரர் அறிந்துகொள்ளட்டும்.

2ம் வாசகம் : என் குறைபாடுகளில்தான் மனமாரப் பெருமைப்படுவேன். அப்போது தான் கிறிஸ்துவின் வல்லமை என்னுள் குடிகொள்ளும்.

நற்செய்தி வாசகம் : சொந்த ஊரில் தவிர மற்றெங்கும் இறைவாக்கின ருக்கு மதிப்பு உண்டு

"கலக வீட்டாராகிய அவர்கள் செவிசாய்த்தாலும் செவிசாய்க்கா விட்டாலும்..." - ஏன் இஸ்ராயேல் மக்களை ஆண்டவர் "கலகக்காரர்" என்றார்? ஜெருசலேம் அழிக்கப்பட்டு விட்டது. யூதர்கள் இனி இல்லை என்ற விதமாக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டுள் ளார்கள். அவர்களுக்கு இருந்த அமைப்புக்கள் எல்லாம் அழிக்கப் பட்டுள்ளன. அவர்கள் சமூக – பொருளாதார – அரசியல் – சமய – கலாச்சார ரீதியாக பெரும் அழிவை அனுபவித்த மக்களாக இருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருங்கச் சொன்னால்: இன்று எமது மக்கள் அனைத்தையும் இழந்து அகதி முகாம்களில் எப்படி இருக்கிறார்களோ அதேபோன்றுதான் அம்மக்களும் இருந்தனர். உதாரணமாக யோனுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றால் ஆசிரியருக்குப் பாடம் நன்றாகத் தெரிந்திருப்பதுடன் யோனையும் நன்கு தெரிந்திருக்க வேண்டும். அகதிமுகாம்களில் வாடும் மக்களுக்கு ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் அவர்கள் பட்ட அனுபவங்க ளுடாகச் சென்று அவர்களது அனுபவத்தின் அடிப்படையில் சொன்னாலொழிய அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

"நான் இறுமாப்பு அடையாதவாறு பெருங்குறையொன்று என் உடலில் தைத்த முள்போல் உள்ளது". இன்று யாழ்.திருச்சபை பல்வேறு விதத்தில் பெலவீனப்படுத்தப்பட்டள்ளது. கரையோரப் பகுதிகளில் பெருமபான்மையான பங்குகள் மூடப்பட்டு 3 லட்சம் மக்கள் பங்கு இல்லை. கோவில் இல்லையென்று அனைத்தையும் இழந்து முகாம்களிலே முடங்கிக்கிடக்கின்றார்கள். உடலிலும் உள்ளத்திலும் காயப்பட்டுக்கிடக்கும் இந்த மக்களுக்கு அர்த்தமுள்ள இறைவார்த்தையைக் கொடுத்தால்தான் கவரப்படுவார்கள். எனவே, இறைவார்த்தைப் பணி செய்யும்போது மக்களின் அன்றாட நிகழ்வுகளில், துன்பியல் நிகழ்வுகளில் பங்கு கொண்டாலன்றி ஆண்டவரின் செய்தியை அர்த்தமுள்ள விதத்தில் கொடுக்க முடியாது.

இயேசு தன் சொந்த ஊரான நசரேத்துக்கு வருகின்றார். எந்த யூதருக்கும். பழைய ஏற்பாட்டின் ஐந்து ஆகமங்கள் நன்றாகத் தெரிந்திருந்தது. அத்தோடு ஜெருசலேம் தேவாலயத்தில் மாத்திரமல்ல, நசரேத்து தொழுகைக் கூடத்திலும் ஏட்டுச் சுருள்கள் இருந்தன. இயேசு 30 வருடங்களாகப் பெற்றோருக்கு அமைந்து நடந்தார் என்று கூறும்போது, "அவர் தமது வயதிற்கேற்ப அறிவிலும் ஞானத்திலும் வளர்ந்து வந்தார்" என்று லூக்காஸ் நற்செய்தி கூறுகின்றது. 30 வயதுவரை பெற்றோருடன் இருந்தவர் என்ன செய்தார்? அடிக்கடி நசரேத்து செபக்கூடத்துக்குச் சென்று ஏட்டுச்சுருளை வாசித்துவந்தார். வாசித்து ராபிக்களோடு உரையாடிவந்தார். எனவே, இந்த 30 வருடங்களிலும் "வார்த்தை"க்குள்ளே ஆழமாக இறங்கினார். இறைத் தந்தையுடனான ஆழமான உறவு, இறைவார்த்தையின் ஆழமான அறிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றோடு ஏழைகளின் வாழ்வு பற்றிய ஆழமான அனுபவங்களையும், ஏழைகள், நோயாளிகள், துன்புற்றோர் அனைவரின் உணர்வுகளையும் இதயக்குமுறல்களையும் தனதாக்கி வாழ்ந்தவர். இப்படிப்பட்டவருடைய விளங்கங்கள், துன்புற்றோர், சுமைகளால் வருந்தியோர் அனைவரையும் கவர்ந்தது.

"இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன?" "முற்றத்து முல்லைக்கு மணமில்லை" என்பார்கள். ஆனால் இங்கே, "முற்றத்து முல்லைக்கு எப்படி இவ்வளவு மணம் வந்தது?" இறைத்தந்தையுடனான ஆழமான உறவு, இறைவார்த்தை பற்றிய ஆழமான அறிவும். தெளிவும், ஏழைகளுடனான ஆழமான அனுபவம் என்பவற்றினூடாகவே வந்தது. நாமும் ஏழைகளின் துன்பத்தில் கலந்து கொள்ளவில்லையென்றால் நாம் சொல்லும் இறைவார்த்தைக்கு வலு, சக்தி, தகுதி, அதிகாரம் இருக்காது. இயேசு விளக்கங்களைக் கொடுத்தது மாத்திரமல்ல. "இந்த இறைவார்த்தை இன்று என்னிலே நிறைவேறிற்று' என்றார். நசரேத்தூரில் இயேசுவின் இறை அறிவிப்பு, இயேசுவிலே இறையரசு ஆரம்பமாகி விட்டது என்ற அறிவிப்பாகும். யார் யார் இயேசுவிடத்தில் சரணடைந்து தம்மைக் கையளிக்கின்றார்களோ அவர்கள் இறையரசுக்குள் செல்வார்கள்.

"சூரியனுக்குள் புள்ளிகள் உண்டு
நிலாவுக்கும் கறைகள் உண்டு
கடலுக்கும் சுருக்கம் உண்டு
பூமிக்குள் வழுக்கள் உண்டு
நம்பிக்கையிலும் சந்தேகம் உண்டு
காதலர்களிடமும் சச்சரவு உண்டு
எல்லா வகையிலும் பரிபூரணமானது
எதுவும் இங்கு இல்லை.....!"

-W.H.டேவிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம்
# 15ம் வாரம்

**ஆமோ 7:12-15; எபே 1:3-14; மாற் 6:7-13**

கருப்பொருள் : இறையரசை அறிவிக்க நாம் அனைவரும் அனுப்பப்படுகின்றோம்.

1ம் வாசகம் : நம் மக்களிடம் போய் இறைவாக்குக்கூறு

2ம் வாசகம் : உலகம் உருவாகுமுன்னரே, நம்மைத் தேர்ந்து கொண்டார்.

நற்செய்தி வாசகம் : அவர்களை அனுப்பத் தொடங்கினார்.

இயேசு, வழமையான, பாரம்பரியமான முறையில் மக்களுக்குப் போதிக்காமல் ஒரு புதிய முறையைக் கையாளுகின்றார். அந்தக் காலத்திலே செபக்கூடங்கள் பணக்காரர் வாழ்ந்த இடங்களில்தான் இருந்தன. இயேசுவோ தனது சீடர்களை செபக்கூடங்கள் எதுவுமில்லாத கிராமப்புறங்களுக்கு அனுப்புகின்றார். அவர் கடற்கரை, தோட்டம், புல்வெளி, மலை, கிராம வீடுகள், சேமக்காலை போன்ற இயற்கைச் சூழலில் போதிக்கின்றார்.

இந்தப் பின்னணியில்தான் இன்றைய நற்செய்தியை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இயேசு தன் சீடர்களை இருவர் இருவராக தமக்குமுன் அனுப்புகிறார். இந்தச் சீடர்கள் கிராமங்களுக்குச் சென்றபோது அங்குள்ள மக்களுக்கு இயேசுவும் அப்போஸ்தலர்களும் வருவார்கள் என்று சொல்லி ஆயத்தம் செய்திருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு போதிக்கத் தொடங்கியபோது புதிய முறையைக் கையாளுகின்றார். அவர் செபக்கூடங்களையோ அல்லது செபக்கூட அமைப்புக்களையோ பயன்படுத்தவில்லை. செபக்கூடத்திலிருந்த ஏட்டுச் சுருள்களையோ, அல்லது வாசக மேடையையோ பயன்படுத்தவில்லை. அதற்கு மாறாக, அவர் சாதாரணமாகப் போதிக்கின்றார். தன்னுடைய போதனையிலே சாதாரண மக்கள் எளிதாக விளங்கக்கூடிய கதைகள், உதாரணங்கள், உவமைகள் மூலம் போதிக்கின்றார். இயேசு சொன்ன ஒவ்வொரு உவமையும் உணர்வுகளைத் தூண்டும். உதாரணம் : ஊதாரி மகனின் உவமையிலே அடிப்படைக் காரணம் தாயில்லாமை என்பது வலியுறுத்தப்படுகின்றது. அது மட்டுமல்ல இயேசு தன்னை உதாரணமாகக் காட்டினார். "என்னிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்" (மத்.11.39) "நானே உலகின் ஒளி" (யோவான் 8:12) என்கிறார்.

கேட்போரின் அனுபவங்களிலிருந்து போதித்தார். "வயல்வெளி மலர்களைப் பாருங்கள்..." "வானத்துப் பறவைகள்" போன்ற அவரின் வார்த்தைகள் இயற்கையை மனக்கண்முன் கொண்டு வருகின்றன.

கேள்விகேட்டுப் பதில் சொல்லிப் போதித்தார். "நீங்கள் என்னை யாரென்று கூறுகிறீர்கள்?" (மத். 16:15) "நீர் குணம்பெற விரும்புகிறீரா?" (யோவான் 5:6). அதிகாரத்துடன் போதித்தார். உதாரணம்: தீய ஆவியைப் பார்த்து "வாயை மூடு. இவரை விட்டுப்போ" "உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று" என்றார்.

இவ்வாறான அதிகாரம் இறைத்தந்தையோடு அவர் கொண்டிந்த உயரிய உறவினாலும், ஏழைகள் துன்பப்படுவோரின் கண்ணீர் கண்டு, கலங்குகின்ற கருணை உள்ளத்தினாலும் உண்டானது.

அவர் இறையரசைப் போதித்தார். அதாவது ஒரு வாழ்க்கை முறையை, அதுவும் சமூக மாற்றத்துக்கான ஒரு வாழ்க்கை முறையைப் போதித்தார். "நானே வழியும், உண்மையும், உயிரும்" (யோவான் 14:6).

இறையரசு என்பது இறைவனின் இலவசமான கொடை என்று போதித்தார். அது இறையரசுக்குள் நுழைய ஆயத்தமாயுள்ள அனைவருக்கும் திறக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால்தான், இயேசுவிடம் ஆயக்காரர், பாவிகள், வரிதண்டுவோர், கனானயப் பெண், நூற்றுவத் தலைவன் என்போர் வந்தனர். இவர்கள் சாதாரண செபக்கூடத்துள் அனுமதிக்கப்பட மாட்டார்கள், இயேசுவின் இவ்வாறான அணுகுமுறையே பெரும் மக்கள் கூட்டம் அவரால் கவரப்படவும் மனம் மாறவும் காரணமாயிற்று.

இவ்வாறே நமது அணுகுமுறையும் மாற்றப்படவேண்டும். நாம் தனித்தும் ஒருமித்தும் இறைவனின் ஆவிக்கு எம் உள்ளங்களைத் திறந்து, இயேசுவின் செய்தியைக் கொடுக்கவேண்டும். ஆலயங்கள் மீது குண்டுவீச்சுக்கள் நடத்தப்பட்டன. இதன்மூலம் இறைவன் பல செய்திகளைக் கொடுக்கின்றார். அவற்றுள் முக்கியமானது ஒன்று என்னவென்றால், இனிமேல் அமைப்பு முறையான ஆலயங்களிலும், அவற்றில் இடம்பெறும் வெளிச்சடங்குகளிலும் விழாக்களிலும் கவனம் செலுத்துவதை விட்டு இல்லத் திருச்சபைகளை நாம் உருவாக்கி உண்மையான அன்புச் சமூகமாக மாற வேண்டும். இதற்கு எம் உள்ளங்களே முதலில் திறக்கப்பட வேண்டும்.

> தகுதியில்லை என்று நீ ஒதுங்கத் தேவையில்லை;
> தாழ்வு மனப்பான்மையில் நீ வெதும்ப வேண்டியதில்லை!
> உதவாக்கரை என்று மனிதரால் ஒதுக்கப்பட்டவர்கள்
> ஒப்புவமை இல்லா நிலைக்கு உயர்ந்ததுண்டு!
> பயனற்றவர் என்று புறக்கணிக்கப்பட்டவர்
> பார் புகழும் பெருமை பெற்றதுண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுகாலம் 16ம் வாரம்

**எரே 23:1-6; எபே 2:13-18; மாற் 6:30-34**

கருப்பொருள் : தம் பிள்ளைகளாகிய எம்மை இறைவன் பரிவன் போடு காத்து வருகின்றார்.

1ம் வாசகம் : நமது மந்தையில் மீதியாயிருக்கும் ஆடுகளை நாம் ஒன்று சேர்த்து, அவற்றைக் கண்காணிக்கப் புதிய ஆயர்களை ஏற்படுத்துவோம்.

2ம் வாசகம் : இரண்டையும் ஒன்றாய் இணைத்த கிறிஸ்துவே நம் சமாதானம்.

நற்செய்தி வாசகம் : ஆயனில்லா ஆடுகள் போலிருந்தார்கள்

இன்றைய முதல் வாசகத்தின் முதல் பகுதி, இஸ்ராயேல் மக்கள் பபிலோனுக்கு நாடுகடத்தப்பட்ட நிலையில், அந்த மக்களைத் தகுந்த விதமாக பராமரிக்காத அரசர்கள், குருக்கள், பணியாளர்களை நோக்கி ஆண்டவர் எரேமியாஸ் இறைவாக்கினர் மூலமாகச் சொன்ன வார்த்தைகள். "என் மேய்ச்சலுக்குட்பட்ட ஆடுகளை அடித்துச் சிதறடிக்கும் மேய்ப்பர்களுக்கு ஐயோ கேடு". இந்த மேய்ப்பர்களின் மிகப்பெரிய குற்றம் மக்களின் தேவைகளை, நிலைமைகளை உணராமை, "பரிவு" "இரக்கம்" இல்லாது வாழ்ந்தமை, இந்த மேய்ப்பர்களுக்கு வரப்போகும் தண்டனை என்னவென்றால், அவர்கள் கையிலிருந்து மக்கள் பறித்து எடுக்கப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் வாசகத்தின் இரண்டாவது பகுதி குருக்கள், துறவிகள், பொதுநிலையினரிலிருந்து ஒறுத்தல், தவம் நிறைந்த தலைமைத்துவத்தைக்கொண்ட புதிய ஆயர்களை ஆண்டவர் உருவாக்குவார் என்று கூறுகிறது. இது ஒரு புதிய அழைப்பு. பொது நிலையினரிடமிருந்து ஆண்டவர் புதிய தலைவர்களை, புதிய ஆயர்களை உருவாக்குவார். அதற்கேற்ற சூழலை நாம் உருவாக்க வேண்டும்.

நற்செய்தி வாசகத்தில் - பணிக்காக அனுப்பப்பட்ட சீடர்கள் திரும்பி வந்து அனைத்தையும் கூறுகின்றனர். இயேசுவுக்கு இது திருப்தியளிக்கவில்லை. எனவே, இயேசு அவர்களிடம் உங்கள் பணிகளை நிறுத்தி மக்களிடமிருந்து ஒதுங்கி உங்கள் பணியை மீளாய்வு செய்யுங்கள். "சற்று ஓய்வு எடுங்கள்" என்ற வார்த்தை உண்டு, குடித்து, ஓய்வெடுங்கள் என்பதல்ல, பரிசுத்த ஆவியில் தங்கியிருந்து உங்கள் பணியை மீளாய்வு செய்யுங்கள் என்று பொருள்படும். இதுவரை நாங்கள் செய்த அப்போஸ்தலிக்க பணிகள் எல்லாம் இரண்டு காரணங்களினால் அர்த்தமற்றதாக்கப்படுகின்றன; அழிக்கப்படுகின்றன.

1) **போரும் மக்களின் இடப்பெயர்வும்** : இதனால் நாம் இதுவரை பழக்கப்பட்ட பங்கு, ஆலயம், நவநாள், திருவிழாக்கள் அனைத்தும் மாற்றப்பட்டுவிட்டன.

2) **நுகர்வுக் கலாசாரம்:-** இன்று கொழும்பிலிருந்து வாகன அணிகளில் வந்து சேரும் பொருட்களோடு நாம் நினைக்க முடியாத அளவுக்கு போதைப் பொருட்கள், நீலப்படங்கள், எமது கலாசாரத்தையே அழித்துவிடும் பலவித நவீனப்பொருட்கள் வந்து சேருகின்றன.

இத்தகைய சூழலில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பரிசுத்த ஆவியில் தங்கியிருந்து எங்கள் வாழ்வும் பணியும்பற்றி ஆழமாக சிந்திக்கவேண்டும். ஆராயவேண்டும். தனித்தும், குடும்பமாகவும், குழுமமாகவும் எமது கிறிஸ்தவத்தை பொறுப்புடன் வாழ ஆவன செய்ய வேண்டும்.

இன்று இறைமக்களில் பலர் ஆன்மீகம் அல்லது கடவுள் பற்றி உண்மையான தாகத்தோடு தேடிக்கொண்டிருக்கின்றனர். இவற்றிற்கு நாம் ஆவன செய்து அவர்கள் வாழ்வைக் கட்டியெழுப்ப வேண்டும். இன்றைய நற்செய்தியின் முக்கிய வசனம் "அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயனில்லா ஆடுகள் போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டார்." "ஆயனில்லா ஆடுகள்" என்பது, மந்தை சிறு சிறு குற்றங்களோடு, சிறு சிறு பெலவீனங்களோடு வாழ்வதல்ல.

21ம் நூற்றாண்டின் மக்கள் பெரும் ஆபத்தை, அழிவை எதிர்நோக்கி இருக்கிறார்கள். நாம் ஏற்கனவே சிந்தித்த காரணங்களால், அதாவது, முக்கியமாக நுகர்வுக் கலாசாரத்தினால் போதைப் பொருட்கள், நீலப்படங்கள் போன்றவற்றால் எமது ஆன்மீகம் பெரும் ஆபத்தை, அழிவை எதிர்நோக்கியுள்ளது. இப்படிப்பட்ட நேரத்தில் பொறுப்புள்ள ஒவ்வொருவருக்கும் இந்தப் பரிவு, இரக்கம் என்பவை மிகவும் அவசியமாகின்றது.

1) இன்று இடம் பெயர்ந்த மக்களோடு அவர்கள் நிலைக்கு இறங்கினால்தான் உண்மையான பரிவு நமக்கு ஏற்படும். இந்தப் பரிவு ஏற்பட்டால்தான் அவர்களுக்கு அர்த்தமுள்ள விதமாக நாம் எதையும் செய்யமுடியும்.

2) இத்தகைய பரிவு ஏற்படுவதற்கு நாம் நுகர்வுக் கலா சாரத்திலிருந்து விடுபட்டு தனித்தும் குடும்பங்களாகவும் தவம், சுய ஒறுத்தல் முதலியவற்றில் இறங்க வேண்டும்.

இயேசு நல்லாயனாகத் தன்னைக் காட்டுவதற்கு, ஏழ்மையும் தவமும் நிறைந்த வாழ்க்கையைக் கடைப்பிடித்தார். இத்தகைய வாழ்விலிருந்துதான் ஏழைகள், துன்புறும் மக்கள் மீது "பரிவு" "இரக்கம்" ஏற்பட்டது. இன்றும் ஒரு பக்கத்தில் தவமும், ஏழ்மையான வாழ்வும் – மறுபக்கத்தில் இறைவனோடு ஒன்றித்த வாழ்வும் வாழ்வதால் இறைவன் காலத்துக்குக் காலம் சொல்லும் செய்தி உணரப்பட்டு மக்கள் மீது உண்மையான பரிவும், இரக்கமும் ஏற்படும்.

இறைவாக்கினர் ஆமோஸ் கூறுவது போல இன்று நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. வேறு எதற்குமல்ல – "ஆண்டவருடைய வார்த்தைக்கு" (ஆமோஸ் 8:11), ஆன்மீக வாழ்வுக்கு. இந்த நிலையை உணர்ந்து இங்கிருக்கும் நாம், முக்கியமாகப் பொறுப்பிலுள்ளவர்கள், மக்களின் ஆன்மீக நிலைமட்டில் "பரிவு" "இரக்கம்" உள்ளவர்களாய் வாழுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 17ம் வாரம்

**2அரசர் 4:42-44; எபேசி 4:1-6; யோவா 6:1-15**

கருப்பொருள் : இறைவன் தாராள உள்ளம் கொண்டு நம் தேவைகளிலே துணை புரிகின்றார்.

1ம் வாசகம் : இவர்கள் உண்ட பின்னும் மீதியாயிருக்கும்.

2ம் வாசகம் : ஒரே உடல், ஒரே ஆண்டவர், ஒரே விசுவாசம், ஒரே திருமுழுக்கு

நற்செய்தி வாசகம் : பந்தியமர்ந்தவர்களுக்கு வேண்டிய மட்டும் பகிர்ந்தளித்தார்.

இன்றைய இறைவார்த்தையின் பின்னணி பாஸ்கா விழா. இறைவன் மக்களைப் புதிய விடுதலைக்கும் நிறைவுக்கும் நடத்திச் செல்கிறார். இறைவன் மக்களை அவர்களின் முயற்சியில்லாமல் போசிப்பதில்லை. இறைவன் தரும் விடுதலையை அனுபவிக்க வேண்டுமென்றால் உலகப் பற்றுக்களிலிருந்து விடுபடவேண்டும். மக்கள் உலகப் பற்றுக்களிலிருந்து விடுபட மனமில்லாமலிருக்கிறார்கள். அப்படி விட்டாலும் விட்டுவிட்டோமே என்று வருந்துகிறார்கள். உலகப் பற்றுக்களிலிருந்து விடுபடுவதற்கான ஒரு தெளிவான தீர்மானத்தை எடுக்காவிடில் இறைவன் தரும் நிறைவை அனுபவிக்க முடியாது. 1ம் 3ம் வாசகங்களின் இரகசியம் இதுதான்.

1ம் வாசகத்தில் எலியாவின் காணிக்கை பலுகிப் பெருகுகிறது. உலகப்பற்றுக்களை விட்டவர்கள் இப்புதுமையான நிறைவை அனுபவிப்பார்கள். புதிய பாஸ்காவாகிய இயேசுவுக்கு முன்னோடிகளாக மோசேயும், எலியாவும் இறைவாக்கினர்களும் இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் வெறுமையையும் நிறைவையும் சந்தித்தார்கள். இயேசுவைப் பின்செல்பவர்கள் இந்த வெறுமையை அனுபவிக்கும் போது இயேசு செய்யும் 'புதுமை' என்னும் நிறைவை அனுபவிப்பார்கள். உலகத்தில் எல்லாம் நிறைவாக இருக்கும்போதுங்கூட இயேசுவின் குரலுக்குச் செவி கொடுக்கும் மக்கள் விழிப்பின்றி இருப்பது ஆச்சரியம் என்று இயேசுவே கூறியிருக்கிறார்.

1வது மாதிரி என்னவென்றால்

இன்று யாழ்ப்பாணத்தில் பணக்காரர் யாரென்றால் வெளிநாட்டுப் பணத்தில் வாழ்பவர்களே. இவர்களிடத்தில்தான் எல்லா வல்லமையும் இருக்கிறது. உண்மையான ஏழைகள் ஊமைகளாக இருக்கிறார்கள். அநேகமாக இப்படியான ஏழைகள் தான் இறைவனுடைய அழைப்புக்கு செவிமடுக்க விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

2வது மாதிரி

சீடர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. காரணம் என்னவென்றால் நேரமில்லை, இது சரியான இடமில்லை, போதிய பணமில்லை என்பன. வேறு சிலரின் காரணங்கள் இது பாலைவனம், கடைகள் எதுவுமில்லை, எதுவும் வாங்க முடியாது, ஒரு சிறுவனிடம் மட்டும் தான் ஐந்து அப்பமும், இரண்டு மீனும் உள்ளன. இப்படியான சூழலில் எதுவும் செய்ய முடியாது.

3வது மாதிரி

இவ்வாறான சூழலிலும் நல்ல விடயம் என்னவென்றால் பலர் அனைத்தையும் இயேசுவிடம் கொண்டு வருகிறார்கள். இயேசு மக்களை அமரச் சொல்லுங்கள்; உங்களிடம் உள்ளதைக் கொண்டு வாருங்கள்; நன்றியோடு பகிருங்கள்; எதையும் வீணாக்க வேண்டாம் என்று கூறுகிறார். அப்போது புதுமை நடக்கும். அநேகமாக புதுமை நடப்பதற்கு அடிப்படையான காரியங்கள் நடக்க நாம் விடுவதில்லை. இதனால்தான் புதுமை நடப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 18ம் வாரம்

**வி.ப 16:2-4, 12 - 15; எபேசி 4:17,20-24; யோவா 6:24-35**

கருப்பொருள் : நித்திய வாழ்வு தரும் உணவாக இயேசு தம்மை எமக்கு அருளுகிறார்.

1ம் வாசகம் : நாம் உங்களுக்கு வானத்தினின்று அப்பம் பொழிவோம்.

2ம் வாசகம் : கடவுள் சாயலாகப் படைக்கப்பட்ட புதிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள்.

நற்செய்தி வாசகம் : என்னிடம் வருகிறவனுக்குப் பசியே இராது; என்னிடம் விசுவாசம் கொள்பவனுக்கு என்றுமே தாகம் இராது.

இன்றைய முதல் வாசகம் இரண்டு விதமான வாழ்க்கை முறைகள் பற்றிக் கூறுகின்றது. அதாவது எகிப்திய ஆட்சியின் கீழ் இஸ்ராயேல் மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை, யாவேயின் கீழ் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை. எகிப்திய ஆட்சியின் கீழ் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை என்னவென்றால், எகிப்தில் இஸ்ராயேல் மக்கள்தான் அங்குள்ள கால்நடை, உணவு உற்பத்திக்குப் பொறுப்பாயிருந்தார்கள். அவர்கள் நிறைய. உணவு, பானம் என்பவற்றைக் கண்டார்கள். ஆனால் எவ்வளவு தான் உற்பத்தி செய்தாலும், கண்டாலும் அவற்றைப் பெற்றுக் கொள்ள எசமான்களின் தயவிலேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. எகிப்திய அடிமைத் தனத்தின்போது இஸ்ராயேல் மக்கள் மத்தியில் தகவல் கொடுப்போர், காட்டிக்கொடுப்போர் என்று பலர் இருந்தனர். அவர்களுக்கு எகிப்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி கவர்ச்சியாகத்தான் இருந்தது. ஏனென்றால், அவர்கள் பிழைத்துக் கொண்டிருந்தார்கள். பொறுக்குகிற சமுதாயம் இருக்கும் வரை எறிகிற சமுதாயம் இருந்து கொண்டே இருக்கும். இதற்கு மாறாக, யாவேயின் கீழ் அவர்கள் வாழ்ந்த முறை வேறாக இருந்தது. பாலைவனத்தில் அவர்கள் சுதந்திரமாக வாழ்ந்தார்கள். அவர்கள் வாழ்ந்த இடம் பாலை வனம், மனித வல்லமையால் மட்டும் எந்த உற்பத்தியையும் செய்ய முடியாது. ஒவ்வொன்றுக்கும் கடவுளையே நம்பியிருக்கவேண்டும்.

மன்னாவைப் பெற்றுக்கொண்டதன் மூலம், நாளாந்த வாழ்விலே ஆண்டவரிலே தங்கியிருந்து அவருடைய உணவை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்று கற்றுக்கொண்டார்கள்.

மன்னாவைப் பெற்றவுடன் எகிப்தில் பெற்ற உணவோடு அதை ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். எகிப்திலே தகவல் கொடுத்தோர், காட்டிக் கொடுத்தோர் இங்கேயும் மோயீசனுக்கெதிராக மக்களைத் தூண்டி விடுகிறார்கள். இதனால் பெருன்பான்மையான மக்கள் யாவேக்கும் மோயீசனுக்குமெதிராக முறையிடுகின்றார்கள். அடிமைகளாயிருந்தாலும் எகிப்தில் வயிராற உண்டோமே என்கிறார்கள். ஆனால், ஆண்டவரின் மக்களோ ஆண்டவர் தரும் உணவை ஏற்று நன்றியோடு வாழுகின்றார்கள்.

இன்றைய நற்செய்தி தந்தை மக்களுக்கு உணவளிக்கும் முறைக்கும். கடவுளுக்கெதிரான சக்திகள் உணவளிக்கும் முறைக்கு முள்ள வித்தியாசத்தைக் காட்டுகிறது. உடல் இன்பம், சக்தியைத் தேடி அலைபவர்களுக்கு கடவுளுக்கெதிரான சக்திகள் தாராளமாக எல்லாவற்றையும் வழங்குகின்றன. நான் முன்னொருமுறை இங்கே சொன்னது போல A9 பாதையூடாக பெருந்தொகையான போதைவஸ் துக்கள் குடாநாட்டுக்குள் வருகின்றன. மக்களின் காவலர்கள் இளைஞர்களுக்கு தேவையான நீலப்படங்களை வழங்குகின்றார்கள்.

குடாநாட்டு மக்களுடைய வாழ்வு, பண்பாடு, கலாச்சாரம் அனைத்தும் சிதைந்து போகின்றது. குடாநாட்டில் திருமணமாகாத பெண்கள் (Unwed Mothers) இல்லம் இத்தகைய பெண்களால் நிரம்பி வழிகிறது. அங்குள்ள பெண்கள் பெரும்பாலும் 11, 14, 16 வயது உடையவர்கள். தமிழ் மக்களுடைய வாழ்வு, பண்பாடு எங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறது? இவற்றிற்கான தீர்வு என்ன? இன்றைய புதிய அமைப்பு முறையிலே எமது இயலாத்தன்மையை ஏற்று நாளுக்குநாள் இறைவனுடைய திட்டத்தை நம்பி வாழ்வதே ஒரே வழியாகும். முகாம்களிலே இருக்கும் எமது உடன்பிறப்புக்கள் இவ்வாறுதான் வாழுகின்றார்கள். இவர்களைப் பராமரிக்கும் இதே இறை தந்தைதான் நம்மையும் பராமரிக்கிறார்.

எனவே, நாம் செய்யவேண்டிய தெரிவு மிகவும் தெளிவாயுள்ளது. அழியாத உணவைத்தேடுங்கள். இதைத்தேடித்தான் நாம் ஒவ்வொரு வரும் வந்துள்ளோம். எனவே, அவ்வுணவைப் பெறுவதற்கேற்ற விதமாக. வாழுவோம்.

நீங்கள் என்னில் தங்கி, எனது திட்டம், பராமரிப்பின் கீழ் வாருங்கள். இல்லையேல் நீண்ட காலத்தில் அழிவையே காண்பீர்கள். அழியும் உணவுக்காக அலைபவர்கள் என் பின்னே வரவேண்டாம் என்று இயேசு எமக்குக் கூறுகிறார். மேலும் அவர் "அழியாத உணவைத்தேடி அதற்கேற்ற விதமாக உங்கள் வாழ்வை அமையுங்கள். அப்போது வானகத்தந்தை நாளாந்தம் உங்களைப் பராமரிப்பார்" என்று கூறுகிறார்.

> கிறிஸ்துவின் திருவுடலுக்கு மரியாதை செலுத்த விரும்பினால், பசியால் கிறங்கும் கிறிஸ்துவுக்கு முதலில் புசிக்கக்கொடு. அலங்காரமுடைய ஆலயத்தைக் காட்டிலும் கிறிஸ்து வசிக்கும் நடமாடும் கோயிலாக உன் சகோதரன் திகழ்கின்றான். ஏழைக்குரிய உடமைகளை அபகரிப்பது தந்தையின் முன் தனயனைக் கொன்ற கொலைக்குற்றம் புரிவதற்குச்சமம் என்கிறார் புனித கிறிஸ்தோஸ்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 19ம் வாரம்

**1அர 19:4-8; எபேசி 4:30-5:2; யோவா 6:41-51**

**கருப்பொருள் :** விசுவாச வாழ்க்கைப் பயணத்திற்கு நற்கருணை விருந்து ஊட்டமளிக்கின்றது.

**1ம் வாசகம் :** அவ்வுணவினால் வலிமைபெற்ற அவர், நடந்து கடவுளின் மலையை அடைந்தார்.

**2ம் வாசகம் :** கிறிஸ்து அன்பு கூர்ந்ததுபோல் நீங்களும் அன்பு கொண்டு ஒழுகுங்கள்.

**நற்செய்தி வாசகம் :** நானே வானினின்று இறங்கி வந்த உயிருள்ள உணவு.

பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினருக்கான அழைப்பு இயற்கை அழைப்பாக இருந்தது. பால் தெய்வத்தின் இறைவாக்கினர்கள் உருவெடுத்து, ஆடி இறைவாக்குச் சொன்னார்கள்; மக்கள் மத்தியில் அனுப்பப்பட்டார்கள். எலியாவுக்கான அழைப்பு வேறுவிதமாக இருந்தது. அவர் ஒரு தனிச்சிறப்பான இறைவாக்கினர். அவரது பணி இயற்கைக்கு மேலானது.

அவர் வாழ்ந்த காலம் வித்தியாசமானது. மிகவும் கொடியவளும் தீயவளுமான ஜெசபிலோடும் அவளது கணவனோடும் பெரும் போரிடவேண்டியிருந்தது. இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. எனவே, எலியாவும் மிகவும் களைப்புற்று சோர்வுற்றார். இக் களைப்பை இயற்கையாக விளக்கமுடியாது. எலியாவோ இப்பொழுது நான் மிகவும் சோர்ந்துவிட்டேன்; சாகவேண்டும் என்கிறார். இதைத்தான் ஆன்மீக வாழ்வில் ஆன்மாவின் இருண்டகாலம் என்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவும் இயற்கையான சீடத்துவத்தையும் இயற்கைக்கு மேலான சீடத்துவத்தையும் பிரித்துக் காட்டுகிறார். இன்று நாம் பலரில் பார்ப்பது இயற்கையான சீடத்துவம். இதனால் களைப்பும், சோர்வும் வரும். இவற்றை இயற்கையான உளவளத்துணையால் குணப்படுத்த முடியும். ஆனால், உண்மைச் சீடத்துவத்தில் வரும் இயற்கைக்கு மேலான சோர்வு, களைப்பின் தன்மை வித்தியாசமானது.

இறைவன் மட்டும்தான் அதில் நம்மை உற்சாகப்படுத்த முடியும். இந்த உற்சாகம் நாம் நமது நீண்ட பயணத்தைத் தொடர, நித்திய வாழ்வை அடைய, கொடுக்கப்படும் உதவி. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் வாழ்வில் சாதாரண களைப்பையே அனுபவிக்கின்றனர். இயேசுவுக்குப் பிரமாணிக்கமான சீடனாயிருந்து, தீயசக்திகளுடன் போராடினால் மட்டுமே எலியாவுக்கு ஏற்பட்டதுபோன்று இயற்கைக்கு மேலான ஓர் சோர்வு ஏற்படும்.

இவர்களைத்தான் இயேசு தந்தையினால் அழைக்கப் பட்டவர்கள் என்கிறார். மற்றவர்கள் வரமாட்டார்கள். இயேசு நமக்கு ஒரு முக்கிய குறிப்பைக் காட்டுகிறார். நற்செய்தியை உன்னிப்பாகக் கவனிக்கும்போது நற்கருணையின் உண்மையான பிரசன்னமும் உணவும், உண்மையாக இறைவனுக்காக உழைப்பவர்களுக்கே தேவைப்படுகிறது. ஏனெனில், அவர்கள் தந்தையால் அழைக்கப் பட்டவர்கள்.

"என்னை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர்." இது புதுவாழ்வுக்குள் மூழ்குவதற்கான ஓர் அழைப்பு. எத்தனையோ மக்கள் இவ்வுலக வாழ்வுடனேயே திருப்தியடைகின்றனர். அவர்கள் நித்திய வாழ்வுக்கு உயிர்த்தெழமாட்டார்கள். 'உண்பவரை இறக்காமல் இருக்கச் செய்யும் உணவு, விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த இந்த உணவே'. எலியாவின் சோர்வு கிறிஸ்துவின் உண்மையான சீடருக்கே ஏற்படும். அவர்களுக்கே நற்கருணை உணவு தேவைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 20ம் வாரம்

**நீ.மொழி 9:1-6; எபேசி 5:15-20; யோவா 6:51-59**

கருப்பொருள் : நற்கருணையினால் நாம் விண்ணக விருந்தில் பங்குகொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றோம்.

1ம் வாசகம் : என் அப்பத்தை உண்டு உங்களுக்காக நான் கலந்து வைத்திருக்கும் பழச்சாற்றையும் குடியுங்கள்.

2ம் வாசகம் : ஆண்டவருடைய திருவுளம் யாது என அறிந்துணருங்கள்.

நற்செய்தி வாசகம் : என் தசை மெய்யான உணவு, என் இரத்தம் மெய்யான பானம்.

இன்றைய பத்திரிகைகளைப் படித்தால் எப்படியான செயல்கள் இன்று நிரம்பி வழிகின்றன என்பது புரியும். இவற்றின் மத்தியில் வாழும் நமக்கு விசேட ஞானம் தேவைப்படுகிறது. இந்த ஞானத்தைப் பெறவேண்டுமெனில் சில விடயங்களைச் செய்ய வேண்டும்; சிலவற்றை விலக்கவேண்டும். குடிவெறி, உடல் இச்சைகளுக்கான செயல்களை விலக்கவேண்டும்; தூய ஆவியால் ஏவப்பட்டு, செபிப்பதிலும் நன்றி கூறுவதிலும் நேரத்தைச் செலவிடவேண்டும்.

இதைத்தான் இன்றைய நற்செய்தி விளக்குகிறது. இயேசுவைப் பற்றிய ஆழமான அறிவுக்குள் வந்து, அவருடன் நெருக்கமான உறவில் வாழ்வதைத்தான் "உண்டு குடித்தல்" என்கிறோம். இப்படிப்பட்ட நெருக்கமான உறவின்றி கிறிஸ்தவ வாழ்வை விளங்கிக் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. ஏனெனில், நித்தியம் தொடர்பான முழுப்பயணமும் இங்கேதான் ஆரம்பமாகிறது. நாம் செய்யவேண்டிய தெரிவு இங்கே முடிகின்ற குறுகிய வாழ்வுக்கும் இங்கே ஆரம்பிக்கும் நித்திய வாழ்வுக்கும் இடையேதான் உள்ளது. இப்படியான தெரிவைச் செய்வதற்கு எமக்கு விசேட ஞானம் தேவைப்படும். இப்படியான ஞானத்தை இறைவன் செபம், திருவருட்சாதனங்கள் (7 தூண்கள்) வழியாகக் கொடுக்கிறார்.

ஞானம், வீடுகட்டுவதுபோல மெதுவாகக் கட்டப்பட வேண்டும். இது படிப்படியாக பலமாகக் கட்டப்பட்ட வீடாக மாறி அங்குதான் நாளாந்த பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது. ஆடம்பரவாழ்வு, பாவம், பெருமை என்பன பலியாக்கப்படும் வாழ்வே இப்படியான வாழ்வு. இப்படிப்பட்ட வாழ்வு ஓர் சாட்சிய வாழ்வாகி மற்றவர்களையும் அழைக்கிறது. இது நாம் ஞானத்துடன் வாழவும் மற்றவர்கள் இந்த ஞானத்தில் பங்குபற்றவும் செய்கிறது. நாம் இந்த ஞானத்தைவிட செயலையே பெரிதாக எதிர்பார்க்கிறோம்.

இது மக்களைக் கவரும் மற்ற அறிவுகள் மத்தியில் நமக்கு வேண்டிய உண்மை ஞானம். இன்று செயற்பாடுகள் மிகுந்த மனிதர்கள்தான் அதிகம்; ஞானமுள்ளோர் சொற்பம். அமைதி, தெளிந்த மனம், ஞானத்துடனிருந்து மக்களுக்கு ஆன்மீக ஊற்றாக இருக்க வேண்டிய மனிதர்களைவிட, 24 மணிநேரமும் வேலைசெய்து அளவுமீறிக் களைத்துச் சினக்கும் மனிதர்களே அதிகம்.

எனவே, இன்று எமது கிறிஸ்தவ வாழ்வின் மாதிரிகள் மாற வேண்டும். அலைந்து திரிந்து, மார்த்தாவைப்போல் பரபரப்பாக இருப்பதற்குப் பதிலாக, இயேசுவோடு இருக்கப் பழகி இயேசுவில் நிலைத்திருக்கும் மக்கள் தேவை. இதுதான் இயேசுவோடு உண்டு குடிப்பதன் கருத்து. ஏனென்றால், இயேசுவோடு அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்கும் மக்களாக அப்போது தான் நாம் மாற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 21ம் வாரம்

**யோசு 24:1-2, 15-18; எபேசி 5:21-32; யோவா 6:60-69**

கருப்பொருள் : வாழ்நாள் முழுவதையும் கிறிஸ்துவுக்கு அர்ப் பணிப்பதே உண்மையான விசுவாசம்.

1ம் வாசகம் : அவரே நம் கடவுள், அவரையே வழிபடுவோம்.

2ம் வாசகம் : இதில் அடங்கியுள்ள மறையுண்மை பெரிது இது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் பொருந்தும்.

நற்செய்தி வாசகம் : நாங்கள் யாரிடம் போவோம்? முடிவில்லா வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன.

இன்றைய பிரச்சினை விசுவாசம் பற்றியது. விசுவாசம் என்பது பெரும் போராட்டம். இது முதலில் சமுதாயத்தில் இடம் பெறுகிறது. யூதர் புதிய நாட்டில் குடியேறுமுன் கனானேய மதத்தோடும் தெய்வங்களோடும் போராடுகின்றனர். இப்போராட்டம் எவ்வளவு பெரிதாகியதென்றால் இஸ்ராயேல் முழுவதும் அதில் விழுந்துவிட்டதாக யோசுவா காண்கிறார். அவரது குடும்பம் மட்டும் தப்பியது. வெள்ளப்பெருக்கின் போது நோவாவின் குடும்பம் மட்டும் இறைவனுக்குப் பிரமாணிக்கமாயிருந்ததுபோல யோசுவாவின் குடும்பம் மட்டும் இறைவனுக்குப் பிரமாணிக்கமாயிருந்தது.

இயேசுவின் புதிய குடும்பம் மட்டும் பிரச்சினையான நேரத்தில் அவரோடு இருக்கின்றது. பிரச்சினை காலத்தில் நெருக்கமானவர்கள் மட்டும் எம்மோடு இருப்பர். பிரச்சினை காலத்தில் எமது விசுவாசத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்துவது அவசியம்; அதை எம் குடும்பத்தில், எமக்கு நெருங்கியவர்களோடு செய்யவேண்டும். இல்லையேல் நாம் விழுந்து விடுவோம். விசுவாசமின்றி உலக மதிப்பீடுகள் மட்டும் இருக்கும் உலகில் நாம் அழிந்துவிடுவோம். இன்றைய உலகில் நாம் வாழ நெருக்கமான உறவுகளின் விசுவாச அறிக்கை அவசியம். அன்றேல், விசுவாசம் தோற்கடிக்கப்பட்டுவிடும்.

இஸ்ராயேல் மத்தியில் இப்படியான ஒரு விசுவாசப் பிரச்சினை தோன்றி, தான் தனித்து நிற்பதைக் காணும் யோசுவா முழு இஸ்ராயேலுக்கும் சவால் விடுக்க, அவர்கள் ஆண்டவருக்குப் பணிபுரியத் தயங்குவதாகக் குற்றம் சாட்டுகிறார். பொதுவாக யாவேதான் தம் தலைவர் என்கின்றனர். ஆனால், நடைமுறையில் வேறு தெய்வங்களும் தீய பழக்கங்களும் அவர்கள் வாழ்வில் புகுந்து கடவுளின் மக்கள் என்ற நிலையை அழித்துவிடுகிறது.

இறுதி முடிவை எடுக்க யோசுவா பணிக்கிறார். ஒன்றில் யாவே அல்லது வேறு தெய்வம் என்ற இரட்டை வேடத்துக்கோ சமாளிப்புக்கோ இடமில்லை.

யாழ். திருச்சபையிலும் மேற்கூறிய நிலை ஒவ்வொரு நிறுவனத்திலும் அல்லது பங்கு கோயிலில் ஏற்படவேண்டும். இன்று எமது பங்கில் இது நடைபெற வேண்டும். இறைவனை ஏற்று அவருக்குச் சேவை செய்ய விரும்பின் அதைத் தெரியுங்கள்; அதையும் இன்றே செய்யுங்கள். ஆனால், அவ்வாறு செய்ய வேறு வழியில்லை; ஆண்டவர் ஒருவரே நமது தெரிவு. இப்படியான ஒரு உறுதிப்பாடு ஒவ்வொரு குடும்பத்திலும் எடுக்கப்படவேண்டும். இயேசு ஒருவரே என் ஆண்டவர்; வாழ்வின் மையம்.

இறைவனுக்கு பிளவுபடாத உள்ளத்தோடு தம்மை அர்ப்பணிக்க வேண்டியது குருக்கள், துறவிகள் மாத்திரமல்ல, எல்லா இறைமக்களுமே. இத்தகைய அர்ப்பணம் ஏற்படும்போதுதான் நமது கிறிஸ்தவ வாழ்வு அர்த்தமுள்ளதாயிருக்கும். நாம் கிறிஸ்துவின் வலுவுள்ள சாட்சிகளாயிருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம்
# 22ம் வாரம்

**எண்4:1-2,6-8; யாக்கோபு1:17-18,21-22,27; மாற்7:1-8,14-15,21-22**

கருப்பொருள் : கிறிஸ்தவ வாழ்வில் அன்பும் உண்மையுமே சட்டங்களை விட மேலானது.

1ம் வாசகம் : நாங்கள் உங்களுக்குச் சொல்லும் வார்த்தைகளில் ஒன்றையும் கூட்ட வேண்டாம். ஆண்டவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு ஒழுகுவீர்கள்.

2ம் வாசகம் : இறைவார்த்தையின்படி நடப்பவர்களாக இருங்கள்.

நற்செய்தி வாசகம் : கடவுளின் கட்டளையைக் கைவிட்டு, மனிதரின் பரம்பரையைக் கடைப்பிடிக்கிறீர்கள்.

1) செயலோடு திருப்தியடைதல்
2) வார்த்தைப் பகிர்வு
3) வார்த்தை கடந்த மௌனம்

ஆகிய 3 நிலைகளில் உறவு வளர்கிறது.

மௌனம்தான் உறவின் உச்சக்கட்டம். நல்ல உறவோடுதான் நாம் ஆரம்பிக்கின்றோம். இவ்வுறவிலிருந்துதான் வார்த்தை பிறக்கிறது. இவ் உறவின் பின்னணியில்தான் வார்த்தையை விளங்கிக் கொள்ள முடியும். ஆண்டவரோடு நெருங்கிய உறவுகொண்டிருந்த மோயீசன் 2 விடயங்கள் குறித்து அச்சம் கொள்கிறார்.

1) தான் பெற்ற ஆண்டவரின் வார்த்தையை சரியாகத் தெளிவு படுத்துகிறேனா அல்லது வார்த்தை திரிபுபடுத்தப்பட்டுள்ளதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) இவ்வாறு கொடுக்கப்பட்ட வார்த்தை சரியாகப் பாதுகாக்கப் படுகிறதா?

"இப்போது இஸ்ராயேலே கேளுங்கள்" - இது ஒரு சிக்கலான நேரம்; ஆண்டவர் கொடுக்கும் நாட்டுக்குச் சென்று அதை உரிமையாக்கும் நேரம். இக்காலத்தில் 'பாகாலின்' சக்திகள் பலவிதமாக மக்களின் வாழ்வுக்குள் ஊடுருவுகிறது. இதேபோன்று 'சமாதானம்' என்று கூறும் இக்காலத்திலும் அதற்கெதிராக தீய சக்திகளின் ஊடுருவல்கள் எத்தனை......

இவ்வாறு ஊடுருவுவதால் ஆண்டவரின் வார்த்தை திரிபுபடுத்திக் கூறப்படுகிறது. இவ்வாறான வேளையில் நாம் ஆண்டவர் பாதத்தில் மௌனத்திலிருந்து அவரது வார்த்தை சொல்லும் செய்தியைக் கேட்பதும், கண்டுபிடிப்பதும் அவசியம்.

ஆண்டவரின் வார்த்தை நமக்குப் பல சவால்களை விடுக்கிறது. காலத்தின் அறிகுறியை நாம் உணர்ந்து அதற்கேற்ப நம் கிறிஸ்தவ வாழ்வை வாழ அழைக்கிறது. காலத்தின் அறிகுறிகளின் முக்கியத்துவத்தையும் நாம் உய்த்தறிய வேண்டும்.

பாகாலின் சக்திகள் உலகப் போக்குகள், செய்வினை சூனியங்கள், பிறசமய ஊடுருவல்கள் போன்ற பல வடிவங்களில் நம்மத்தியில் ஊடுருவுகின்றன.

இவற்றால் வரும் ஆபத்துக்களை மோயீசன் உய்த்து ணருகின்றார். இதனால்தான் ஆண்டவரின் வார்த்தை திரிபுபடுத்தப்பட்டு விடுமோ என்ற பயம் அவரை ஆட்கொள்ளுகிறது. நடைமுறையில் நாம் ஒரு போலித்திருப்தியில் வாழுகின்றோம். இப் போலித் திருப்தி சடங்குகள், சம்பிரதாயங்களை மீண்டும் மீண்டும் செய்வதால் ஏற்படுவது. பரிசேயர் மத்தியில் ஏற்பட்டதும் அதுதான்.

இயேசுவோ "நீங்கள் கடவுளின் கட்டளைகளைக் கைவிட்டு மனித மரபினைப் பின்பற்றுகிறீர்கள். உள்ளம் தூய்மையாயிருக்க வேண்டும்" என்கிறார். உள்ளம் தூய்மையாயிருக்க போலிச்சடங்கு, சம்பிரதாயங்களைக் கைவிட்டு ஆண்டவர் வார்த்தையிலும் அவர் திருமுன் மௌனத்திலும் இருக்க வேண்டும். இவ்வாறு இருக்கும் போதுதான் வாழ்க்கைப் பிரச்சனைகளையும் அதற்கான தீர்வுகளையும் இறைவார்த்தையின் ஒளியில் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 23ம் வாரம்

**எசா 35:4-7; யாக்கோபு 2:1-5; மாற் 7:31-37**

கருப்பொருள் : குறைபாடுள்ள மனித இயல்புக்கு நிறை வளிக்க இறைவன் காத்திருக்கின்றார்.

1ம் வாசகம் : செவிடரின் காதுகள் கேட்கும் ஆற்றல் பெறும்; ஊமைகளின் நாக்கு மகிழ்ச்சியுடன் பாடும்

2ம் வாசகம் : அரசில் உரிமையை தரக் கடவுள் ஏழைகளைத் தேர்ந்துகொள்ளவில்லையா?

நற்செய்தி வாசகம் : செவிடர் கேட்கவும், ஊமைகள் பேசவும் செய்கிறார்.

இன்றைய முதல் வாசகம் பலவித "கட்டுக்களில்" சிக்குண்டு அஞ்சி வாழ்வோர் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஏனென்றால், இஸ்ராயேல், மக்கள் அந்நிய மதத்தினரால் சூழப்பட்டு அவர்களது மத நம்பிக்கையால் பாதிக்கப்பட்டு இருந்தனர்.

இன்றும் நம் மத்தியில் இந்து சகோதரர்களிடையே மறுபிறவி பற்றிய பயம். பெரும்பான்மையான மக்கள் மத்தியில் செய்வினை, சூனியம், போன்ற கட்டுக்களும் நாம் மீள முடியாது போராடும் பாவப் பழக்கங்களும், நமக்குள் இருக்கும் எரிச்சல், சோகம் போன்ற (உரோமர் 7:21-25) உணர்வுப் போராட்டங்கள் எனும் கட்டுக்களும் நிறைந்துள்ளன.

இன்றைய இரண்டாவது வாசகத்தில் புனித யாகப்பர் "வார்த்தை ஏழையானார்" அதாவது, தன்னை முற்றிலும் வெறுமையாக்கினார். எனவே, சீடன் குருவைப் விட மேற்பட்டவன் அல்ல. ஏழையாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவைப் பின்பற்றி அவரை பிரதிபலித்து வாழும் திருச்சபையும் ஏழைகளின் திருச்சபையாக வாழவேண்டியது அவசியம்.

ஆனால், இயேசுவின் பணியாளர்களோ பணக்காரர்களையே நாடுகின்றவர்களாகவும், மதிக்கின்றவர்களாகவும் ஏழைகள் மீதோ கரிசனையற்றவர்களாகவும் மாறிக்கொண்டே போகின்றனர். போரின் பிற்பட்ட இக் காலத்தில் வசதியுள்ளோர், வெளிநாடு செல்ல, ஏழைகளே நம் மத்தியில் விடப்பட்டவர்களாக இருக்கின்றனர். ஏழைகள்தான் திருச்சபையின் சொத்து. உண்மையில் ஏழைகளின் கூட்டமாகவே திருச்சபை ஆரம்பிக்கப்பட்டது. எனவே தான் இயேசு "ஏழைகள் என்றும் உங்களோடு இருப்பர்" (மத். 26:11; மாற்கு 4:7; யோவா 12:8) என்று கூறுகிறார் அப்படியிருந்தும் இயேசுவின் பணியாளர் ஏழைகளின் குரலைக் கேட்க முடியாத செவிடராகவும், அவர்களுக்காக குரல் கொடுக்க முடியாத திக்குவாயருமாக இருக்கின்றனர்.

எனவேதான், ஏழைகளின் பெருமூச்சுக்களை உணர முடியாத, ஆன்மீக தாகமில்லாத அந்தச் சீடன்மீது இயேசு பரிதாபப்படுகின்றார். அவனைக் கூட்டத்திற்கு வெளியே அழைத்துச் செல்கின்றார். அவனது கட்டுக்களை அவிழ்த்து விடுகின்றார். அவனது பாதிப்பு ஆழமானது. எனவே, அவனை ஆழமாகக் குணமாக்க விரும்புகின்றார்.

விரலால் தொடுகிறார் :

தொடுவது மிகவும் அவசியமானது. அவனது உடலை தொடுவதற்கு முன் அவனது உள்ளத்தை தொடுகின்றார்.

உமிழ் நீரால் தொடுகின்றார் :

இயேசு இயற்கையான குணமாக்கும் முறையையே பயன்படுத்து கின்றார்.

பெருமூச்சு விடுகிறார் :

ஏழைகளின் பெருமூச்சுக்களை உணர முடியாத, ஆன்மீக தாகமில்லாத, சீடனின் நிலை கண்டு வானத்தை அண்ணார்ந்து பார்த்து பெருமூச்சு விடுகின்றார்.

"திறக்கப்படு" என்று உரத்துச் சொல்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே விபரிக்கப்பட்ட நிகழ்வுகள் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் திருமுழுக்கிலே நடைபெறுகின்றது. ஆனால், காலப்போக்கில் மீண்டும் கட்டுக்கள் ஏற்பட்டு விடுகின்றன. மிகவும் பரிதாபத்திற்குரிய விதமாக அவிழ்க்கப்படாத கட்டுக்கள் பல நம்முள் இருக்கின்றன. இவற்றை அவிழ்க்கும்படி இயேசுவை இரந்து மன்றாடுவோம்.

(விரும்பினால், "தொடும் என் கண்களை" என்ற பாடலை, என் மனதினை, ஆன்மாவை என்ற அடிகளைப் பயன்படுத்தலாம்)

கல்லும் கல்லும் உரசினால் மணல்!
காற்றும் மேகமும் உரசினால் மழை!
மரமும் மரமும் உரசினால் தீ!
மனிதனும் இறைவனும்
மனிதனும் இயற்கையும்
மனிதனும் மனிதனும்
அன்பால் உரசினால்
ஆன்மீகம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 24ம் வாரம்

**எசா 50:5-9; யாக் 2:14-18; மாற் 8:27-35**

**கருப்பொருள் :** கிறிஸ்துவின் பொருட்டு நாம் எதிர்கொள்ளும் துன்பங்கள், வேதனைகளுக்கு மேலதிக கைம்மாறு கிடைப்பது திண்ணம்.

**1ம் வாசகம் :** துன்புறுத்துகிறவர்களுக்கு என் உடலைக் கையளித்தேன்.

**2ம் வாசகம் :** செயலோடு கூடியதாய் இராத விசுவாசம் உயிரற்றதாகும்.

**நற்செய்தி வாசகம் :** நீர் மெசியா.. மனுமகன் பாடுகள் பட வேண்டும்.

இயேசுவின் மெசியாத்தன்மை என்பது 2000 ஆண்டுகளாய் யூதர்கள் எண்ணியதற்கும் அனுபவித்ததற்கும் எதிர்மாறானது. பாரம்பரியமாக வந்த மெசியா பற்றிய எண்ணமானது அவர் வல்லமை நிறைந்தவர், எதிரிகளை அடக்குவார் என்பதாகும். இஸ்ராயேலைச் சூழ வாழ்ந்தவரும் இந்த உணர்வையே கொண்டிருந்தனர்.

நற்செய்தியில் இயேசு உரோமானியரின் வல்லமை நிறைந்த ஒர் இடத்துக்கு அழைத்துச் செல்லுகிறார். இறையரசின் மெசியா வித்தியாசமானவராக, வல்லமையற்றவராக கழுதைக்குட்டியின்மேல் வருபவராக ஏழைகளின் மெசியாவாக இருக்கிறார். இது புதுவிதமான அரசும், அரசாட்சியும். அப்போஸ்தலர்களால் இதை விளங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்கள் சிலுவை, கிறிஸ்துவின் மரணம், கல்வாரி அனுபவங்களால் சிதறுண்டு போனார்கள். இயேசுவின் உயிர்ப்புத்தான் அவர்களை எழுப்ப முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் இப்படியானதொன்றையே எதிர்நோக்குகிறோம். எசாயாதான் துன்புறும் ஊழியன் பாடல்மூலம் நமக்குப் பதிலளிக்க முடியும். வலிமையற்றவர்களாய் மாறுவதில்தான் இது தங்கியுள்ளது. "கிறிஸ்துவின் சிலுவை யூதருக்கு இடறல், புற இனத்தார்க்கு மடமை". இருவரும் வல்லமையுள்ள கடவுளுக்கே பழக்கப்பட்டவர்கள்.

மக்கள் அரசுக்கு அழைக்கப்பட்டவர்கள். ஆனால், வல்லமையிலும் நிறுவனத்திலும் தங்கியிருக்க முடியாது. எமக்கும் அதே நிலை வருகின்றது. சிலுவையில் அறையுண்டவரும் இடறலும் மடமையுமானவரை ஏற்றுக் கொள்ள வேண்டும். வல்லமை, அதிகாரத்துக்குப் பழக்கப்பட்டவர்களுக்கு இது எளிதல்ல. வல்லமை அதிகாரம் தருபவர்களிடமே சென்று பழக்கப்பட்ட நமக்கு கிறிஸ்துவின் மெசியாத்தன்மை ஓர் சவாலாக அமைந்துவிட்டது.

இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் யாருடைய வல்லமையால் நிரப்பப்பட்வர்களாக வாழுகின்றோம்? உலகத்தின் வல்லமைகளாலா? அல்லது கிறிஸ்து இயேசுவின் வல்லமையாலா? நம்மில் எத்தனைபேர் பேதுருவைப் போன்று "வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை; என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன். நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்" (தி.ப.3:6) என்று கூறக் கூடியவர்களாய் உள்ளோம்?

நெருப்பினை நெருங்க நெருங்க
உனக்கு வெம்மை கிடைக்கின்றது!
இறைவனை நெருங்க நெருங்க
உனக்குத் தூய்மை பிறக்கின்றது!
அமைதியின் பின்னணியில்
இறைவனை சந்திக்கும் இடமாக
ஆலயம் விளங்குகின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 25ம் வாரம்

**எசா 2:17-20; யாக் 3:16-4,3; மாற் 9:30-37**

**கருப்பொருள் :** பிறருக்குப் பணி செய்வதில் நாம் எதிர் கொள்ளும் வேதனைகள் எமக்கு முடிவில்லா மகிமையளிக்கும்.

1ம் வாசகம் : வெட்கத்திற்குரிய சாவுக்கு அவனை ஆளாக்குவோம்.

2ம் வாசகம் : சமாதானம் செய்வோர், சமாதானத்தில் விதைக்கும் விதையிலிருந்து இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வெனும் கனி விளைகிறது.

நற்செய்தி வாசகம் : மனுமகன் கையளிக்கப்படுவார்... ஒருவன் முதல்வனாய் இருக்க விரும்பினால் அவன் அனைவரிலும் கடையவனாய் இருக்கட்டும்.

மக்கள் திக்கற்றவர்களாக விடப்பட்டுள்ள இன்றைய காலத்தில் மெசியா அல்லது தலைமைத்துவத்தின் தேவை அனைவராலும் உணரப்படுகிறது. அதேவேளை, இக்காலத்தின் விசித்திரம் என்னவென்றால் உண்மையான மெசியாவுக்கு இடமிராது. மக்கள் அவரை ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். குழப்பமான நிலையில் மடமைத்தனம்தான் நிலவும்; இதனால், பலர் துன்பங்களை அனுபவிப்பார்கள். ஆனால், ஞானி கவலைப்பட வேண்டியதில்லை. கடவுள் அவரைக் காப்பாற்றுவார். எனவே, விண்ணிலிருந்து வரும் ஞானத்தைக் கண்டுணர்வதும் அதைக் கடைப்பிடிப்பதும் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான தலைவர்கள் குறைந்த ஞானமும் அதிக பிரச்சாரத்தையுமே விரும்புகின்றனர். இதனால்தான் அவர்கள் மேலிருந்து வரும் ஞானத்தை விரும்புவதில்லை. மக்கள் தற்காலிக இன்பத்தையே விரும்புவர்; புனித யாகப்பர் இதையே சுட்டிக் காட்டுகிறார். தற்காலிக இன்பம் பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கும். உண்மையில் ஞானமுள்ளவன் அமைதியாக, தாழ்மையாக இருப்பான். இது பலஸ்தீன திருச்சபையில் பிரதிபலிப்பதை நாம் காணலாம்.

உண்மையான ஞானம் கற்பிப்பது குழந்தைபோல் இருக்க வேண்டும், அதிகாரத்திலிருந்து விலக வேண்டும் என்பதையே என உணர்ந்து செயற்பட்ட பலஸ்தீன திருச்சபை நமக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது.

உலகிலுள்ளவர்கள் அதிகாரத்துக்காகப் பாடுபடுவதனாலேயே உலகம் துன்பத்துக்கு உள்ளாகித் தவிக்கிறது. இத்தகைய அதிகார மோகத்திலிருந்து நாம் விலகினால் மெசியாவால் வழிநடத்தப்படுவோம். அதிகார மோகம் சிறிதளவு இருந்தாலும் மெசியாவின் தன்மையை உணரமுடியாது.

இருண்ட உலகத்திலே இடம்பெறுவது குழப்பம்
இருண்ட இதயத்திலே இடம்பெறுவது கலக்கம்!
இந்தக் குழப்பத்தை அகற்ற உலகத்திற்கு ஓர் ஒளி:
அதுதான் கதிரவன்!
இதயக் கலக்கத்தை விரட்ட இதயத்திற்கு ஓர் ஒளி:
அவர்தான் கிறிஸ்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 26ம் வாரம்

**எண் 11:25-29; யாக் 5:1-6; மாற் 9:38-48**

**கருப்பொருள் :** ஆண்டவர் தன் ஆவியின் வரங்களை எல்லோர்க்கும் பகிர்ந்தளிக்கின்றார்.

1ம் **வாசகம் :** என் மட்டில் நீ எரிச்சல் படுவானேன்? மக்கள் அனைவரும் இறைவாக்கினராய் இருந்தால் நலமாயிருக்குமே!

2ம் **வாசகம் :** உங்கள் செல்வம் மக்கிப்போயிற்று.

**நற்செய்தி வாசகம் :** நமக்கு எதிராக இல்லாதவன் நம் சார்பாக இருக்கிறான். உன் கை உனக்கு இடறலாயிருந்தால் அதை வெட்டிவிடு.

திருச்சபையின் வரையறைகளுக்கு அப்பால் நின்று நற்செய்திப் பணியைப் பணிபுரிவதே கிறிஸ்துவின் வேலை. இறுதிக்கால அடையாளங்களுள் ஒன்று. இது திருச்சபையின் பணியார்களுக்கு ஒரு முக்கிய பிரச்சினை. மதியூகமுள்ளவர்கள் இப்படியான பணிகளை நிறுத்தமாட்டார்கள். ஏனென்றால், இறுதிக்காலத்தில் எத்தனையோ தீமைகள் நிலவும். சிறு சிறு நல்ல வேலைகளைச் செய்பவர்கள் ஒன்று சேர்ந்து வரவேண்டும். அப்போது நற்பணி செய்வோர் சிறிய அளவில் என்றாலும் உற்சாகம் பெற இத்தகைய பணிகள் தொடரும். இதனால்தான் இயேசுவும் "இச்சின்னஞ்சிறிய ஒருவருக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவர் கைமாறு பெறுவார்" என்கிறார். இப்பின்னணியிலேயே சிறுவர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். பெரியவர்கள் பேராசை பிடித்தவராய் மாறுகின்றனர். அவர்கள் தமக்கெனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துக்களைச் சேர்த்து இன்பம், சுகபோகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பர். ஏழைகளைப் பொருட்படுத்த மாட்டார்கள். இதனாலேயே சிறுவர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

இத்தகைய கொடிய உலகில்தான் இயேசு குழந்தைகளைத் தேர்ந்தெடுக்க, பெரியவர்களோ தம்மையும் கெடுத்து சிறுவர்களின் எதிர்காலத்தையும் கெடுத்து விடுகின்றனர். இவர்களுக்கு அவர்களது பேராசைக்கும், சிறுவர் துஷ்பிரயோகத்துக்குமாக இரண்டு வித தீர்ப்பும் தண்டனையும் உண்டு.

சிறுவர்களுக்கு இடறலாய் இருப்போருக்கான தண்டனை உடனடியானது, கடுமையானது அவர்கள் கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி ஆழ்கடலில் தள்ளப்படுவார்கள்.

அடுத்தது, இறையரசைத்தேடி அதை நோக்கி நடப்போருக்கும் அழைக்கப்பட்டவர்களுக்கும்கூட ஆபத்துகள் உண்டு. உலக இச்சைகள் அவர்களுள் புகுந்து அவர்களை அழித்துவிடும். எனவே, அவர்கள் கண் இடறலாய் இருந்தால் பிடுங்கி எறிய வேண்டிய, கை, கால் இடறலாய் இருந்தால் வெட்டி எறிய வேண்டிய நிலைக்கு உள்ளாகாதவாறு "புலன் விரதத்தை" கடைப்பிடிக்க வேண்டும்.

அழைக்கப்பட்டவர்களுக்கு பெரும் ஆபத்து உண்டு. அவர்களும் நரக தண்டனைக்கு முகம் கொடுக்க வேண்டும். அவர்களும் இவ்வுலக இச்சைகளுக்கு இரையாகலாம். இவர்களுக்கு இறுதிக்காலம் பெரும் சவாலாக அமையும். அவர்கள் விழித்திருந்து செபிக்க வேண்டும். உலகில் நடைபெறும் எல்லாமே ஒரு அடையாளமாகவும் எச்சரிக்கை யாகவும் மாறும்.

பெரியவர்கள், பெரும் வியாபாரிகள், வாழ்வின் இன்பங்களை அனுபவிப்போரே எச்சரிக்கையின் அடையாளங்களாகின்றனர். ஊனமுற்றோர், குருடர், சிறப்பாக சிறுவர் நமக்கு மாபெரும் செய்தியைத் தருகின்றனர். இன்றைய உலகில் அவர்கள்தான் அதிகரித்துக்கொண்டு வருகின்றனர். அவர்கள்தான் இறையரசின் அடையாளங்களாகவும், உரிமையாளர்களாகவும் ஆகின்றனர். பேராசையும் பற்றுக்களும் நிறைந்தவர்கள் பலவிதமான இன்னல்கள் துன்பங்களுக்கு உள்ளாகும் அதேவேளை, பற்றற்றவர்களோ நிறைவோடும் மகிழ்வோடும் வாழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 27ம் வாரம்

**ஆதி 2:18-24; எபி 2:9-11; மாற் 10:2-16**

**கருப்பொருள் :** கிறிஸ்தவ வாழ்வில் திருமணம் ஒரு முறியாத உறவாகவும் உடன்படிக்கையாகவும் திகழ் கின்றது.

**1ம் வாசகம் :** இருவரும் ஒரே மாமிசமாய் இருப்பார்கள்.

**2ம் வாசகம் :** பரிசுத்தமாக்குபவர், பரிசுத்தமாக்கப்படுபவர்கள் அனைவருக்கும் உயிர் முதல் ஒன்றே.

**நற்செய்தி வாசகம் :** கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்.

இன்று குடும்பங்கள் முற்றுகையிடப்பட்ட நகரங்கள் போல் இருக்கின்றன. ஏனெனில், அவை சுய நலத்தினால் சூழப்பட்டிருக்கின்றன. குடும்பம் அடிப்படையாக தெய்வீக அணு என்பதை மனிதன் முற்றாக மறந்து விட்டான். இந்த அடிப்படை அணுவானது இறைவனின் அன்பையும் ஒளியையும் பிரதிபலிக்க வேண்டும். இன்று மனிதன் குடும்பத்தின் மட்டிலுள்ள இறை திட்டத்தை நிராகரித்துவிட்டான். இறைவனை இழந்துவிட்ட, மனித வசதிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒன்றாகவே குடும்பம் மாறுகின்றது. இந்நிலையில் சுய இன்பம், தனிநபர் நிறைவு இவற்றைப்பற்றியே மனிதர் கவலைப்படுகின்றனர்.

மூவொரு கடவுளின் வாழ்வை, அவரது தியாகம் நிறைந்த அன்பைப் பிரதிபலிப்பதே குடும்பம், ஆனால், மனிதனோ குடும்பத்தின் அப்போஸ்தலத்துவத்தை மறந்துவிட்டான். இவ்வித அப்போஸ்தலிக்க அழைப்பு தாழ்ச்சியை வேண்டி நிற்கும் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய தம்பதிகள், முதல் பெற்றோர் போன்று கடவுளைப் போல் ஆக செல்வக் குவிப்பிலும் செல்வச் செழிப்பிலும் கண்ணாயிருப்பதால் அங்கே அதிகாரப்பற்று தலை தூக்குகின்றது. கணவன் மனைவிக்கிடையே, பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே குடும்பங்கள் அயலவருக்கிடையே அதிகாரப் போட்டிகள்; மற்றவர்களைவிட தாம் நன்றாக இருக்க வேண்டுமென்ற போட்டி; எமது பிள்ளைகள் மிகச் சிறந்த கல்லூரிகளுக்கு, வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்ற பேராசை. எனவே, நவீன உலகில் தேவையற்ற பல போட்டிகள் நிறைந்து காணப்படுகின்றன. திருமணமும் பல அருட் சாதனங்களும் வெளி ஆடம்பரமாகவே போய்விடுகின்றன. அலகை குடும்பங்களுக்குள்ளே தவறான விழுமியங்களைப் புகுத்துகின்றது. இவ்விதமாக போட்டாபோட்டிகள், பிறழ்வுகள், மகிழ்ச்சியற்ற வாழ்வு என்பனவற்றை குடும்பங்களுக்குள் நாம் காண்கின்றோம். அக் குடும்பங்களின் பிள்ளைகளும் அதே தவறான விழுமியங்களையே கற்றுக் கொள்கின்றனர். இறைவனின் அன்பையும் ஒளியையும் அனுபவிப்பதற்குப் பதிலாக வெறும் சத்திரங்கள்போல குடும்பங்கள் மாறிவிடுகின்றன. குடும்ப உணவின் இடம், வெறும் உணவகங்கள் போலும், குடும்பம் வாழும் இடம் டிஸ்கோ, தொலைக்காட்சி அறைகளாகவும் மாறிவிடுகின்றன. இவற்றின் விளைவு? கருச்சிதைவு, பிரிந்த குடும்பங்கள், பல்வேறு நோய்கள் என்பன. உருக்குலைந்த இக் குடும்பங்கள் பாதிக்கப்பட்ட சிறுவர்களை, ஆயுதம் ஏந்தும் குழந்தைகளை உருவாக்கி விடுகின்றன.

இத்தகைய பின்புலத்தில் திருமணத்தின் ஆரம்ப நிலைக்கு நாம் சென்று, இன்ப நுகர்வை நிறுத்தி நற்செய்தி ஒளிக்கும் வழிக்கும் நாம் திரும்ப வேண்டும். குடும்பங்களை மீண்டும் இயேசுவின் திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுத்து இறை அன்பு எனும் பீடத்தில் வாழ்வைக் கட்ட வேண்டும். இன்று நாம் குடும்பங்களோடு சிலுவையின் மலையை நோக்கிப் பயணிக்கவேண்டும். இவ்வாறு அனைவரும் உருமாற்றத்தைக் காண்பித்து மகிமையை வெளிப்படுத்தும் மலை உச்சிக்கு வந்து சேர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம்
# 28ம் வாரம்

**சா.ஞா 7:7-11; எபி 4:12-13; மாற் 10:17-30**

**கருப்பொருள் :** உலக செல்வங்களில் வைக்கும் பற்று இறையரசை அடைவதற்குத் தடையாயுள்ளது.

**1ம் வாசகம் :** ஞானத்தோடு ஒப்பிட்டால் செல்வப் பெருக்கு ஒன்றுமேயில்லை எனக் கருதினேன்.

**2ம் வாசகம் :** கடவுளின் வார்த்தை உள்ளத்தின் கருத்துக்களையும் எண்ணங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது.

**நற்செய்தி வாசகம் :** உனக்குள்ளதெல்லாம் விற்று, என்னைப் பின்செல்

இரண்டு பிரச்சினைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. எவருமே சாக விரும்புவதில்லை; வாழவே விரும்புகின்றனர். எனவே, இவ்வாழ்வில் நல்லவற்றை விரும்புகின்றனர். ஆனால், எப்படியோ, நம் வாழ்வில் சாவின் வித்துக்களை எமது சிந்தனை, சொல், செயலால் விதைக்கின்றோம். இது எமது இயல்பின் ஒரு பகுதியாக இருக்கின்றது.

நாம் அனைவரும் சாவுக்கு உட்பட்டவர்கள் என்பதை உணருகிறோம். இந்தச் சாவுபற்றிய சிக்கலில், சிலர் நித்திய வாழ்வைத் தேடுகிறார்கள். நித்திய வாழ்வுக்கான வழி பத்துக் கற்பனைகள் மூலமாகக் காட்டப்படுகின்றது. இத்தேடலை எல்லாச் சமயங்களிலும் வெவ்வேறு வடிவங்களில் காணமுடியும். நற்செய்தி காட்டும் இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணக்கார வாலிபனும், இந்த நித்திய வாழ்வையே தேடுகின்றான். இத்தேடலுக்கு ஞானம் தேவை. உலக ஞானமோ நமது சாவுக்கே வழிவகுக்கின்றது.

பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் ஞானத்தைப் பின்பற்றும் வாலிபனை இயேசு சந்திக்கின்றார். நித்திய வாழ்வுக்கான வழியைக் காட்டும் பத்துக் கற்பனைகளை அனுசரித்திருக்கின்றீரா? என்று கேட்கின்றார். அதற்கு அந்த வாலிபன் "போதகரே, இவை அனைத்தையும் நான் என் இளமையிலிருந்து கடைப்பிடித்து வந்துள்ளேன்" என்று கூறுகின்றான். பழைய ஏற்பாட்டின் சட்டங்கள் அனைத்தும் நித்திய வாழ்வுக்கு இட்டுச்செல்கின்றன. நிறை வாழ்வுக்கான மனித தேடல் இறப்போடு நின்று விடுகின்றது. இறைவார்த்தை மனிதனின் உள்ளத்தை ஊடுருவுகிறது. இக்கட்டத்தில்தான் இரண்டாம் பரிமாணம் ஆரம்பமாகின்றது.

எல்லா கிறிஸ்தவர்களும் தம் உடைமையெல்லாம் விட்டு விட்டு கிறிஸ்துவை பின்செல்லக் கட்டாயப்படுத்தப்படவில்லை. கிறிஸ்துவுக்காக ஏழ்மையை ஏற்பது ஒரு கட்டளையல்ல, ஆலோசனையே என்பதை புனித மத்தேயு தமது நற்செய்தியில் தெளிவாகக் காட்டுகின்றார். "நீ நிறைவு பெற விரும்பினால்...." என்று ஏழ்மையை ஏற்பவரின் விருப்பம் கோரப்படுகிறது (மத் 19:21). கிறிஸ்துவுக்காக அனைத்தையும் துறந்து விடுவது "மனிதரால் முடியாதது"(மாற் 10:27). இறைவனிடமிருந்து சிறப்பான அழைப்புப் பெற்றவருக்கே இது இயலும். "கடவுளால் எல்லாம் முடியும்" (மாற் 10:27). இருப்பினும் அனைத்துக் கிறிஸ்தவர்களும் உலக செல்வத்தின் மட்டில் எத்தகைய மனப்பான்மையைக் கொண்டிருத்தல் வேண்டுமென இயேசு தெளிவாகக் கட்டளை கூறுகின்றார்.

"பொருட் செல்வம்தான் எல்லாம்" என்ற மனப்பான்மையோடு பலர் வாழ்கின்றனர். ஆனால், விவிலியமோ "மண்ணுலகில் செல்வம் சேர்த்து வைக்க வேண்டாம்..." (மத் 6: 19-20). எனவே, அழிந்துபோகும் பொருட்செல்வத்தைவிட அழியாத அருட்செல்வம் சிறந்தது என்ற மனப்பான்மை நம்மில் உருவாகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்செல்வத்தை ஈட்டுவதில் அருட்செல்வத்தை இழந்து விடக்கூடாது. பொருட்செல்வம் நம் வாழ்வில் உண்டாக்கும் பல வகையான பற்றுக்களினால் அருட்செல்வத்தை அடைய அது தடையாக இருக்கின்றது. அருட்செல்வத்தைப் பெற பொருட்செல்வத்தை நாம் கருவியாகப் பயன்படுத்த வேண்டும் என்று இயேசு கூறுகின்றார். "உனக்கு உள்ளதெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடு. வானகத்தில் உனக்கு செல்வம் கிடைக்கும்" என்று இயேசு உறுதியளிக்கிறார் (மாற் 10:21). பொருட்செல்வத்தின் மட்டில் இயேசுவின் சீடர்கள் அனைவருமே பற்றற்றவர்களாக வாழவேண்டும் என்ற மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள இயேசு அழைக்கின்றார்.

மனித சமூகத்தில் ஒவ்வொரு மனிதனும் ஒரு பகுதியாக இருப்பதால், இயல்பாகவே மனிதன் சமூக உணர்வுகள் உள்ளவனாகவும், நட்புறவுடன் உறவாடும் சக்தி கொண்டவனாகவும் உள்ளான். இதனால் ஒரே மனிதன் வழியாக அனைத்து மனிதர்களும் உறவு கொள்ள வேண்டுமென கடவுள் விரும்பினார். ஏனெனில், மனித இனம் என்ற உணர்வில் மட்டுமல்லாது ஒரே இரத்த உறவிலும், மனிதர்கள் அனைவரும் இந்த சமூகத்தில் ஒற்றுமையுடன் வாழ வேுண்டுமென இறைவன் விரும்பினான் என்று கூறுகின்றார் புனித அகுஸ்தீனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 29ம் வாரம்

**எசா 53:10-11; எபி 4:14-16; மாற் 10:35-45**

**கருப்பொருள் :** துன்பத்தின் மத்தியிலும் நாம் இறைவனுக்குப் பணி புரிய அழைக்கப்படுகின்றோம்.

1ம் வாசகம் : பாவத்திற்காக அவர் தம்மையே பலியாக்கி னால் நீடுவாழும் சந்ததியைக் காண்பார்.

2ம் வாசகம் : இறையருளின் அரியணையை அணுகிச் செல்லத் துணிவோமாக.

நற்செய்தி வாசகம் : மனுமகன் பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்க வந்தார்.

இன்றைய நற்செய்தியில் இயேசு தான் பருகும் பாத்திரம் பற்றியும், தன் சீடர்கள் பருகப்போகும் பாத்திரம்பற்றியும் கூறுகின்றார். "பாத்திரமென்பது" நமது இதயம், வாழ்வு என்பவற்றைக் குறிக்கின்றது. இவை இறைவனாலேயே நிரப்பப்படவேண்டும் என்பதைத்தான் இயேசு குறிப்பிடுகிறார். ஆனால், இயேசுவின் சீடரும், இன்று இயேசுவைத் தேடுவோரும் இப்பாத்திரத்தை நம்மை எளிதில் மயக்கும் அதிகாரம், பணம், உடல் இன்பம் என்பவற்றாலேயே நிரப்ப விரும்புகின்றோம்.

எவற்றால் எம் வாழ்வை, இதயத்தை நிரப்பிக் கொண்டிருக் கின்றோம்? நிரப்ப ஆசைப்படுகின்றோம்? என்று ஆழமாகச் சிந்திக்கவே இயேசு நம்மை அழைக்கின்றார். உதாரணமாக சிறுவர் இனிப்புப் பண்டங்களையே விரும்புவர். ஆனால், அனுபவமுள்ள, அக்கறையுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிள்ளையின் தாயோ பிள்ளையின் வளர்ச்சிக்கு எது தேவையோ அதையே கொடுத்து வளர்ப்பாள். அதேபோன்றுதான் நம்மில் பலர் நமக்கு உடன் திருப்தி தருபவற்றையே தேடுகிறோம். இவற்றாலேயே நம் வாழ்வை நிரப்புகின்றோம். ஆனால், இறைவனோ நம் வாழ்வுக்கு எது அவசியமோ அவற்றாலேயே நம்மை நிரப்புகின்றார்.

இவ்வாறு நம் வாழ்வுக்கு அவசியமானவற்றால் நாம் நிரப்பப்படும் போது நமது வாழ்வில் வளர்ச்சி ஏற்படுகிறது. எங்கே போகின்றோம் என்பதும் தெளிவாகின்றது. எமது இலக்கை, குறிக்கோளை அடைய நமது அனுபவம் சுவையானதாக மாறுகின்றது; நிறைவு தருவதாக உணருகின்றோம். உதாரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புறப்படும் நாம் கொழும்புக்கு அண்மித்துள்ள இடங்கள் நெருங்க நெருங்க எமது மனத்திலும் ஒரு நிறைவு ஏற்படுகிறது.

எசாயா குறிப்பிடும் துன்புறும் ஊழியனுக்கு இது தான் நடந்தது. திருமுகம் குறிப்பிடும் தலமைக்குருவாகிய இயேசுவுக்கும் இவ்வாறுதான் நிகழ்ந்தது. அதாவது, இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுவதை அவர் தன் வாழ்வில் உணர்ந்தார். இதனால் அவர் இறைவனுக்கு அண்மையில் இருப்பதாக உணர்ந்தார். இது அவருக்கு நிறைவளித்தது; மகிழ்ச்சியளித்தது. இயேசுவின் சீடராகிய நாமும் இறைவனின் விருப்பத்தையே நிறைவேற்றி, அவரால் நிரப்பப்பட்டுக்கொண்டு வருவோமானால் உண்மையான நிறைவு, மகிழ்ச்சியில் திளைத்து நிற்போம்.

இறைவன் நம் வாழ்வுக்கு அவசியம் என எண்ணினால், அவர் நம்மை நிரப்பவேண்டும் என விரும்பினால் முதலில் நம்மை நாம் வெறுமையாக்க வேண்டும். உதாரணமாக குப்பை கூழம் நிறைந்த பாழுங்கிணற்றில் நாம் நன்னீரை எடுக்கவேண்டுமென்றால் முதலில் அங்கேயிருக்கும் குப்பை கூழங்களை வெளியேற்ற வேண்டும். அப்பொழுதுதான் அங்கிருந்து ஊற்றெடுக்கும் நன்னீரைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் இறைவன் நம் வாழ்வை நிரப்ப நாம் அனுமதிப்பதில்லை, ஏனென்றால் முதலில் நம்மை வெறுமையாக்க நாம் பயப்படுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவில் பெறும் திருமுழுக்கு என்பது இதுதான். அவரது கொடைகளால் நிரப்படுவது; அவர் தரும் வாழ்வை வாழுவது. அத்தகைய ஒரு வாழ்வை வாழும்போது மனித இயல்பு, ஈர்ப்பு, மேலோட்டமான உணர்வுகள், பணம், பதவி, உடல்இன்பம் என்பவற்றிக்கு அடிமையாகாது வாழ்வோம்.

நாம் எல்லோரும் நமது வாழ்வை மகிழ்வாக, நிறைவாக வாழவே விரும்புகின்றோம். ஆனால், எவற்றால் நம் வாழ்வை நிரப்பிக்கொண்டிருக்கின்றோம்? எது என் வாழ்வுக்கு அவசியமானது? என்ற கேள்வியை அடிக்கடி கேட்க வேண்டும். எது இறைவனின் விருப்பம் என்பதை உணர்ந்து அவருக்கு நம்மை அர்ப்பணிக்கும் போதுதான் வாழ்விலே நிறைவு ஏற்படும் - மகிழ்ச்சி ஏற்படும்.

"மனதில் உறுதி வேண்டும்!
வாக்கினில் இனிமை வேண்டும்;
நினைவில் நல்லவை வேண்டும்;
நெருங்கின் பொருள் கைப்பட வேண்டும்;
உண்மை நின்றிட வேண்டும்"

(பாரதியார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 30ம் வாரம்

**எரே 3:7-9; எபி 5:1-6; மாற் 10:46-52**

**கருப்பொருள் :** விசுவாசக் கண்ணோடு இறைவனின் அரும் பெரும் செயல்களுக்காய் அவரைப் போற்று வோம்.

1ம் வாசகம் : நாம் குருடரையும் முடவரையும் இரக்கத்தோடு மீட்டு வருவோம்.

2ம் வாசகம் : மெல்கிசதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவாயிருக்கிறீர்.

நற்செய்தி வாசகம் : ராபூணி, நான் பார்வை பெற வேண்டும்.

ஜெருசலேமுக்கு அடுத்த பெரிய நகரம் எரிக்கோ. ஏழைகள் மட்டில் எவ்வித இரக்கமுமற்ற அரக்கர்கள் நிறைந்ததும் ஏராளமான வீதிகளைக் கொண்டதுமான இடம். நல்ல சமாரித்தன் உவமையில் இது தெளிவாகிறது.

இத்தகைய பாதையோரத்தில்தான் பார்த்திமேயு உட்கார்ந்திருக் கிறான். பார்த்திமேயு என்பது திமேயுவின் மகன் என்று பொருள்படும். அவனுக்குச் சொந்தப் பெயரே கிடையாது; சுய அடையாளமே இல்லாதவன்.

இயேசு அழைத்ததும் தன் போர்வையைக் கழற்றி விடுகின்றான். அப்போர்வை அவமானத்தின், ஒதுக்கப்பட்டவர்களின் அடையாளம். இயேசு கருணை காட்டத் தொடங்கியதும் எமது அவமானத்தின் அடையாளங்கள் களைந்தெறியப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு அவனிடம் என்ன வேண்டுமென்று கேட்கிறார். "நான் பார்வை பெற வேண்டும்" என்று அவன் பதிலளிக்கின்றான். அவன் செபத்தில் தெளிவு இருக்கிறது. நாம் செபிக்கும் போது எமது செபத்தில் இத்தகைய தெளிவு இருகின்றதா? அத்துடன் இயேசு அவனுக்கு ஒரு பணியைக் கொடுக்கின்றார்; தனது சீடனாக்குகின்றார். இயேசு தொடும் ஒவ்வொரு உள்ளத்துக்கும் ஒரு பணியைக் கொடுக்கின்றார். எம்முள் பலரது உள்ளங்களை இயேசு தொட்டிருக்கின்றார். ஆனால், நாமோ என்ன செய்வதென்று தெரியாதவர்களாய் இருக்கின்றோம்

நாம் தொடர் தேடலிலும் ஆண்டவருக்காகக் காத்திருப்பதிலும் ஈடுபடவேண்டும். அடி ஆழத்தேடலில் பயன் அடைந்தவர்களையே ஆன்றோர், புனிதர் என்று அழைக்கின்றோம். உள் மனத் தேடலில் அவர்கள் தங்களையும் உடன் உறையும் பிறரையும் கடவுளையும் உணர்ந்தனர். அனைவருக்குள்ளும் தங்கியிருக்கும் தன்மையை அவர்கள் ஏற்பர். துன்புறுவோரிடம் இரக்கமும் அக்கறையும் கொண்டிருப்பர். ஆழம் ஆழத்தை ஈர்க்கிறது. அவரே என் கடவுள் அவரை அடையும்வரை எனக்கு அமைதி இல்லை. அவர் தொட்டால், என் இதய ஏக்கங்கள் தொலையும்! அவர் என்னில் இருந்ததாக நான் உணர்ந்த அரிய நேரங்களை என் வாழ்வின் அளவிட முடியாத செல்வங்களாகப் போற்றுகின்றேன்.

**காத்திருத்தல்** : காத்திருப்பது அலுப்புத் தருகிறது. ஆத்திரமூட்டுகிறது, களைப்பு உண்டாகுகின்றது. வெறுமையை விளைவிக்கிறது. இதனால்தான் அன்றோர் பொறுமை கடலிலும் பெரிது என்றார்கள்.

காத்திருப்பதால் விளையும் நன்மைகள் பலவும் மறைநூலில் காட்டப்படுகின்றன. மரபை விளங்கவைக்க மகனுக்காக ஆபிரகாம் காத்திருந்தார். மோசேயும் இஸ்ராயேல் மக்களும் ஆண்டவர் வாக்களித்த நாட்டுக்காக அலைந்து திரிந்து காத்திருந்தனர். வானம் மெசியாவைப் பொழிய யூதர்கள் காத்திருந்தனர். வருந்தித் துன்பங்களை தாங்கும் வலிமையையும் பொறுத்திருக்கத் தூண்டும் மனத்தையும் அவர்களிடம் இருத்தி வைத்திருந்தது மெசியாவுக்கான அந்த ஏக்கமே. காத்திருத்தல் என்பது ஆன்மீக வாழ்வின் வெற்றிப்படி " காத்திருப்பதே நம் மீட்புக்கான முதல் தேவை. கிறிஸ்தவ வாழ்வின் ஆதாரமும் அடிப்படையும் அதுவே" இந்த நம்பிக்கையுடன் காத்திருந்து வழிபடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம்
# 31ம் வாரம்

**எரே 3:7-9; எபி 7:23-28; மாற் 12:28-34**

**கருப்பொருள் :** சட்டங்களை எல்லாம் கடந்து நிற்பது காதல்

**1ம் வாசகம் :** இஸ்ராயேலே, உற்றுக்கேள்; உன் முழு இதயத்தோடு ஆண்டவருக்கு அன்பு செய்வாயாக

**2ம் வாசகம் :** இவர் என்றென்றும் நிலைத்திருப்பதால், மாறாத குருத்துவத்தைப் பெற்றிருக்கிறார்.

**நற்செய்தி வாசகம் :** இதுவே முதற்கட்டளை; இரண்டாம் கட்டளை இதற்கு ஒப்பானது.

மறைநூல் அறிஞரான ஒரு மனிதனின் நிலையை இன்றைய நற்செய்தி எடுத்துக்காட்டுகின்றது. அவர் சமய வாழ்வை முழுமையாக அனுசரித்த ஒருவர். சட்டம், அதன் நுணுக்கங்களை அறிந்து அனுசரித்தவருக்கு இணைச்சட்ட நூல் "ஆண்டவர் கட்டளையிட்ட எல்லா நியமங்களையும் கட்டளைகளையும் உங்கள் வாழ் நாளெல்லாம் கடைப் பிடிப்பீர்களாக! இதனால் நீங்கள் நெடுநாழ் வாழ்வீர்கள" என்று கூறுகின்றது. சட்டம் எவ்வாறு வாழ்வைக் கொடுக்க முடியும்? வாழ்வை நீடிக்க முடியும்? என்ற குழப்ப நிலை அவருக்கு ஏற்படுகின்றது. இந்நிலையில்தான் இயேசுவிடம் எல்லாவற்றிலும் முதன்மையான கட்டளை எது? என்று கேட்கின்றார். இயேசுவும் அதே இணைச்சட்ட நூலிலிருந்தே பதிலளிக்கின்றார். இணைச்சட்ட நூல் யாவேக்கும் மக்களுக்குமிடையே உள்ள உடன்படிக்கையின் நூலாகும். அன்புறவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் நிறைவும் இவற்றை விளக்கும் சட்டமும் ஒழுங்கும்தான் அங்கே விளக்கப்படுகின்றன.

ஆனால், காலப்போக்கில் சட்டமும் ஒழுங்கும் அவற்றின் அடிப்படை, நோக்கம், அர்த்தங்களை இழந்து சட்டம், சட்டத்தின் உப சட்டங்கள் என்று பெருகிக் கிடந்தன. எவ்வளவுக்கு பெருகிக் கிடந்தனவென்றால், ஒருவன் எவ்வளவு பிரமாணிக்கமாய் வாழ்ந்தாலும் ஏதோ ஒரு சட்டத்தை மீறுபவனாக, ஏதோ ஒரு சட்டத்தில் சிக்குபவனாக இருந்தான். சமய சட்டமே மனிதனுக்கு பெரும் சுமையாக மாறியது.

ஏற்கனவே மக்கள் அரசியல் அடிமைகளாக அவர்களிடமிருந்து அறவிடப்பட்ட அளவு மீறிய வரிகளினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். பொருளாதார நிலையிலும் வாழ்வு அவர்களுக்கு பெரும் சுமையாகவே இருந்தது. எப்பொழுது இந்த அடிமைத்தன வாழ்வு நீங்கி சுதந்திரமாக நாம் வாழ்வோம் என்னும் ஏக்கம் அவர்களது உள்ளங்களை நிரப்பிக்கொண்டிருந்தது. அத்துடன் சமயமும் சேர்ந்து இந்த ஏழைகளை நசுக்கியது. இவையனைத்திலிருந்தும் விடுவிப்பதற்காகத்தான் இயேசு வந்து "பெரும் சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்கிறார் (மத் 11:28). இயேசு நமக்கு ஆன்மீக விடுதலையை மட்டும் தர வரவில்லை. ஒரு முழு மனித விடுதலையையே தர வந்தார். சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார, சமய வாழ்க்கை நிலைகளிலும் நமக்கு விடுதலையைத் தர வந்தார். இதனால்தான் இன்றைய இரண்டாம் வாசகம் இயேசு நாம் தவறிழைக்கும் பொழுதெல்லாம் நம்மைப் புரிந்து கொள்ளும், நமக்காகப் பரிந்து பேசும் தலைமைக் குருவாக இருக்கின்றார் என்று கூறுகின்றது.

இப்படிப்பட்ட ஒரு முழு மனித விடுதலை இயக்கமாகத்தான் கிறிஸ்தவத்தை இயேசு ஆரம்பித்தார். கிணறு தோண்டப் பூதம் புறப்பட்டது போல, இயேசு ஆரம்பித்த திருச்சபை காலப்போக்கிலே நிறுவனமயமாக்கப்பட்டு அங்கே வெற்றுச் சடங்குகளும், வெறுமையான சட்டங்களும் இடம் பெறத்தொடங்கின. இப்படிப்பட்ட நிலையிலே கிறிஸ்தவம் புதுப்பிக்கப்பட வேண்டுமென்றால் அதன் ஊற்றுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அடிப்படைக்குச் சென்று விமர்சனக் கண்ணோட்டத்தோடும் இதய சுத்தியோடும் தன்னைப்பற்றி ஆராய்வது அவசியம். அப்பொழுதுதான் வாழ்வுக்கு வேண்டிய வலிமை, சக்தி, ஊக்கத்தைப் பெறும் ஊற்றாக சமயம் விளங்கும்.

பலருக்கு இன்று சமயம் பெரும் சுமையாக மாறிவிட்ட நிலையில், ஒவ்வொரு அருட்சாதனமும் ஒரு விடுதலைக் கொண்டாட்டம் என்பதை மக்கள் மனத்திலே ஆழமாகப் பதிக்கவேண்டும். அவை இறைவனின் அன்பைச் சுவைக்கும் இடம் என்பதை அவர்களுக்கு உணர்த்தவேண்டும். கிறிஸ்தவ வாழ்வு என்பது இறைவார்த்தையால் ஆறுதலும் வழிநடத்தலும் பெற்று முழு மனித விடுதலை பெறும் வாழ்வு. அன்பினால் நிரப்பப்பெறும் வாழ்வுதான் கிறிஸ்தவம் என்பதை உணர வேண்டும். இத்தகைய அன்பினால் நிறைந்து விடுதலை பெற்ற நாம் இதே அன்பையும் விடுதலை உணர்வையும் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் எம் சகோதர சகோதரிகளுக்குக் கொடுக்க வேண்டும்.

"மாண்டுபோன பழக்கவழக்கப்
பாலைவனத்திலே
தெள்ளிய சிந்தனை ஆறு
எங்கே சிந்தையும் செயலும் உயர்ந்து
எங்கே விரிந்து பரவிடுமோ
அந்தச் சுதந்திர சொர்க்கத்தில்
என் தந்தையே
என் தேசம் விழிக்கட்டும்...!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் பொதுக்காலம் 32ம் வாரம்

**1அர 17:10-16; எபி 9:24-28; மாற் 12:38-44**

**கருப்பொருள் :** தன்னைப் பிறருக்குப் பகிர்ந்தளிப்பதே உண்மையான தாராள குணம்.

**1ம் வாசகம் :** விதவை, மாவினால் ஒரு சிறிய அப்பம் சுட்டு எலியாசுக்குக் கொண்டு வந்தாள்.

**2ம் வாசகம் :** எல்லோர் பாவங்களைப் போக்க கிறிஸ்து ஒரே முறையில் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்.

**நற்செய்தி வாசகம் :** எல்லாரிலும் இக் கைம்பெண்ணே அதிகம் போட்டாள்.

எலியா இறையரசின் இறைவாக்கினர். இஸ்ராயேலின் இறையரசில் யாவேதான் அரசன். மற்ற அனைவரும் அரசர்களுக்கெல்லாம் அரசனாகிய யாவேக்கு வல்லமையற்ற கருவிகள். ஆகாப் மன்னன் யாவேயையும் அவரது வழிபாடுகளையும் நிராகரித்துவிட்டு, பல தெய்வ வழிபாட்டை ஆரம்பித்தபோது, யாவே எலியா எனும் எளிய மனிதனைத் தேர்ந்தெடுத்தார். ஆகாப்பும், அவர் மனைவியும், படைவீரரும் அதிகார பலத்தோடு இருந்தபோது பஞ்சத்தினால் நாட்டை வருத்தினார். 81ஆம் சங்கீதம் கூறுவது போன்று மனிதன் ஒரு சிறு மூச்சே. இதை யாவே ஆகாப்புக்கும் அவனது மனிதருக்கும் நிருபித்துக் காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியா பாலைவனத்தில் அலைந்து திரிந்தார். அவரைப் போசித்த இறைவார்த்தைதான் அவருக்கு வல்லமையும், பலமுமாக இருந்தது. இறையரசு மனித வல்லமையாலல்ல, எளிய மனிதர் மூலம் போதிக்கப் படுகின்ற இறை வார்த்தையாலேயே கட்டியெழுப்பப்படுகின்றது. இறை பணியாளர்களும் அவர்களோடு சேர்ந்தவர்களும் வல்லமையில் எளிய மனிதர்கள்தான். தனது உணவுக்காக விறகுபொறுக்கிக் கொண்டிருந்த விதவை இதற்கு ஒரு சிறந்த உதாரணம்.

இயேசுவும் தனது சீடரின் கவனத்தை செப்புக் காசு போட்ட விதவையின் மட்டில் திருப்புகிறார். ஏனெனில், இறையரசின் எந்தச் சீடரும் பணமோ, கைப்பையோ, மேலதிக உடையோ எதுவும் எடுத்துச் செல்ல வேண்டாமென்று தடுக்கப்படுகின்றார்கள். இவர்கள் ஏழைகளாகத் திரிந்து நற்செய்தியைப் பரப்பப் பணிக்கப்படுகின்றார்கள். இந்த இரண்டு விதவைகளும் இன்றைய இறையரசுக்கு எடுத்துக் காட்டாக இருக்கின் றார்கள். யாழ். திருச்சபையும் உலக பலத்தாலல்ல, பெரும் நிறுவனங்க ளாலல்ல, இறையரசின் எளியவர்கள், வல்லமையற்றவர்களாலேயே கட்டியெழுப்பப்படும். நாமும் எமது வாழ்வில் எளிமையைக் கடைப்பிடிப் போமாக.

"வாய்மையே வெல்லுமடா - நேர்
வழியே நாமும் செல்வோமடா
நேர்மையும் நீதியும் நிமிர வைக்கும்
நிலையினிலே நம்மை உயரவைக்கும்
நேருக்கு நேர் உண்மை பேசவைக்கும்... !
போகும் பாதையில் மறவாதே - உன்
பொறுப்பை சிறிதும் குறைக்காதே
விவேகத்தை மட்டும் இழக்காதே... !

(மருதகாசி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரின் பொதுக்காலம் 33ம் வாரம்

**தானி 12:1-3; எபி 10:11-14,18; மாற் 13:24-32**

**கருப்பொருள் :** ஆண்டவரின் நாளை எதிர்பார்த்து விழிப்புடன் நாம் ஆயத்தம் செய்ய வேண்டும்.

1ம் வாசகம் : அக்காலத்தில் உன் இனத்தார் தப்பித்துக் கொள்வர்

2ம் வாசகம் : தாம் பரிசுத்தமாக்கியவர்களை ஒரே பலியினால் என்றென்றைக்கும் நிறையுள்ளவர்களாக்கினார்.

நற்செய்தி வாசகம் : தாம் தெரிந்து கொண்டவர்களை நாற்றிசையிலுமிருந்து திரட்டுவார்.

இன்றைய வழிபாடு 3 முக்கிய அம்சங்களைக் காட்டுகின்றது

1) மிக்கேலும் புத்தகங்களும்
2) மனுமகனும் மேகங்களும்
3) அத்திமரம்

முதல் இரு உருவகங்களும் பயங்கரமானவை. மிக்கேல் விண்ணகப் போரை நினைவூட்டுகின்றார். இக்காலம் இடைவெளியின்றிப் போர் தொடருகின்ற காலம். இப்படியான போர்க்காலத்தில் நாம் வித்தியாசமான உண்மைகளைக் காண்கிறோம். மக்கள் சாதாரண ஒழுங்குகள் சட்டங்களின்படி வாழ்கின்றவர்களாயில்லை. பயங்கர ஒழுங்கீனங்களுக்கு உட்பட்டவர்களாய் வாழ்கின்றனர். அதன் விளைவு என்னவென்றால், வாழ்க்கையில் முன்பு எப்போதும் இல்லாதவாறு குழப்பமும் அங்காலாய்ப்பும் நிறைந்து காணப்படுகின்றன. இப்படியான நேரத்தில் எமக்காகப் பரிந்து பேசும் தலைமைக் குருவுக்காகக் காத்திருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, எமது நிலை அங்கலாய்ப்பும் நம்பிக்கையும் கலந்த ஓர் நிலை. மேகங்கள், மனுமகன் மகிமையோடும் வல்லமையோடும் வருவதைக் காட்டுகின்றது. மூன்றாவது உருவகம் ஆறுதலளிப்பதாக உள்ளது. காய்ந்து கரடுமுரடான பட்டைகளும் அதனூடாக வரும் துளிர்களும் காணப்படுகின்றன. திருவருகைக் காலம் அண்மிப்பதோடு நாம் இக்காலத்தின் கடினத்தை மட்டுமன்றி, துளிர்விடும் மென்மையான துளிர்களையும் கவனிக்க வேண்டும். தூய ஆவி மூலம் புதிய பார்வையைப் பெறவேண்டும்.

உயிர்ப்பு என்பது எதிர்காலத்தை மட்டும் சார்ந்ததன்று. இப்பொழுதே இடம்பெறவேண்டியதொன்று. தனி மனிதனின், சமூகத்தின், உலகின் உயிர்ப்பையும் உருமாற்றத்தையும் முன்னறிவிக்கும் திருச்சபை, அதனை இப்பொழுதே தன் வாழ்வாலும் செயலாலும் துலங்கச் செய்ய வேண்டும். கிறிஸ்துவின் உயிர்ப்பு சீடர்களை திருச்சபையாக ஒன்று கூட்டியது; புது உறவில் நுழைந்தது. இன்று திருச்சபை தன் வாழ்விலும் பணியிலும் உயிர்த்தெழும்பொழுது உலகத்தை தந்தையாகிய கடவுளின் அரசில் ஒன்றுகூட்டலாம், புது உறவை வளர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து அரசர் பெருவிழா

**தானி 7:13-14; திவெ 1:5-8; யோவா 18:33-37**

**கருப்பொருள் :** கிறிஸ்துவை அரசராக எம் உள்ளங்களிலே ஏற்று இறை அரசுக்கு உரியவர்களாய் வாழ்வோம்.

1ம் **வாசகம் :** அவரது ஆட்சி என்றென்றும் நீடிக்கும்

2ம் **வாசகம் :** மண்ணுலக அரசர்களுக்குத் தலைமையானவர்... நம்மை அரசகுல குருக்களாக்கினார்.

**நற்செய்தி வாசகம் :** "அரசன்" என்பது நீர் சொல்லும் வார்த்தை.

இன்று முக்கியமாக நாம் சிந்திக்கவேண்டியது அரசர் பற்றியல்ல, அரசுபற்றியே. அரசர் பற்றிய எண்ணம் பிலாத்துவினால்தான் முன்வைக்கப் படுகிறது. உலக அரசரின் பிரதிநிதியால் முன்வைக்கப்படுகின்ற இவ் எண்ணம் அரசு, நாடு, நகரங்களைப் படையணிகளால் வெல்லுவதுபற்றியும், சட்டம் ஒழுங்குகளால் அமைப்புகளை உண்டாக்கி சமாதானத்தை உருவாக்குவது பற்றியும் கவலைப்படுகின்றது.

முதலில் இராணுவ வெற்றி; அதன்பின் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்துதல்; பின்பு வர்த்தகம் கலாச்சாரத்தை நிலைநாட்டல். 2000 ஆண்டுகளின் பின்பு 3ம் மிலேனியத்தில் இதற்கு ஒப்பான ஒரு நிலையை காலனித்துவத்தின்பின் காண்கின்றோம். இராணுவத்தின் மூலம் யுத்தம், உலக சமாதானம், புதிய கலாச்சாரத்தை அறிவிக்கும் புதிய உலக அமைப்பின் திணிப்பு இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், கிறிஸ்து, பிலாத்துவின் முன் நின்று புதிய உலக அமைப்பை, உலகம் தரமுடியாத புதிய சமாதானத்தை அறிவிக்கிறார். ஏழைகளை, உள்ளத்தில் சாந்தமும் தாழ்ச்சியும் கொண்டவர்களை உள்ளடக்கும் அங்கத்துவத்தை அறிவிக்கிறார். எனவே, இது ஒரு வித்தியாசமான அரசு. இவ் அரசிலே உலகத்தின் மாற்று அரசு அமைப்பதற்கான சவால்கள் இல்லை. புதுவித இராணுவம், புதிய ஒழுங்குகள், உரோமை அரசு கொடுக்கும் புதிய கலாச்சாரத்துக்கு மாற்றான கலாச்சாரத்தை ஏற்படுத்தும் அரசபணியாளர்கள் இல்லை.

அரியணையில் வீற்றிருந்து கொடுங்கையுடன் வரி வசூலிக்கும் அரசன் பற்றி இங்கு சிந்திக்க முடியாது. பதிலாக, ஊதாரி மகனை அன்புடன் வரவேற்கும் அன்புத் தந்தையை, திரும்பி வந்தவர்பற்றி அகமகிழ்ந்து, விருந்தை ஒழுங்கு செய்யும் பாசமிகுந்த தந்தையைப் பார்க்கின்றோம். முற்றும் இலவசமாகக் கொடுக்கப்படும் புதிய வாழ்வு, முழுமையான அருளைப் பார்க்கின்றோம். கிறிஸ்து அறிவிக்கும் இறையரசில் இவற்றையே நாம் காணுகின்றோம். தந்தை ஏற்படுத்தும் இம்மாபெரும் விருந்தை நிராகரிப்பவர்களுக்கான தண்டனையும் கூறப்படுகின்றது. மிகுதி அனைத்துமே இவ்விருந்தை உண்பதற்கான அழைப்பு; இறைவனின் இலவசக் கொடை.

இந்த இறையரசுபற்றித்தான் இந்த ஞாயிறு கூறுகின்றது; அரசன்பற்றியல்ல. கிறிஸ்து இறையரசை அறிவித்து அதற்கு நாம் ஆயத்தம் செய்யவேண்டுமெனக் கூறுகிறார். இறுதியில், இறையரசின் வாசல்களைத் திறக்க இயேசு வருவார். அவரது வருகைக்காக நாம் ஆவலோடு காத்திருக்கிறோம். இதற்கு நாம் இவ்வுலகம் காட்டும் அரசின் கட்டுக்களிலிருந்து நம்மை விடுவிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்பட விளக்கம்

ஊற்றுக்கள் பிறக்கும்போதெல்லாம் அவை பூமியை நனைப்பதுண்டு. அப்போது வார்ந்தோடும் நீர்ச்சுனையின் அருகே பசுமையின் அழகிய வார்ப்பு பள்ளி கொள்கிறது. அது நெஞ்சை அள்ளுகிறது. ஞாயிறு ஒளி முதலின் கீற்றுக்கள் நீர்த்திவலைகளில் சங்கமமாகி, செல்லும் இடங்களிலெல்லாம் உயிர்களைத் தொட்டு, மொட்டவிழ்த்து, பட்டுப்போகா வாழ்வை பரிசளிக்கிறது. இந்த ஞாயிறு மறையுரை எண்ணங்களும் அப்படியே. இறைவார்த்தை, ஆசிரியரின் எண்ணங்களில் கலந்து பொய்மைகளைத் தோலுரித்து மனிதத்தின் ஊற்றுக்களூடாக வாழ்வின் உண்மை அர்த்தங்களை தேடி நனைக்கும் "உயிரூற்றாக" மலர்கின்றன. கலைமான்கள் நீரோடையை ஆர்வமுடன் நாடி நிற்கும் இக்காட்சி இதய தாகத்தின் முன் குறித்தலே. வாருங்கள் நாம் உயிரூற்றாம் இறைவனைப் பருகி தாகம் தணித்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியர்

குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே மதம் - சமூகம் சார் பிரச்சனைகளையும் சீர்கேடுகளையும் சுட்டிக்காட்டி, அவற்றிற்கெதிராகக் குரல் கொடுத்துவரும் இந்நூலின் ஆசிரியரான அருட்பணி மா. றேஜிஸ் இராசநாயகம் அடிகளார், அவற்றைச் சீர்திருத்தி ஆன்மீக வழியில் மனிதத்தை முழுமையாக்கும் ஊடகமாகத் தனது மறையுரைகளையும் - விரிவுரைகளையும் பயன்படுத்திவருபவர். இவரது மறையுரைகள் அனைத்துத் தரப்பினரையும் கவர்ந்து, ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுபவை என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறான பணிப் பயணத்தில் அவரிடமிருந்து எழுந்த சிந்தனைத் துளிகள் சிலவற்றின் தொகுப்பே இந்நூலாகும். நூலாசிரியர் பற்றிய சில தகவல்களை நீங்கள் தெரிந்துகொள்வதற்காகத் தருகின்றோம்.

| | |
|---|---|
| பிறப்பு: | கிளாலி |
| ஆரம்பக் கல்வி: | றோ.க.பாடசாலை, கிளாலி<br>புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் |
| குருத்துவக் கல்வி: | புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரி, திருச்சி |
| கல்வித் தகைமைகள்: | B.Th. Rome<br>M.Th. Pune, India |
| குருத்துவ திருநிலைப்பாடு: | 16.05.1973 |
| பணித்தளங்கள்: | மன்னார், நாரந்தனை, நெடுந்தீவு, கிளிநொச்சி, விடத்தல்தீவு, மு/புதுக்குடியிருப்பு, நாரந்தனை, நல்லாயன் நிலையம், யாழ். பல்கலைக்கழகம், புனித மடுத்தீனார் குருமடம் |
| தற்போதைய பணிகள்: | ஆன்மீக இயக்குநர், புனித மடுத்தீனார் குருமடம், யாழ்ப்பாணம்<br>இறையியல்துறை விரிவுரையாளர், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை |
| ஏனைய வெளியீடுகள்: | இயேசு அன்பின் சமுத்திரம் (தொகுப்பு) 2006<br>வாழ்வின் வேர்களைத்தேடி... 2010<br>உயிரூற்று 1 (2011) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN : 978-955-0284-06-1